DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal;
Kokulan Baskaran Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam Broker / President
416 321 2300
PROPERTY MAX MohanTeam.com
6888-14th Avenue Markham ON. L6B 1A6

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

25 வது வெள்ளி விழா 2021

UTHAYAN
# உதயன்

கீர்த்திக்கும் தமிழ் உலகின் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரம் வெளி இதழ்

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1333 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 22, 2021

# கனடாவில் அமுல் செய்யப்படும் முடக்கங்கள் காரணமாக பாதிக்கப்படுகின்றவர்களுக்காக கனடா தொழிலாளர் வேலை முடக்க நன்மைத்திட்டம் (CWLB) அறிமுகமாகின்றது



கனடாவில் பல்வேறு பகுதிகளில் அமுல் செய்யப்படும் முடக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட தொழில்களில் உள்ள மக்களுக்கு ஒரு புதிய நன்மைத் திட்டத்திற்கு வழிவகை செய்வதற்காக கனடா மீட்புப் பயனை (சிஆர்பி) எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் இரத்து செய்யப்படுவதாக கனடிய மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது இதற்கான உத்தியோகபூர்வமான அறிவிப்பை நேற்று வியாழக்கிழமை, ஒட்டாவா மாநகரில் கனடிய நிதியமைச்சர் கிறிஸ்டினா ப்ரீலாண்ட் மற்றும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூமோ ஆகியோர் பங்கு பற்றிய கூட்டம் ஒன்றில் விடுத்தார்கள். எதிர்வரும் சனிக்கிழமை அக்டோபர் 23 ஆம் தேதியுடன் முடிவடையும் கனடா மீட்புப் பலனை (சிஆர்பி) மாற்றியமைத்து புதிய கனடா தொழிலாளர் வேலை முடக்க நன்மை என்னும் இந்த அறிவிப்பு அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை அமுலுக்கு வரும் என்று அறிவித்தார். *(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)*

# நவம்பர் 30 தொடக்கம் முழுமையான கனடிய தடுப்பூசி அத்தாட்சிப் பத்திரம் இல்லாதவர்கள் விமானங்களில் பயணம் செய்ய முடியாது




முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட கனேடியப் பயணிகள் மாகாணத்தில் வழங்கப்பட்ட தடுப்பூசி பாஸ்போர்ட்டுகளை விளையாட்டு இயந்திரம் படிக்கக்கூடிய ஒசு குறியீடுகள் மற்றும் மத்திய அரசின் ஒப்புதலுடன் நிரூபிக்க முடியும்-மேலும் நவம்பர் 30 முதல், அவர்கள் இல்லாமல் பறக்க முடியாது.
கனடிய அரசாங்கத்தின் அறிவிப்பின் படி எதிர்வரும் நவம்பர் 30ம் திகதிக்குள், ஒவ்வொரு மாகாணமும் ஒரு ஒசு குறியீடு மற்றும் கனடிய அரசாங்கத்தின் லோகோ இரண்டையும் உள்ளடக்கிய அத்தாட்சி ஆவணங்களை வழங்கும், மேலும் சான்றுப் பத்திரங்கள் கனடாவிலிருந்து விமானங்களில் செல்லும் பயணிகளுக்கான தடுப்பூசியின் சான்றாக சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
*(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)*

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள் *நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL: (647) 338-6916 (416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM

DAWN TRANSPORTS & SERVICES
FREE ESTIMATES
மூவிங் & டெலிவெறிஸ்
26 FEET CARGO VAN
உங்கள் DELIVERY தேவைகளுக்கு இலவச மதிப்பீடு Tel: 416-452-2251
We do packaging, wrapping, Moving to storage, Junk removal Express Services Available

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000 Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel 416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### பெண்களுக்கான வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பெண்களுக்கான வேலை வாய்ப்புக்கள் உள்ளன. அனுபவம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு
**ஜெயா: (647) 669-2739**

### HELP WANTED

411 College St, Toronto ON ல் அமைந்துள்ள Toby's Pub and Eatery என்னும் உணவகத்திற்கு Kitchen helper தேவை.

Day time/night time
Full time/part time.
Please call after 12 pm.

**416-879-3768**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### Renovation Workers Wanted

Workers needed for the following jobs:

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call: **416-706-8160**

### வியாபாரம் விற்பனைக்கு

வீட்டிலிருந்து குடும்பத்துடன் செய்யக்கூடிய சிறு வியாபாரம் ஒன்று உடனடியாக விற்பனைக்கு உண்டு. தேவையான உபகரணங்கள். சிறு இயந்திரங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு. அவசியமான பயிற்சியும் சில வாரங்களுக்கு வழங்கப்படும். அத்துடன். எமது வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் விபரங்களும் கையளிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 647-678-7550**



MANIPAY HINDU COLLEGE - MANIPAY LADIES COLLEGE
OLD STUDENTS ASSOCIATION -CANADA (ESTD. 1991)
மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா (ஸ்தாபிதம் 1991)
91 Lamoreaux Dr. E # 100
Toronto ON M1W 2J8


Date: Oct 17, 2021

## காணொலி மூலம் கூட்டப்படும் ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2021

### மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர் வரும் November 07, 2021 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 05:00 மணிக்கு மீண்டும் ஒரு இணைய வழி தொலைமுறைக் கூட்டமாக நடைபெறவுள்ளது. இப்பொதுக்கூட்டத்திற்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவ மாணவிகள் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

காணொலி மூலம் கூட்டப்படும் கூட்டங்கள் உங்களில் பலருக்கும் தற்போது மிகவும் பரிச்சயமானதொன்றாக இருக்கும் என்றே நம்புகிறோம். இவ்வாண்டும் நாம் எமது பொதுக்கூட்டத்தை அவ்வாறே நடத்தலாமென்று முடிவு செய்துள்ளோம். அதன் பிரகாரம், பங்குபற்றுவோர், தயவு செய்து முன்கூட்டியே உங்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். பதிவு செய்தவர்க்கு இணையத்தள இணைப்பொன்றை பிற்பாடு அனுப்பிவைப்போம்.

இவ்வாண்டுப் பொதுக்கூட்டம் அதன் ஊடகம் மாறினாலும் வழமைபோல் சங்கத்தின் எதிர் கால நோக்கங்கள், சங்க மேம்பாடுகள் பற்றி கலந்து பேசி அங்கத்தவர்களின் கருத்தை பெற இருப்பதால் அனைத்து பழைய மாணவ மாணவிகளையும் இக்கூட்டத்திற்கு சமூகமளித்து இதை முன்னெடுத்து செல்ல உதவுமாறு சங்க நிர்வாகக்குழு அன்புடன் கேட்டுக் கொள்கிறது

இதைத்தவிர சங்கத்தின் யாப்பில் ஏதாவது மாற்றமோ திருத்தமோ ஏற்படுத்த விரும்பினால் அதை சங்க நிர்வாகத்துடன் முன்கூட்டியே தொடர்பு கொண்டு உத்தேசித்த மாற்றங்களை பொதுக்கூட்டத்தின் அங்கீகரிப்புக்கு சமர்பிக்கவும். அத்துடன் புதிய அங்கத்தவர்களை அழைத்து வந்தும், சங்க நடவடிக்கைகளில் ஒன்றிணைந்தும், சங்கத்தின் செயற்பாடுகளுக்கு உங்களுடைய ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்குமாறும் வேண்டுகின்றோம்

தொடர்புகட்கு:

| | | | |
|---|---|---|---|
| சி. விஜயகுமார் | சி. கணேசலிங்கம் | ச.வசந்தறாஜன் | க.கனகராஜா |
| (647)293-9924 | (416)499-6248 | (416)289-9008 | (416)858-6316 |

நன்றி

சி. விஜயகுமார்

தலைவர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கனடா)

உதயன் கதிரோட்டம்

# எதிர்காலத் தலைவர்களான மாணவச் செல்வங்களின் கலங்கரை விளக்கம் அவர்கள் கற்கும் பாடசாலைகளே

உலகின் எட்டுத் திசைகளிலும் வாழும் மாணவச் செல்வங்களின் வளர்ச்சிக்கும் அவர்கள் எதிர்காலத் தலைவர்களாக விளங்குவதற்கும் கலங்கரை விளக்கமாக விளங்குவது அவர்கள் கற்கும் பாடசாலைகளே என்றால் அது மிகையாகாது.

பாடசாலைகளில் கற்றுத் தேர்ந்தால் மாத்திரமே அவர்கள் பல்கலைக் கழகங்களில் புகுந்து சிறந்த கல்வியாளர்களாக பரிணமிக்க இயலும் என்பது கண்கூடாகும்.
இந்த வகையில் எமது தாயகத்தில் பல சவால்களுக்கு மத்தியில் தங்கள் கல்விக்காக ஏங்கித் தவிக்கும் எமது மாணவச் செல்வங்களை புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகள் சற்று திரும்பிப் பார்க்க வேண்டியது தற்காலத்தில் மிகவும் அவசியமாகின்றது.

இவ்வாறான நிலையில் கொரோனாத் தொற்று காரணமாக உலகெங்கும் போலவே. ஏமது தாயகத்தின் மாணவச் செல்வங்களும் தங்கள் கல்வியை இழந்துள்ளார்கள். ஏற்கெனவே வறுமை அரசு மற்றும் பாதுகாப்புப் படைகள் சார்ந்த நெருக்குவாரங்கள் ஆகியன சார்ந்த பாதிப்புக்கள் ஒரு புறம். இயற்கையின் பாதிப்புக்களாலும் எமது பிள்ளைகள் கல்வியில் பின் தங்கி. ஆதனால் அவர்களது எதிர்காலம் பின் தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க, இருநூறுக்கும் குறைவான எண்ணிக்கையுள்ள மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் எமது தாயகத்தில் நேற்று 21 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் மாத்திரமன்றி, நாட்டின் எதிர்கால தூண்களான மாணவர்களின் நலன் மீது அக்கறை கொண்டுள்ள அனைவருக்குமே மகிழ்ச்சியும், நிம்மதியும் தருகின்ற செய்தி இதுவாகும்.

நாட்டில் கொவிட் தொற்று படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியதையடுத்து அவ்வப்போது மூடப்பட்ட பாடசாலைகள், பின்னர் நீண்ட காலமாக தொடர்ச்சியாகவே மூடப்பட்டு இயங்காத நிலைமையில் இருந்தன. இலங்கையில் கொவிட் தொற்று பரவுகின்ற வேகத்தில் தற்போது வீழ்ச்சி நிலைமை படிப்படியாக ஏற்பட்டு வருவதனால் பாடசாலைகளையும் படிப்படியாக ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் கொ-ரோனா மரணங்கள் தொடர்ச்சியாக சம்பவிக்கவே செய்கின்றன. இதனால் மாணவர்களும் பெற்றோரும் பாடசாலைகளுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பவே அஞ்சுகின்றனர்.

இவ்வாறிருக்க. வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான பணியை செவ்வனே முன்னெடுத்துச் சென்ற ஆசிரியர்களை அனைத்து தரப்பினருமே பாராட்டுவது முக்கியம். அதேவேளை 200 இற்கும் குறைவான எண்ணிக்கை கொண்ட பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளதனால், மாணவர்களின் கல்வி நடவடிக்கையை துரித கதியி-ல் முன்னெடுத்துச் செல்வதற்காக அனைத்து ஆசிரியர்களும் அர்ப்பணிப்பான சேவையை முன்னெடுக்க வேண்டியதும் அவசியமாகின்றது. மாணவர்களின் கல்வியில் பெருவீழ்ச்சி நிலைமை ஏற்பட்டுள்ளதனால் அவர்களை மீண்டும் கைதூக்கி விடும் பொறுப்பு ஆசிரியர்களிடமே உள்ளது.

இவ்வாறு தமிழ்ச் சமூகத்தின் அனைத்து தரப்பினரும் ஒன்று சேர்ந்து உழைத்து கல்வியில் பின்தங்கியுள்ள எமது மண்ணின் மைந்தர்களாம் மாண-வச் செல்வங்களுக்கு கல்விச் செல்வத்தை அள்ளி வழங்க முன்வரவேண்டும்.

## நவம்பர் 30 தொடக்கம் முழுமையான கனடிய தடுப்பூசி அத்தாட்சிப் பத்திரம் இல்லாதவர்கள் விமானங்களில் பயணம் செய்ய முடியாது

முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட கனேடியப் பயணிகள் மாகாணத்தில் வழங்கப்பட்ட தடுப்பூசி பாஸ்போர்ட்டுகளை விளையாட்டு இயந்திரம் படிக்கக்கூடிய ஞசு குறியீடுகள் மற்றும் மத்திய அரசின் ஒப்புதலுடன் நிரூபிக்க முடியும். மேலும் நவம்பர் 30 முதல், அவர்கள் இல்லாமல் பறக்க முடியாது.

கனடிய அரசாங்கத்தின் அறிவிப்பின் படி எதிர்வரும் நவம்பர் 30ம் திகதிக்குள், ஒவ்வொரு மாகாணமும் ஒரு ஞசு குறியீடு மற்றும் கனடிய அரசாங்கத்தின் லோகோ இரண்டையும் உள்ளடக்கிய அத்தாட்சி ஆவணங்களை வழங்கும், மேலும் சான்றுப் பத்திரங்கள் கனடாவிலிருந்து விமானங்களில் செல்லும் பயணிகளுக்கான தடுப்பூசியின் சான்றாக சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு நேற்று வியாழக்கிழமை கனடிய அரசால் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கனடிய மத்திய அரசின் அதிகாரிகள் ”பான்-கனடியன்” தரப்படுத்தப்பட்ட ஆவணங்களை மற்ற நாடுகள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புவதாகக் தெரிவித்துள்ளார்கள், ஆனால் சர்வதேச நாடுகள் மற்றும் பங்காளிகள் அதை நன்கு அறிந்திருப்பதை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்றும் மற்றும் மாகாண அரசாங்கங்கள் வழங்கிய ஆவணங்களை **COVID-19** க்கு எதிரான கனடாவின் தடுப்பூசியாக அங்கீகரிக்க முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றுத.

பெரும்பாலான மாகாணங்களில், தடுப்பூசியின் புதிய ஆதாரம் ஏற்கனவே ஸ்மார்ட் தொலைபேசிகளில் பதிவிறக்கம் செய்ய அல்லது கடின நகல் வடிவத்தில் அச்சிட கிடைக்கிறன என்புத இங்கு குறிப்பிடத்தக்குத. இந்த விடயத்தை

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## கனடாவில் முடக்கங்கள் காரணமாக பாதிக்கப்படுகின்றவர்களுக்கான கனடா தொழிலாளர் வேலை முடக்க நன்மைத்திட்டம் (CWLB) அறிமுகமாகின்றது

கனடாவில் பல்வேறு பகுதிகளில் அமுல் செய்யப்படும் முடக்கம் காரண-மாக பாதிக்கப்பட்ட தொழில்களில் உள்ள மக்களுக்கு ஒரு புதிய நன்மைத் திட்டத்திற்கு வழிவகை செய்வதற்காக கனடா மீட்புப் பயனை (சிஆர்பி) எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் இரத்து செய்யப்படுவதாக கனடிய மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது.
இதற்கான உத்தியோகபூர்வமான அறிவிப்பை நேற்று வியாழக்கிழமை, ஒட்டாவா மாநகரில் கனடிய நிதியமைச்சர் கிறிஸ்டினா ப்ரீலாண்ட் மற்றும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூமோ ஆகியோர் பங்கு பற்றிய கூட்டம் ஒன்றில் விடுத்தார்கள்.

எதிர்வரும் சனிக்கிழமை அக்டோபர் 23 ஆம் தேதியுடன் முடிவடையும் கனடா மீட்புப் பலனை (சிஆர்பி) மாற்றியமைத்து புதிய கனடா தொழிலாளர் வேலை முடக்க நன்மை என்னும் இந்த அறிவிப்பு அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை அமுலுக்கு வரும் என்று அறிவித்தார்.

கனடா தொழிலாளர் முடக்க நன்மைத் திட்டம் பற்றிய விளக்கத்தை அமைச்சர் அறிவித்தார் **(CWLB).**
கனடா தொழிலாளர் முடக்க நன்மை **(CWLB)** திட்டத்தின் படி வாரத்திற்கு 300 டாலர்களை ஊரடங்கு மற்றும் முடக்கம் சார்ந்த அறிவிப்புகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளன

நேற்று வியாழக்கிழமை செய்தியாளர் சந்திப்பில், நிதி அமைச்சர் கிறிஸ்ரினா ப்ரீலாண்ட் இந்த புதிய நன்மைத் திட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு தெரிவிக்கையில் "இந்த திட்டமானது மிகவும் இலக்கு அணுகுமுறையை எடுத்து வருவதாகவும், எதிர்காலத்தில் அரசாங்கங்கள் அமுல் செய்யும் தற்காலிக தற்காலிகமான முடக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய தொழில்களுக்காகவே இந்த திட்டம் உருவாக்கப்பட்டது" என்றும் கூறினார்.

மேலும் இந்த புதிய திட்டத்திற்கு யார் தகுதியானவர்கள் என்ற விளக்கத்தை அமைச்சர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது தெரிவித்தார்.

"அரசாங்கத்தால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பொது சுகாதார முடக்கத்தினால் நேரடியாக பாதிக்கப்படும் மக்களுக்கு இந்த உதவித் தொகை ”கண்டிப்பாக கிடைக்கும்” என்று அரசாங்கத்தின் சார்பில் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

வேலையற்றோர் காப்பீட்டிற்கு தகுதி பெற்றிருந்தாலும் அது தொழிலாளர்களுக்கு கிடைக்கிறது. நுஜ க்கு தகுதி பெற்ற தொழிலாளர்களுக்கு ஒரே காலத்தில் இரண்டு சலுகைகளையும் அரசாங்கத்தால் வழங்க முடியாது' என்றும் அமைச்சர் தெரிவித்தார்.
இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்வியில் "தடுப்பூசி போடாததால் ஒருவர் வேலையை இழந்தால் என்ன செய்வது? என்று கேட்டார்

அதற்கு பதிலளித்த அமைச்சர் "இதுவரை வெளியிடப்பட்ட திட்டத்தின் விவரங்கள் குறிப்பாக ”தடுப்பூசி ஆணையை கடைபிடிக்க மறுப்பதன் காரண-மாக வருமானம் அல்லது வேலை இழப்பு ஏற்படும்” மக்களுக்கு இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்படவில்லை" என்று தெரிவித்தார்.

இந்த 'கனடா தொழிலாளர் முடக்க நன்மைத் திட்டம் எந்த நாள் வரையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் என்ற கேள்விக்கு நிதி அமைச்சர் பதிலளிக்கையில்
"கனடா தொழிலாளர் முடக்க நன்மைகள் திட்டம் மே 7, 2022 என்ற நாள் வரையும் தகுதியானவர்களுக்கு வழங்கப்படும். மேலும் அரசாங்கத்தால் அல்லது மாகாண அரசாங்கங்களால் முடக்கம் பற்றிய அறிவிப்பு அமுல் செய்யப்படும் காலம் வரையிலும் இந்த கொடுப்பனவுகள் கிடைக்கும். அத்துடன் பொருந்தும் பட்சத்தில், அக்டோபர் 24 ஆம் திகதிக்கு முன்னரேயே விண்ணப்பங்கள் ஏற்கப்படலாம்" என்றும் அமைச்சர் பதிலளித்தார்.

---

கனடிய மத்திய அரசின் அதிகாரிகள் வியாழக்கிழமை தெரிவித்தனர், எனினும் இவ்வாறான ஏற்பாடுகளை இதுவரை செய்யாத ஏனைய மாகாணங்களில் இந்த வசதிகள் நவம்பர் 30ம் திகதிக்குள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அக்டோபர் 30 முதல், கனடாவின் எந்தவொரு விமான நிலையத்தில் இருந்து புறப்படும் அல்லது மாநிலங்களுக்கு இடையேயான ரயிலில் பயணம் செய்யும் எவரும் கோவிட் -19 க்கு எதிராக முழுமையாக தடுப்பூசி போட வேண்டும் என்று அரசாங்கம் முன்பு அறிவித்தது, மேலும் அவர்களின் மாகாணம் வழங்கிய ஆவணங்களுடன் அதை நிரூபிக்க தயாராக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளுத.

நேற்று வியாழக்கிழமை ஒட்டாவாவில் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில். பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ”பான்-கனேடியன்” தரத்தின் வளர்ச்சியின் முன்னேற்றத்தை எடுத்துரைத்தார்,

எனினும் கனேடிய மாகாணங்கள் மற்றும் பிரதேசங்கள் வெளியிடும் **QR-** குறியிடப்பட்ட ஆவணங்களின் வடிவமைப்பு முறைகேடு மற்றும் போலித்தனத்தைத் தடுக்க போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளை பயன்படுத்தும், மேலும் அவை ஏற்றுக்கொள்ளப்படும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

எவ்வாறாயினும் கனடாவின் மத்திய அரசின் தடுப்பூசி அத்தாட்சிப் பத்திரங்கள் மிகவிரைவில் மக்களை சென்றடைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "கோட்டபாய தலைமையில் செயற்படும் பௌத்த ஆதிக்கத்தின் வெளிப்பாடாடுதான் சிங்கள பௌத்த குடியேற்றமாகும்"

## மட்டக்களப்பு ஈ,பி.ஆர்.எல்.எப் பிரமுகர் தெரிவிப்பு

இலங்கையில் மீண்டும் மீண்டும் இனவாத அரசாங்கமும் பௌத்த ஆலோசனைக் குழுக்களும், சிங்கள மக்களை தமிழர் பகுதிகளில் குடியேற்றியே ஆகவேண்டும் என தீவிரமாக செயற்பட்டு வருகின்றார்கள். இன்று இதனை கையில் எடுத்திருக்கின்றவர், இலங்கை அரசாங்கத்தின் ஒரு மோசமான ஜனாதிபதியாக உலகிற்கு தெரியும் கோட்டபாய ராஜபக்ச தான். அவர் தலைமையில் தலைமையில் செயற்படும் பௌத்த ஆதிக்கத்தின் வெளிப்பாடாடுதான் இலங்கையின் தமிழர் பகுதி எங்கும் மேற்கொள்ளப்படும் சிங்கள பௌத்த குடியேற்றமாகும்.

மேலும். மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லை கிராமமான புனானை காரமுனை பகுதியில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை செய்வது என்பது மட்டக்களப்பில் தமிழ் மக்கள் வாழக்கூடாது என்ற ஜனாதிபதி கோட்டபாய ராஜபஷவின் தலைமையில் செயற்படும் பௌத்த ஆதிக்கத்தின் வெளிப்பாடாகும். எனவே இந்த சிங்கள குடியேற்ற நடவடிக்கையை வன்மையாக கண்டிப்பதாக கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் ஈ.பிஇஆர்.எல்.எப் பத்மநாபா மன்ற தலைவருமான இரா. துரைரெட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள ஈ.பிஇஆர்.எல்.எப் பத்மநாபா மன்ற காரியலத்தில் நேற்று வியாழக்கிழமை 21ம் திகதி இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாங்கேணி கிழக்கு பகுதியின் மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லை கிராமமான புனானை காரமுனை பகுதியில் 200 சிங்கள குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 6 ஏக்கர் வீதம் சிங்கள மக்களுக்கு வழங்கி திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை செய்வதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்கின்றது.

இந்த சிங்கள குடியேற்றத்தை செய்வதற்காக இலங்கையின் பௌத்த ஆலோசனைக்குழுவின் நடவடிக்கையின் பயனாக ஜனாதிபதியின் துணையுடன் கொழும்பு காணி ஆணையாளரது வழிகாட்டலின் பெயரில் இன்று இந்த பகுதியில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை நடாத்துவதற்காக பௌத்த தலைமையிலான குழுவினருடன் பார்வையிட்டது என்பது மட்டக்களப்பில் தமிழ் மக்கள் வாழக்கூடாது என்பதை மத்திய அரசின் செயற்பாடு முன்நிறுத்துகின்றது.

இது தொடர்பாக அந்தபகுதியில் மக்கள் பிரதிநிதிகளும் அந்தபகுதிமக்களும் ஒரு வெகுஜன ரீதியான எதிர்ப்பு போராட்டம் செய்து எதிர்ப்பை தெரிவித்த இன்றைய தினத்தில் இந்த காணிகளை பாக்கச் சென்றவர்களுக்கு இதில் எதிர்ப்பு இருக்கின்றது என தெரியப்படுத்தியுள்ளது.

1983 ம் ஆண்டு 1985 ம் ஆண்டு கலவரங்களின் ஊடாக அந்த பகுதியில் குறிப்பிட்ட சில 4 அல்லது 5 சிங்கள குடும்பங்களும் தமிழ் குடும்பங்களும் முஸ்லீம் குடும்பங்களும் இடம்பெயர்ந்தது என்பது வரலாறு.

இதற்கு 1982 ம் ஆண்டு வருடாந்த அனுமதிப்பத்திரம் இந்த பகுதியில் ஒரு குடும்பத்துக்கு 6 ஏக்கர் வீதம் 198 குடும்பங்களுக்கு இருந்ததாக பொய்யான வருடாந்த அனுமதிப்பத்திரத்தை தயாரித்து சம்மந்தப்பட்டோருக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

இந்த வருடாந்த அனுமதிப்பத்திரத்தில் கையொழுத்து வைத்த உத்தியோகத்தவர் என்பவர் எங்கள் அறிவுக்கு எட்டியவரை அப்படி ஒரு உத்தியோகத்தர் வேலை செய்யவில்லை. ஆகவே காணி ஆணையாளா இந்த வருடாந்த அனுமதிப்பத்திரம் பொய்யா உண்மையா என இந்த விடயத்தை முதலில் விசாரணை செய்யவேண்டும்.

வருடாந்த அனுமதிப்பத்திரம் அந்த வருடத்தில் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அது இரத்து செய்யப்படும். ஆகவே ஒரு பொய்யான ஆவணத்தை தயாரித்ததாக ஒரு குற்றச்சாட்டடை நான் முன்வைக்கின்றேன் அது மட்டுமல்ல கடந்த பதினைந்து இருவது வருடமாக கிழக்கு மாகாண சபையில் இந்த விடையத்தை 4 வது தடவையாக நான் இங்கு இன்று பேசுகின்றேன்.

இந்த குடியேற்றம் தொடர்பாக கடந்த வருடம் அதற்கு முந்தியவருடம் பல முயற்சிகள் செய்யப்பட்டு கிழக்கு மாகாண காணி ஆணையாளர் கிழக்குமாகாணசபை மக்கள் பிரதிநிதிகள் வாகரை பிரதேசத்திற்குட்பட்ட அதிகாரிகள் பொதுமக்கள் பல ஆட்சேபனையை தெரிவித்து வந்தோம்.

மட்டக்களப்பில் தமிழர்கள் வாழக்கூடாது என்பதற்காக திட்டமிட்ட குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. எனவே இந்த திட்டமிட்ட குடியேற்றத்தை வன்மையாக கண்டித்து இன்று இந்த நிலைமையில் அந்த இடத்திற்கு சென்று மக்கள் பிரதிநிதிகள் ஆர்பாட்டம் நடாத்துவது என்பது வரவேற்கதக்க விடையம் இதை உணர்ந்து மத்திய அரசு இதனை நிறுத்துவதற்கான செயற்பாடுகளை செய்யவேண்டும் என அவர் தெரிவித்தார்.






இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக அதிகரிக்கும் இனப் பாகுபாடு தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை

**இலங்கையின் முஸ்லிம் சமூகம் 2013ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இனப் பாகுபாடு, துன்புறுத்தல் மற்றும் வன்முறையை அனுபவித்து வருவதாக சர்வதேச மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் சர்வதேச மன்னிப்புச் சபை என்ற அமைப்பு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.**

குறிப்பாக, சிறுபான்மை இனங்களை வெளிப்படையாக இலக்கு வைத்து அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் ஓர் உச்சகட்டத்தை இலங்கை அடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் முழுமையான விவரத்தை இங்கே தொகுத்து வழங்குகிறோம்.

"வீடுகளை எரிப்பது முதல் உடல்களை எரிப்பது வரை இலங்கையில் சிங்கள - பௌத்த தேசியவாதத்தின் மத்தியில் முஸ்லிம்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள், இனப்பாகுபாடு மற்றும் வன்முறை ஆகியவை, 2013 முதல் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வினை அடைந்துள்ளது," எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"முஸ்லிம்களுக்கு எதிரான இந்த பாகுபாடு, தண்டனைகளின்றி தொடர்ச்சியாக அதிகரித்து வரும் கும்பல் தாக்குதல்களிலிருந்து பரிணமித்தது எனலாம். இந்த பாகுபாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக வெளிப்படையாக நடைமுறைப்படுத்தப்படும் அரசாங்க கொள்கைகளான கொரோனா தொற்று காரணமாக இறந்த முஸ்லிம்களை கட்டாயமாகத் தகனம் செய்தல் மற்றும் நிகாப் (முகத்திரை), மதரசாக்கள் (மத ரீதியிலான பள்ளிகள்) ஆகியவற்றை தடை செய்யும் தற்போதைய முன்மொழிவுகளும் அடங்கும்" என அம்னெஸ்டி இன்டர்நேஷனல் குறிப்பிட்டுள்ளது.

"இலங்கையில் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வு ஒன்றும் புதிதல்ல என்றாலும், சமீபத்திய ஆண்டுகளில் முஸ்லிம்களுக்கு எதிரான இந்நிலைமை கூர்மையடைந்துள்ளது எனலாம். முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள், அதிகார தரப்பின் மறைமுக அங்கீகாரத்துடன் அடிக்கடி பல்வேறு ஆபத்தான அளவுகளில் நிகழ்ந்துள்ளன.

அத்துடன், முஸ்லிம்களுக்கு வெளிப்படையாகவே விரோதமாகக் காணப்படும் தற்போதைய அரசாங்கத்தின் சொல்லாட்சி மற்றும் கொள்கைகளும் சேர்ந்துகொண்டுள்ளன" என்று அம்னெஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பின் பிர-தி செயலாளர் நாயகம் கைல் வார்ட் தெரிவித்துள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"இலங்கை அதிகாரிகள் இந்த ஆபத்தான போக்கை நிறுத்தி, முஸ்லிம்களை மேலும் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதுடன், குற்றவாளிகளை பொறுப்பாக்குவதும், முஸ்லிம் சமூகத்தைக் குறிவைத்து மேற்கொள்ளப்படும், துன்புறுத்தல் மற்றும் பாகுபாடு காட்டும் அரசாங்கக் கொள்கைகளை முடிவுக்கு கொண்டு வரவும் வேண்டும்," எனவும் அந்த அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தியோர் மற்றும் வெறுப்புப் பேச்சுக்குப் பொறுப்பானவர்கள் தங்கள் செயல்களுக்குரிய தண்டனை இன்றி அனுபவிக்கும் சலுகை மூலமாக, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் 2013 முதல் பல்வேறு படித்திறன்களில் தீவிரம் அடைந்துள்ளது. இந்த அதிகரித்த விரோதமானது - இஸ்லாமிய மதம் மற்றும் பழக்கவழக்கங்களின்படி, முஸ்லிம்களின் நுகர்வுக்கு அனுமதிக்கப்பட்ட உணவைக் குறிக்கும் "ஹலால்" சான்றிதழை முடிவுக்கு கொண்டுவர சிங்கள பௌத்த தேசியவாத குழுக்கள் வெற்றிகரமாக முயன்றபோது தொடங்கியது. குறித்த "ஹலால்" சான்றிதழுக்கு எதிரான பிரசாரமானது பல பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் வணிகங்கள் மீது தாக்குதல்களுக்கு வழிவகுத்தது. தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கான பொறுப்புக் கூறல் தொடர்பாக காணப்பட்ட அசட்டை, முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறை தண்டனையின்றி வன்முறையில் ஈடுப-டலாம் என்பதற்கான ஒரு சமிக்ஞையை வழங்கியது. அடுத்த ஆண்டு, தெற்கு கடலோர நகரான அளுத்கமவில் ஒரு சிங்கள பௌத்த தேசியவாதக் குழு பேரணி நடத்திய பின்னர், முஸ்லிம் எதிர்ப்பு கலவரம் தொடங்கியது. இங்கும், வன்முறையில் ஈடுபட்டவர்கள் தண்டனையை அனுபவிக்கவில்லை. அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க அதிகாரிகள் தவறிவிட்டனர். சிறுபான்மையினருக்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை நிலைநாட்டுவதாக உறுதியளித்த ஒரு புதிய அரசாங்கம் 2015 இல் இருந்தபோதிலும், முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்ந்தன. தேர்தலுக்குப் பிறகு, 2017 ஆம் ஆண்டில் தென்னிலங்கை நகரமான ஜிந்தோட்டவில் முஸ்லிம் விரோத வன்முறை வெடித்தது. அதே நேரத்தில் மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள திகன மற்றும் அம்பாறை ஆகிய நகரங்களில் இதேபோன்ற வன்முறை 2018 இல் நடைபெற்றது. குற்றவாளிகள் பொறுப்புக்கூறலில் இருந்து தப்பியது மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் போலீசாரும் ஆயுதப்படையினரும் போதிய பாதுகாப்பை வழங்கவில்லை அல்லது வன்முறையைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை".





"இஸ்லாமிய அரசால் (ஐ.எஸ்) உரிமை கோரப்பட்ட உள்ளூர் இஸ்லாமி-யக் குழுவால் 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை தற்கொலை தாக்குதல்களில் 250க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட பின்னர் முஸ்லிம்கள் மீதான விரோதம் கணிசமாக அதிகரித்தது. இந்த தாக்குதல்களைத் தொடர்ந்து, 2019ஆம் ஆண்டு மே 13ஆம் தேதி அன்று, இலங்கையின் வடமேற்கு மாகாணத்திலுள்ள பல நகரங்களில் முஸ்லிம்களின் புனித மாதங்களில் ஒன்றான ரமலான் காலத்தில், முஸ்லிம்கள் தாக்குதலுக்கு உள்ளாகினர். நாடு முழுவதும் உள்ள பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன. சமூக வலைதளங்களில் "வெறுப்பு பேச்சு" பதிவுகள் மற்றும் முஸ்லிம் விரோதப் போக்குகள் காணப்பட்டன. தாக்குதல்களுக்குப் பிறகு நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை தன்னிச்சையாக கைது செய்ய அதி-காரிகள் அவசரகால விதிமுறைகளைப் பயன்படுத்தினர். பதவியேற்றதிலிருந்து, தற்போதைய அரசாங்கம் அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகளிலிருந்து திசை திருப்ப - முஸ்லிம் மக்களை குறிவைத்து பலிகடா ஆக்கி வருகிறது. கொ-ரோனா காரணமாக இறந்தவர்களின் உடல்களை அகற்றுவதற்கான கட்டாய தகன கொள்கையில் இது தெளிவாகத் தெரிந்தது. இறந்தோர் உடல்களை எரிப்பதை இஸ்லாம் தடை செய்துள்ள நிலையில், கொரோனா காரணமாக இறந்தவர்களை அடக்கம் செய்வதால் தொற்று மேலும் பரவும் என்பதை உறுதிப்படுத்தும் அறிவி-யல் சான்றுகள் இல்லாத போதும், கட்டாயமாக உடல்கள் எரியூட்டப்பட்டன".

"ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான வாக்கெடுப்புக்கு முன்னால் சர்வதேச அழுத்தம் அதிகரித்து, அரசாங்கம் அடிபணிந்த பிறகு, கட்டாய தகன கொள்கை மாற்றப்பட்டாலும், நிகாப் தடை மற்றும் மதரசா மீ-தான தடை உள்ளிட்ட பாரபட்சமான சட்டத்தை செயல்படுத்த முயற்சிக்கின்றனர். இவை நடந்தால் இலங்கையின் அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட, மதத்தின் அடிப்படையிலான பாகுபாடுகளிலிருந்து விலக்களிக்கப்படும் சுதந்திரம் மீறப்படுவதோடு, சர்வதேச மனித உரிமை சட்டமும் மீறப்படும்".

"முஸ்லிம்களை குறி வைப்பதற்காக, பயங்கரவாதத் தடை சட்டம் (PTA) உட்பட, தற்போதுள்ள சட்டங்களை அதிகாரிகள் பயன்படுத்தியுள்ளனர், இது சந்தேக நபர்களை 90 நாட்கள் வரை குற்றச்சாட்டின்றி, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் தடுத்து வைக்க அனுமதிக்கிறது. மேலும் இன மற்றும் மதவெறுப்பு பரவுவதைத் தடைசெய்யும் சட்டமான "சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) சட்டம்" தவறாகப் பயன்படுத்தப்படுவது, பாகு-பாடு, விரோதம் அல்லது வன்முறையைத் தூண்டும்". "15 மாதங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் 16 மே 2020 அன்று கைது செய்யப்பட்ட கவிஞர் மற்றும் ஆசிரியர் அஹ்னாஃப் ஜசீம் உட்பட தனிநபர்களை குறிவைத்து இந்த சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பல வழக்குகளை இந்த அறிக்கை ஆவணப்படுத்துகிறது". "பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள், கட்டாய தகனங்கள் முதல் நிகாப் மற்றும் மதரஸாக்கள் வரை, இலங்கை அரசாங்கம் முஸ்லிம்களுக்கு எதிராக அப்பட்டமான பாரபட்சமான கொள்கை நிகழ்ச்சி நிரலை பின்பற்றி வருகிறது".

# அடுத்து வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள மைத்திரியின் மகன் தஹம் சிறிசேன

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹம் சிறிசேன, பொலன்னறுவை தேர்தல் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் சபை தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். தஹம் சிறிசேன அடுத்து வரும் மாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிட வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹம் சிறிசேன சுதந்திரக் கட்சியில் முதலாவது முறையாக பதவியொன்றில் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அரசியலில் உத்தியோகபூர்வமாகவும் குதித்துள்ளார்.

இதற்கமைய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட இளைஞர் அணியின் தலைவராக தஹம் சிறிசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான கூட்டமொன்று நேற்றைய தினம் வியாழக்கிழமையனறு மின்னேரிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பதவி தொடர்பில் விணப்பித்திருந்த தஹம் சிறிசே-னவின் கோரிக்கையை கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்று அப்பதவியை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



# இந்திய – இலங்கை வரலாற்று நட்பின் நினைவாக குஷிநகர் சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டதாம்?

இலங்கை செய்திகள்
Sri Lanka News



அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட இலங்கை தூதுக்குழுவினருடனான ஸ்ரீலங்கன் விமானம் முதல் முறையாக தரையிறக்கப்பட்டதுடன், இந்தியாவின் குஷிநகர் விமான நிலையத்தின் ஊடாக சர்வதேச விமான சேவை புதன்கிழமை (20) முற்பகல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் மற்றும் இந்திய பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோதி ஆகியோருக்கிடையே 2020 செப்டம்பர் 20ஆம் திகதி ஸ"ம் தொழில்நுட்பம் ஊடாக இடம்பெற்ற இருதரப்பு மாநாட்டின் பயனாக இந்த வரலாற்று பயணம் திட்டமிடப்பட்டது.

இந்தியாவின் உத்திரப்பிரதேசத்தில் அமைந்துள்ள குஷிநகர் விமான நிலையமானது அந்நாட்டின் 29ஆவது சர்வதேச விமான நிலையமாகும்.

கௌரவ பிரதமர் நரேந்திர மோதி அவர்கள் நேற்று முற்பகல் குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தை உத்தியோகப்பூர்வமாக திறந்து வைத்ததுடன், அதனை தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் மஹாசங்கத்தினரை உள்ளடக்கிய ஸ்ரீலங்கன் விமானம் முதலாவதாக தரையிறங்கியமை வரலாற்று முக்கியத்துவமாகும்.

அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்கர் வெண்டருவே உபாலி தேரர் உள்ளிட்ட நூறு





மஹாசங்கத்தினர் இப்புனித பயணத்தில் இணைந்து கொண்டனர்.

இவ்வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வில் கலந்து கொண்ட கௌரவ அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்களுக்கும், இந்திய பிரதமர் நரேந்திர மோதி அவர்களுக்கும் இடையே அங்கு சந்திப்பொன்றும் இடம்பெற்றது. இதன்போது பகவத் கீதையின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப்பெயர்ப்பிலான முதல் பிரதி கௌரவ அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் பிரதமர் நரேந்திர மோதி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

"பௌத்த மதம் இந்தியாவிடம் இருந்து இலங்கை பெற்ற மிகப் பெரிய பரிசாகும். இரு நாட்டு மக்களுக்கிடையில் நாங்கள் எப்போதும் நெருங்கிய உறவைப் பேணி வருகிறோம். அதிமேதகு ஜனாதிபதியின் நோக்கமும் அதுவே என குறித்த சந்திப்பு குறித்து கௌரவ அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த இந்திய பிரதமர், குஷிநகரில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்களை சந்திக்க கிடைத்தமை மகிழ்ச்சியான விடயமாகும் எனவும், பல்வேறு துறைகளின் ஊடாக இந்தியா மற்றும் இலங்கை இடையிலான உறவை வலுப்படுத்தப்பட்டு வருவதாகவும், அது இருநாட்டு மக்களுக்கு நன்மையளிக்கும் என நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

**- மன்னார் நிருபர்**




# மன்னார் மாவட்டத்தில் மாணவர்களுக்கு "பைஸர்" தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பம்

மன்னார் மாவட்டத்தில் க.பொ.த உயர் தர பரிட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களுக்கான "பைஸர்" முதலாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் வியாழக்கிழமை (21) காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில், மன்னார்,நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இன்றைய தினம் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் குறித்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு முதல் தடவை மற்றும் 2வது தடவையாக தோற்றும் மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசியான பைஸர் தடுப்பூசியின் முதலாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



தடுப்பூசி செலுத்தும் நிலையங்களான பாடசாலைகளில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள், வைத்தியசாலை பணியாளர்கள், இராணுவம் மற்றும் விமானப்படை ஆகியோரின் ஒத்துழைப்புடன் மன்னார் மாவட்டத்தில் உயர் தர பரிட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களுக்கான பைஸர் முதலாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது மாணவர்கள் ஆர்வத்துடன் சென்று தடுப்பூசியை பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.









# இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டோர் நினைவாக யாழ் போதனா வைத்தியசாலையில் நினைவுத்தூபி



இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவாக விரைவில் நினைவுத்தூபி அமைக்கப்படும் என யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். யாழ். போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவு தினம் அனுஸ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "இந்திய ராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டோரின் உறவுகளால் உயிரிழந்தோரின் நினைவாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வளாகத்தில் ஒரு தூபி அமைப்பதற்கு தமக்கு இடம் ஒதுக்கித் தருமாறு நீண்ட காலமாக கோரிக்கை விடுத்துள்ளதாகவும்.

அந்த விடயம் தொடர்பில் தமது வைத்தியசாலையின் பல்வேறுபட்ட குழுக்களின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் புதிய வசதி ஒன்று செய்யப்பட்டு ஒரு பொருத்தமான இடம் தெரிவு செய்யப்பட்டு நினைவுத்தூபி அமைக்கப்படும்என்றார். மேலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கருத்துரைக்கும் போது யாழ்ப்பாண வைத்தியசாலையின செயற்பாடுகள் வழமைக்கு திரும்பியுள்ளன.



தற்போது வைத்தியசாலையை நோக்கி பல்வேறு நோய் உடையவர்களும் பிரச்சினை உடையவர்களும் சிகிச்சைக்காக வந்த வண்ணம் இருக்கின்றார்கள் கொவிட் தாக்கம் குறைவடைந்த நிலையில் காணப்படுகின்றது இருப்பினும் கோவிட் சிகிச்சைக்கான அதி தீவிர சிகிச்சை பிரிவு மற்றும் மூன்று விடுதிகள் இயங்கிய வண்ணம் உள்ளன.



கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களுக்கான சிகிச்சை வசதிகள் தற்போதும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. ஆகவே பொதுமக்கள் அவர்களுக்கு கடுமையான வருத்தங்கள் ஏதாவது பிரச்சனைகள் இருப்பின் அவர்கள் வைத்தியசாலைகளை நாடவேண்டும் அருகிலுள்ள வைத்தியசாலைகள் அல்லது போதனா வைத்திய சாலைக்கு வந்து தங்களுடைய வருத்தங்கள் சம்பந்தமாக ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதேவேளை அனைவரும் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள வேண்டும் தடுப்பூசியினை பெறாத நிலையில் அவர்களுக்கு ஏதாவது சிகிச்சைகளுக்கு ஏதாவது வைத்திய தேவைக்காக வர வேண்டுமாக இருந்தால் அவர்கள் வரமுடியும் தடுப்பூசி போடாதவர்கள் என்ற ரீதியில் அவர்களை நாங்கள் பிரித்து பார்ப்பதில்லை அவர்களுக்கும் ஏனையவர்கள் போன்று சகல விதமான சிகிச்சைகளை மேற் கொள்ளப்படுகின்றது.

குறிப்பாக வயோதிபர்கள் இளம் வயதினர் சிலர் தமக்கு விருப்பமான தடுப்பூசியைப் போட வேண்டும் என்ற நோக்கில் தாமதப்படுத்தி தடுப்பூசிகளை போட்டுக் கொள்ளாது விடாது தமக்குரிய தடுப்பூசியினை விரைவில் பெற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஜனாதிபதி கோட்டாபய இந்தியாவுடன் தந்திரோபாய ஒத்துழைப்பு சீனாவுடன் மூலோபாய கூட்டணி ஆகிய கொள்கைகளைக் கடைபிடிக்கின்றாரா

இலங்கை இராணுவத்தினது 72ஆவது வருடாந்த விழாசாலியபுர இராணுவ முகாமில் நடைபெற்றது அங்கு கஜபா ரெஜிமெண்ட் படைப்பிரிவின் அணிகள் மத்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சஉரையாற்றிய போது புதிய அரசியலமைப்பு பற்றி தெரிவித்த கருத்துக்கள் பலத்த சந்கேங்களை ஏற்படுத்துவதாக கலாநிதி தயான் ஜயதிலக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய, புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும், தேர்தல் முறைமை மாற்றப்படும் உள்ளிட்ட விடயங்கள் பற்றி கருத்து வெளியிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதிய அரசியலமைப்பு தொடர்பான கோட்டாபயவின் கருத்தானது இந்தியாவுடனான தந்திரோபாய ஒத்துழைப்பு மற்றும் சீனாவுடனான மூலோபாய கூட்டணி ஆகியவற்றை வெளிப்படுத்தும் கொள்கையாகவே பார்க்க வேண்டியுள்ளது. இவ்வாறு அவர் எதிர்பார்க்கின்றார் என்றுதான் நாம் கருத வேண்டியுள்ளது.

அத்துடன், கோட்டாபயவின் இவ்விதமான செயற்பாடானது சர்வதேசத்துடன் இலங்கையை ஐக்கியப்படுத்துவதற்கு பதிலாக விரிசல்களையே ஏற்படுத்துவதோடு தலையீடுகளை அதிகரிக்கச் செய்வதற்கும் வழிசமைக்கும் எனவும் தயான் ஜெயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தின் ஆண்டு நிறைவு நிகழ்வொன்றில் இவ்விதமான கருத்துக்களை வெளியிட வேண்டியதன் அவசியம் என்னவென்று தயான் ஜயத்திலக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இராணுவ நிகழ்வில் இவ்விதமான கருத்துக்களை வெளியிட்டுள்ளதன் மூலம், 13ஆவது திருத்தச்சட்டத்தினை தற்போதுள்ளவாறு அமுலாக்க முடியாது, அதன் கீழ் உள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியாது என்பதை மறைமுகமாக ஜனாதிபதி கோட்டாபய வெளிப்படுத்தியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 20ஆவது தடைச்சட்டம் அமுலாக்கப்பட்டுள்ள நிலையில் நிறைவேற்று அதிகாரங்களை கையில் வைத்திருக்கும் ஜனாதிபதி கோட்டபாயவுக்கு புதிய அரசியலமைப்புக்கான அவசியம் என்ன என்ற கேள்விகள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



அதுமட்டுமன்றி, புதிய அரசியலமைப்பு அதிகாரப்பகிர்வினை கொண்டிருக்குமா என்பது பற்றி நம்பிக்கை கொள்ள முடியாது என்று குறிப்பிடும் தயான் ஜயதிலக்க, ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாடு பல்லின இலங்கைக்கு பொருத்தமற்றதாக உள்ளதாகவும் கூறியுள்ளார்.

மேலும், ஜனாதிபதியின் புதிய அரசியலமைப்புக்கான கூற்றானது 13ஆவது திருத்தச்சட்டத்தினை இல்லாது செய்வதற்னான செயற்பட்டை இந்தியாவில் காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை நீக்கயமையை முன்வைத்து தர்க்க ரீதியான நியாயங்களை வெளிப்படுத்துவதற்கு முனைவதாக கூட இருக்கலாம். ஆனால், காஷ்மீரில் சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தபோது அது இந்தியாவிலிருந்து வேறுபடுத்தப்பட்டிருந்தது.

ஆனால் 13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ள நிலையில் அதனை ஒருதலைப்பட்சமாக இலங்கை அரசாங்கம் நீக்க முனைவதானது அவர்களை ஐக்கிய இலங்கைக்குள் வாழ முடியாத சூழலை ஏற்படுத்தி விடும் அபாயத்தினையே உருவாக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# குஷிநகர் விமான நிலைய திறப்புவிழாவில் இலங்கையிலிருந்து பங்கேற்கும் மஹாசங்கத்தினர் பிரதமர் மோடியுடன் சந்திப்பு



இந்தியாவின் குஷிநகர் சர்வதேச விமான நிலைய திறப்புவிழாவில் கலந்து கொள்ளும் மஹாசங்கத்தினர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை அலரி மாளிகையில் சந்தித்தனர்.

இந்திய பிரதமர் கௌரவ நரேந்திர மோதி அவர்களினால் குஷிநகர் சர்வதேச விமான நிலையம் புதன்கிழமை (20) திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த வரலாற்று சிறப்புமிக்க சந்தர்ப்பத்தில் முதலாவது விமானம் இலங்கையிலிருந்து வருகை தருமாயின் அது குறித்து பெரும் மகிழ்ச்சியடைவதாக இந்திய பிரதமர் இதற்கு முன்னதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடம் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய குஷிநகர் விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக பிரகடனப்படுத்தப்படுவதை குறிக்கும் வகையில் இலங்கையிலிருந்து புறப்பட்டு செல்லும் ஸ்ரீலங்கன் விமானம் முதலாவதாக அங்கு தரையிறக்கப்படவுள்ளது. இந்த வரலாற்று சிறப்புமிக்க பயணத்தில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் எண்ணக்கருவிற்கமைய அஸ்கிரி பீடத்தின் அனுநாயக்கர் வெண்டருவே உபாலி தேரர் உள்ளிட்ட மஹாசங்கத்தினர் நூறு பேர் பங்கேற்கவுள்ளனர்.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்கள் உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவையின் தலைவர் அசோக் பதிரகே உள்ளிட்ட தூதுவர்கள் இவ்விஜயத்தில் இணைந்து கொள்ளவுள்ளனர். குஷிநகருக்கு விஜயம் செய்யும் மஹாசங்கத்தினருக்கு அதற்கான அனுமதி பத்திரங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் வழங்கிவைக்கப்பட்டது. அஸ்கிரி பீடத்தின் அனுநாயக்கர் வெண்டருவே உபாலி தேரர்.

எமது நாட்டின் கௌரவ பிரதமர் அவர்களே, நாளை பௌர்ணமி தினத்தில் மஹாசங்கத்தினர் என்ற வகையில் மிகவும் மதிப்புமிக்க யாத்திரையில் இணைந்து கொள்ளவுள்ளோம். கௌரவ பிரதமரின் எண்ணக்கவிற்கமைய கௌதம புத்தர் தனது எண்பதாவது அகவையில் பரிநிர்வாணம் அடைந்த நகரான உத்திரப் பிரதேசத்தின் குஷிநகருக்கு நாம் விஜயம் செய்கிறோம்.

உலகில் பௌத்த நாடுகள் எத்தனை இருப்பினும் இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையே 2500 வருடங்களாக காணப்படும் நட்புறவை அடிப்படையாகக் கொண்டு, அன்று தர்ம அசோக மன்னனுக்கும் தேவநம்பியதிஸ்ஸ மன்னனுக்கும் இடையே ஏற்பட்ட நட்புறவின் அடிப்படையிலேயே எமக்கு பௌத்த மதம் கிடைத்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இந்த 21ஆவது நூற்றாண்டில் அப்பயணம், அவ்வேலைத்திட்டம், அந்த உறவு மற்றும் மதம் சார்ந்த உறவை அடிப்படையாகக் கொண்டு தற்போதைய எமது கௌரவ பிரதமர், மஹாசங்கத்தினரை கௌரவித்து நூறு மஹாசங்கத்தினருக்கு நாளைய தினம் அந்நிகழ்வில் பங்கேற்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை குறித்து மஹாசங்கத்தினர் என்ற ரீதியில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆசிர்வதிக்கிறேன்.

அண்டைய நாடு என்ற ரீதியில் நாம் இந்தியாவுடன் மிகுந்த நட்புறவுடன் செயற்பட்டோம். இரு நாடுகளுக்கும் இடையே சிறந்த உறவு காணப்படுகிறது. குறிப்பாக இச்சந்தர்ப்பத்தில் எமது கௌரவ பிரதமர் மேற்கொண்டுள்ள இந்த வேலைத்திட்டத்திற்கு அமைய இந்திய பிரதமர் மிகுந்த மகிழ்ச்சியடைவார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

எமது நாட்டின் கௌரவ பிரதமர் போன்றே இந்திய பிரதமர் மோதி அவர்களும் பௌத்த மக்களுக்காக பெரும் சேவையாற்றி வருகிறார். அத்துடன், கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் போன்றே இந்திய பிரதமர் கௌரவ நரேந்திர மோதி அவர்களும் பௌத்த மதத்தை மிகவும் நேசிப்பவராவார். பிரதமர் மோதி அவர்கள் கடந்த ஒரு தினத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது ஆற்றிய உரையை இந்நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். புத்தரின் போதனை எந்தவொரு சவாலையும் வெற்றிக்கொள்ள உதவும் என தெரிவித்திருந்தார். இந்து தேசமாக இருப்பினும் அந்நாட்டின் பிரதமர் இவ்வாறு கூறியிருப்பதானது பௌத்தர்களாகிய எமக்கு மகிழ்ச்சியான விடயமாகும்.

பௌத்தத்திலேயே அனைத்து சவால்களுக்கும் தீர்வு காணப்படுகிறது என அவர் கூறியுள்ளார். அந்த கூற்று எமக்கு மிகவும் மதிப்புமிக்கதாகும். இந்து சமயம் பிரதானமான போதிலும் இந்திய பிரதமர் பௌத்த மதத்தின் மதிப்பை நன்கு உணர்ந்துள்ளமையானது இலங்கைக்கு பெரும் பலமாகும். புத்தரின் குணங்களான இரக்கம், தயவு மற்றும் எளிமை ஆகியவை கடந்த காலத்திற்கு போன்றே 21 ஆம் நூற்றாண்டிற்கும் அவசியமாகும் என பிரதமர் மோதி அவர்கள் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான உயர்ந்த எண்ணங்கள் கொண்ட அரச தலைவர், எமது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில் அதனை ஏற்று எம்மால் முடிந்தவகையில் அதில் பங்கேற்பதே மதிப்பான விடயமாகும் எனத் தெரிவித்தார்.

குறித்த சந்தர்ப்பத்தில் மல்வத்து பீடத்தின் பதில் பதிவாளர் வணக்கத்திற்குரிய பஹமுனே ஸ்ரீ சுமங்கள தேரர், வணக்கத்திற்குரிய வஸ்கடுவே மஹிந்த வங்ஷ தேரர், வணக்கத்திற்குரிய கந்துனே அஸ்ஸஜி தேரர், சியம் மஹா நிகாயவின் ஸ்ரீ ரோஹண பீடத்தின் அனுநாயக்கர் வணக்கத்திற்குரிய ஓமாரே கஸ்ஸப தேரர், பேராசிரியர் பல்லேகந்தே ரதனசார தேரர் உள்ளிட்ட மஹாசங்கத்தினர் கலந்து கொண்டனர்.



# தமிழகத்தின் மூத்த பஞ்சாயத்து தலைவியாக 90 வயது மூதாட்டி பதவியேற்றார்

தமிழ்நாட்டின் மிக மூத்த பஞ்சாயத்து தலைவியாக நெல்லையைச் சேர்ந்த 90 வயது மூதாட்டி இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். தமிழகத்தில் நடைபெற்று முடிந்த ஊரக உள்ளாட்சித் தேர்தலில் நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட சிவந்திப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் பதவிக்கு போட்டியிட்ட 90 வயது மூதாட்டி பெருமாத்தாள் தன்னை எதிர்த்து போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களையும் டெபாசிட் இழக்கச் செய்தார். மொத்தம் 2060 வாக்குகள் பதிவான நிலையில் 1568 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். 90 வயதில் தான் பெற்ற வெற்றி குறித்து மூதாட்டி பெருமாத்தாள் கூறுகையில், வாக்களித்த மக்களுக்கு நன்றி நாங்கள் எப்போதுமே ஊர் மக்களுக்கு நல்லது செய்கிறோம். அதனால்தான் இந்த வெற்றி சாத்தியமானது. எனக்கு தற்போது 90 வயதாகிறது. ஏழு பரம்பரையாக எங்கள் குடும்பத்தினர் வெற்றி பெற்றுள்ளனர். நான் தற்போது முதல் முறையாக வெற்றி பெற்றுள்ளேன். ஊர் மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பேன் என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

இந்தியா செய்திகள்
India News

# புத்தளம், தப்போவ சரணாலயத்துக்கு வேட்டையாடச் சென்ற மூவர் துப்பாக்கிகளுடன் கைது!




புத்தளம், தப்போவ சரணாலயத்துக்கு அருகிலுள்ள பாவட்டாமடுவ பிரதேசத்துக்கு வேட்டையாடச் சென்ற மூவர் துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், சந்தேக நபர்களை எதிர்வரும் 26ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக கருவலகஸ்வெள வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தப்போவ, பாவட்டாமடுவ பிரதேசங்களைச் சேர்ந்த மூவரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும் வேட்டையாடும் நோக்கில் துப்பாக்கி, கட்டுத்துவக்கு என்பவற்றை எடுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிள்கள் இரண்டில் பாவட்டாமடுவ பிரதேசத்துக்கு பயணித்தனர்.

இது தொடர்பில் வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டத் தகவலையடுத்து அவர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது இரண்டு மோட்டார் சைக்கிள்கள், துப்பாக்கி, கட்டுத்துவக்குடன் தோட்டாக்கள், மின்சாரத் தீப்பந்தங்கள் மூன்று என்பற்றையும் வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

# குஷிநகர் விமான நிலைய தொடக்க விழாவில் "பகவத்கீதை" நூலை பிரதமர் மோடியிடம் வழங்கிய அமைச்சர் நாமல்!



கௌதம புத்தர் பரிநிர்வாணமடைந்த உத்திரபிரதேசத்தில் உள்ள குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி புதன்கிழமை (20) திறந்து வைத்தார்.

இந்த விமான நிலையம் பௌத்த மதத்தவரது ஆன்மீக சுற்றுலாவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தின் துவக்க விழாவானது இலங்கையின் கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட 100க்கும் மேற்பட்ட ப பௌத்த துறவிகள் மற்றும் 12 முக்கிய பிரமுகர்களுடன் புத்தரின் புனித நினைவுச்சின்னங்களை கொண்டு சென்ற விமானம். தரையிறங்கியதன் மூலம் ஆரம்பமாகியது.

புராதன நகரமான குஷிநகர் கௌதம புத்தரின் இறுதி ஓய்வு இடமாகும், அங்கு அவர் இறந்த பிறகு மஹாபரிநிர்வாணம் அடைந்தார்.

இந்த நிகழ்வின் விசேட அம்சமாக, இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே 2500 வருடங்களாகக் காணப்படும் நட்புறவின் அடையாளமாக, பாரத தேசம் இந்த உலகிற்குத் தந்த மிகப் புனிதமான நூலான பகவத்கீதை வெளியீட்டின் முதற் பிரதி, இலங்கயின் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ச அவர்களால் இந்தியப் பிரதமர் மோடி அவர்களுக்கு வழங்கப்பட்டு வெளியீடு செய்துவைக்கப்பட்டது.

அது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பரஸ்பர உறவை மேலும் வளர்க்கும் செயலாகும்.

இலங்கைத் திருநாட்டின் பிரதமர், மாண்புமிகு மகிந்த ராஜபக்ச அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, புத்தசாசன சமய, மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பகவத்கீதை என்னும் இந்நூல் பதிப்பிக்கப்பட்டது.

பாரத தேசம் இந்த உலகிற்குத் தந்த மிகப் புனிதமான நூல் பகவத்கீதை. அந்தப் பெருமைமிகு நூலினை இலங்கையில் வாழ்கின்ற இந்துக்கள் மட்டுமல்லாது, சகல மதத்தவர்களும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டதே இந்த நூல்.

இலங்கைத் திருநாட்டில் வாழுகின்ற அனைத்து மதத்தவர்களும் அறியும் வகையில் பகவத்கீதையில் அமைந்த சமஸ்கிருத சுலோகங்களை, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அறியும் வண்ணம் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவை விட இரண்டு மடங்கு கொரோனா தடுப்பூசிகள் இந்தியாவில் இதுவரை போடப்பட்டமைக்காக உலக சுகாதார அமைப்பு பாராட்டு



இந்தியாவில் 100 கோடி தடுப்பூசிகள் செலுத்தியதற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு உலக சுகாதார அமைப்பின் தலைவர் பாராட்டு தெரிவித்துள்ளார். அமெரிக்காவை விட இரண்டு மடங்கு கொரோனா தடுப்பூசிகள் இந்தியாவில் இதுவரை போடப்பட்டுள்ளன. அதற்காகவே இந்த பாராட்டுக்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த கடந்த ஜனவரி 16-ம் தேதி முதல் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. முதலில் முன்களப்பணியாளர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. அதன்பின்னர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடும் பணி நடந்தது.

கொரோனா பரவல் ஏப்ரல் மாதத்தில் அதிகரித்ததைத் தொடர்ந்து மாநில அரசுகள் கோரிக்கை வைத்ததன் பேரில் கடந்த மே மாதம் முதல் 18 வயதைக் கடந்த அனைவருக்கும் 2 டோஸ் தடுப்பூசிகளை வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

இதனையடுத்து இந்தியா முழுவதும் தடுப்பூசி முகாம்கள் அமைத்து கொரோனா தடுப்பூசி செலுத்தம் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டது. மாநில அரசுகளுக்கு தேவையான தடுப்பூசிகளை மத்திய அரசு கொள்முதல் செய்து இலவசமாக வழங்கி வருகிறது. இந்நிலையில் இந்தியாவில் 100 கோடி தடுப்பூசி என்ற இலக்கை இந்தியா எட்டியுள்ளது.

இந்தியாவில் கடந்த ஜனவரி 16ம் தேதி கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கப்பட்ட நிலையில் தற்போது 100 கோடியை கடந்துள்ளது. இந்த எண்ணிக்கை அமெரிக்காவில் போடப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கையை விட 2 மடங்கு அதிகம் என உலக சுகாதார அமைப்பு இயக்குனர் டெட்ரோஸ் அதனோம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், கொரோனாவில் இருந்து மக்களை பாதுகாக்கவும், தடுப்பூசி இலக்குகளை அடையவும் பெரும் முயற்சி செய்து வரும் பிரதமர் நரேந்திர மோடி, விஞ்ஞானிகள், சுகாதாரத்துறை ஊழியர்கள் மற்றும் இந்திய மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்வதாக அவர் பதிவிட்டுள்ளார்.

சினிமா

# நடிகர் விவேக் மரணத்திற்கு முன் கடைசி ஆசையை நிறைவேற்றிய நடிகர் ஆர்யா



முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாள் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.அதனை முன்னிட்டு மரம் நடுதல் உள்ளிட்ட பல்வேறு சமூக பணிகளில் இளைஞர்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகள் உள்ளிட்ட பலரும் ஈடுபட்டு வருகின்றனர். அவ்வகையில் நடிகர் ஆர்யா என்ற செம்மொழிப் பூங்காவில் இரண்டு மரக்கன்றுகளை நட்டார்.

அதன் பிறகு பேட்டியளித்த அவர், அப்துல்கலாம் ஐயா அவர்களின் பிறந்த நாள் அன்று நான் மரம் நடுவே நின்று மறைந்த நடிகர் விவேக் அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்து இருந்தேன். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக ஒவ்வொரு பிறந்த நாளன்றும் மரக்கன்று நட என் ரசிகர்களுக்கு அறிவுறுத்தி உள்ளேன் என்று கூறியுள்ளார். இதையடுத்து நடிகர் ஆர்யா மரக்கன்று நட்ட புகைப்படங்கள் தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

# தொலைக்காட்சி நடிகை உமா மகேஸ்வரி மரணம்






"மெட்டிஒலி" தொலைக்காட்சி தொடர் மூலம் புகழ்பெற்ற நடிகை உமா மகேஸ்வரி உடல்நலக்குறைவால் சென்னையில் 17-10.2021 அன்று காலமானார். அவருக்கு வயது 40.

திருமுருகன் இயக்கத்தில் தொலைக்காட்சி தொடரில் நடித்து புகழ் பெற்ற உமாமகேஸ்வரி, பல மாதங்களாக உடல் நலக்குறைவால் சிகிச்சைப் பெற்று வந்தார். சிகிச்சை பெற்றுவந்த அவர், இன்று காலை வாந்தி எடுத்து மயக்கமடைந்து உயிரிழந்துள்ளார்.

# 'பெட்ரோல் விலை உயர்வால் 95 சதவீதம் பேருக்கு பாதிப்பே இல்லையாம்' - பாஜக மந்திரி வக்காலத்து



"பெட்ரோலிய விலை ஏற்றம் தவிர்க்க முடியாதது. இந்தியாவுக்கு மட்டுமல்ல, இது ஒரு சர்வதேச பிரச்சினை" என்று தெரிவித்தார்.

பெட்ரோல்-டீசல் விலை உயர்வால் 95 சதவீத மக்கள் பாதிக்கப்படவே இல்லை என்று உத்தரபிரதேச பாஜக மந்திரி கூறியிருக்கிறார்.

இந்தியாவில் பெட்ரேல்ரூடீசல் விலை கட்டுக்குள் இல்லாமல் கடுமையாக உயர்ந்து கொண்டே செல்கிறது. ஏற்கனவே பெட்ரோல் விலை லிட்டருக்கு 100 ரூபாயைத் தாண்டிச் சென்று விட்ட நிலையில் இப்போது டீசல் விலையும் பல நகரங்களில் 100 ரூபாயை கடந்து விட்டது.

இது பொதுமக்களை கடுமையாகப்பாதித்துள்ள நிலையில், இதனால் 95 சதவீத மக்களுக்கு பாதிப்பே இல்லை என்று பாஜக மந்திரி ஒருவர் கூறியிருக்கிறார்.

உத்தரபிரதேச அமைச்சரான உபேந்திர திவாரி என்னும் அவர் இதுகுறித்து கூறியதாவது, "நாட்டின் எரிபொருள் விலையையும், தனிநபர் வருமானத்தையும் ஒப்பிடும்போது, எரிபொருள் விலை மிகவும் குறைவாகவே இருக்கிறது. ஒரு சிலர் மட்டுமே கார் போன்ற 4 சக்கர வாகனங்களைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களுக்குத்தான் பெட்ரோல் தேவை. மற்றபடி 95 சதவிகித மக்களுக்கு பெட்ரோல் அத்தியாவசியத் தேவையே இல்லை. அதனால் பாதிப்பே இல்லை. நாட்டில் 100 கோடி கோவிட் தடுப்பூசி டோஸ்களை அரசு இலவசமாகவே வழங்கியுள்ளதையும் நினைத்துப்பார்க்கவேண்டும்". இவ்வாறு உபேந்திர திவாரி தெரிவித்தார்.

முன்னதாக, மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி எரிபொருள் விலை உயர்வுக்கு பதிலளித்துப் பேசும்போது,

# டீசலுக்காக அரசு பஸ்சே திருட்டுப்போனது



பெட்ரோல் விலை உயர்வுக்கு ஆளும் பாஜக தலைவர்கள் இப்படி சப்பைக்கட்டு கட்டி வரும் நிலையில் பாஜக ஆளும் கர்நாடக மாநிலத்தில் டீசல் திருடுவதற்காக ஒருவர் அரசு பஸ்சையே கடத்திச் சென்று விட்டார். இதுபற்றிய விவரம் வருமாறு:

கர்நாடக மாநிலம் தும்கூரு மாவட்டம் குப்பி பேருந்து நிலையத்தில் அரசுப் பேருந்து ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் கடைசி டிரிப் முடிந்து நிறுத்தப்பட்டது. ஓட்டுநர் ஹனுமந்தராயா அதை நிறுத்திவிட்டு தூங்கச் சென்று விட்டார்.

மறுநாள் காலை பேருந்தை எடுப்பதற்காக பேருந்து நிலையத்துக்கு காலை 6 மணிக்கு அவர் வந்தபோது, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தைக் காணவில்லை.

இதையடுத்து அவர் பணிமனை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார். இதைத்தொடர்ந்து போலீசார் காணாமல் போன அரசுப் பேருந்தை தேடிவந்தனர்.

அந்தப் பேருந்தில் ஜி.பி.ஆர்.எஸ் கருவி பொருத்தப்பட்டிருந்ததால் அது இருக்கும் இடத்தைக் கண்டறிந்தனர். அப்பேருந்து குப்பி பேருந்து நிலையத்தில் இருந்து 30 கி.மீ தொலைவில் உள்ள ஜனனஹள்ளி பகுதியில் நின்று கொண்டு இருப்பது தெரியவந்தது.

அங்கு விரைந்த போலீசார் பேருந்தை மீட்டனர். ஆனால், பேருந்தில் இருந்த டீசல் முழுமையாக திருடப்பட்டிருந்தது. எனவே, டீசலுக்காக பேருந்து கடத்தப்பட்டிருக்கலாம் என கருதுவதாக தெரிவித்த போலீசார், அதைத் திருடியவர் யார் என்று விசாரித்து வருகிறார்கள்.

**- மணிராஜ், திருநெல்வேலி.**

சரணம் சரணம்
சாய் சரணம்

எங்களது S7 PRODUCTIONS நிறுவனம்
சாய் பாபாவின் அற்புதங்கள்,
திரைப்படத்தை 5 மொழிகளில் பிரம்மாண்ட
முறையில் தயாரிக்க உள்ளோம்.

சாய் பாபா பக்தர்கள்
1 ரூபாய் முதல்
நன்கொடை வழங்கலாம்.

சாய்பாபா பக்தர்கள்
தங்கள் வாழ்வில் சாய்பாபா நிகழ்த்திய
அற்புதங்களை எங்களுக்கு எழுதி அனுப்பவும்.
நாங்கள் அதனை பரிசீலித்து
திரைப்படத்தில் காட்சிகளாக வைக்கப்படும்.

Accounts Details
The South Indian Bank Limited
ST. THOMAS MOUNT Branch, Chennai - 16.
A/C No. : 0500730000000351
IFSC. : SIBL0000540 (or)
Cheque / DD: S7 PRODUCTIONS
G-Pay & Phone Pay :9445859988

தொடர்புக்கு முகவரி:
S7 PRODUCTIONS
No.24/25, AVM Studio,
Cine Lab Campus, NSK Salai,
Vadapalani,Chennai - 26.
Tamilnadu, India.
Contact & Whatsapp:
044-48685857 / 9445859988

MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம்
உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும்.
உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400



Scarborough
201-4433 Sheppard Ave. E
Scarborough, ON, M1S 1V3

Toronto/Downtown
800-120 Eglinton Ave. E
Toronto, ON, M4P 1E2

North York
306-1280 Finch Ave. W
North York, ON, M3J 3K6

Mississauga
110-93 Dundas Street E.
Mississauga, ON, L5A 1W7

Brampton
201-7990 Kennedy Rd. South,
Brampton, Ontario, L6W 0B3

Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com



Ajay Oberoi
Experienced
Credit Counsellor

# ரஜினியின் 'அண்ணாத்த' படத்தில் அறிமுகமாகும் இலங்கை நாதஸ்வரக் கலைஞர்

இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாதஸ்வரக் கலைஞரான கே.பி.குமரன், தீபாவளி அன்று வெளியாக உள்ள ரஜினியின் 'அண்ணாத்த' படத்தில் இசையமைப்பாளர் இமான் இசையில் அறிமுகமாகின்றார். சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் 168வது படமான 'அண்ணாத்த' வெளியீட்டிற்காக ரஜினியின் ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். அண்ணாத்த திரையரங்குகளில் நவம்பர் 4 தீபாவளி அன்று வெளியாகவுள்ளது.

இந்தப் படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்க, சிவா இயக்கி உள்ளார். இந்தப் படத்தில் குஷ்பு, மீனா, கீர்த்தி சுரேஷ், நயன்தாரா, சூரி, சதீஷ், பிரகாஷ்ராஜ், ஜெகபதி பாபு உள்ளிட்ட பலர் ரஜினியுடன் நடித்துள்ளனர். அண்ணாத்த படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் கடந்த செப்டம்பர் 10 விநாயகர் சதுர்த்தி அன்று வெளியிடப்பட்டது. தொடர்ந்து ரஜினிகாந்தின் பரபரப்பான சண்டைக் காட்சிகள் கொண்ட படத்தின் டீசரும் வெளியாகின. படத்தில் இசையமைப்பாளராக இமான் பணிபுரிந்துள்ளார். கவிஞர் விவேகா எழுதி, மறைந்த பிரபலப் பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் கடைசியாகப் பாடியிருந்த 'அண்ணாத்த அண்ணாத்த' என்ற பாடல் முதலாவதாக வெளியாகி திரையிசை ஆர்வலர்களை நெகிழ வைத்தது.



இரண்டாவதாக கவிஞர் யுகபாரதிய எழுதி ஸ்ரேயா கோஷல், சித் ஸ்ரீராம் ஆகியோர் இணைந்து பாடிய 'சாரல் காற்றே' என்ற பாடலும், மூன்றாவதாக கவிஞர் மணி அமுதவன் எழுதிய அந்தோணிதாசன், வந்தனா சீனிவாசன், நாகேஷ் அஸிஸ் ஆகியோர் இணைந்து பாடியுள்ள 'மருதாணி' என்ற பாடலும் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இதற்கிடையில் இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாதஸ்வரக் கலைஞரான கே.பி.குமரன் என்பவர் ரஜினியின் 'அண்ணாத்த' படத்தில் இசையமைப்பாளர் இமான் இசையில் அறிமுகமாகி உள்ளார். இந்தத் தகவலை இசையமைப்பாளர் இமான் தனது ட்விட்டர் பக்கத்தில் உறுதி செய்தார்.

இலங்கையில் உள்ள யாழ்ப்பாண மாவட்டம், கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த கலைப் பாரம்பரியத்தைச் சேர்ந்த நாதஸ்வர சகோதரர்கள் பஞ்சமூர்த்தி, கானமூர்த்தி. இதில் பஞ் சமூர்த்தியின் இளைய மகன்தான் கே.பி. குமரன். குமரன் தனது தந்தையின் மூலம் சிறுவயதிலிருந்தே கர்நாடக சங்கீதத்தையும், நாதஸ்வரத்தையும் கற்றுக் கொண்டதுடன் தன் தந்தையோடு சேர்ந்து கோயில்கள் மட்டுமின்றி, ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் நடைபெற்ற கச்சேரிகளில் பங்கேற்க ஆரம்பித்தார். பதின்வயதுகளில் ஸ்வரங்களைப் புதிய பாணியில் பாடக்கூடிய திறனும் பெற்றதால் இலங்கையில் முன்னணி இசைக் கலைஞராகவும் வளர ஆரம்பித்தார்.

இலங்கையில் இவரது நாத சங்கம நிகழ்வுகள் நல்ல வரவேற்பைப் பெற்றுக் கொடுத்துள்ளன. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணை தூதரகத்தில் தூதுவர் ராகேஷ் நட்ராஜை கே.பி. குமரன் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது இந்திய இலங்கைக்கான கலாச்சார பிணைப்பை இசையின் மூலம் மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கேட்டுக் கொண்டார். அண்ணாத்த படத்தில் கே.பி.குமரன் நாதஸ்வரக் கலைஞராக பணியாற்றி இருப்பதால் ரஜினி நடித்த அண்ணாத்த திரைப்படம் இலங்கையிலும் எதிர்பார்ப்பினை ஏற்படுத்தி உள்ளது.

## தனி சின்னத்தில் களமிறங்க மதிமுகவை பலப்படுத்துவாரா துரை வைகோ?



மதிமுகவில் துரை வைகோவுக்கு பதவி அளிக்கப்பட்டதற்கு எதிர்ப்பும் ஆதரவும் எழுந்துள்ள நிலையில், தனி சின்னத்தில் போட்டியிடும் அளவுக்கு கட்சியை வலிமை மிக்கதாக அவர் மாற்றுவாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.''என் மகன் துரை அரசியலுக்கு வரமாட்டார்'' என வைகோ உறுதியாக கூறிவந்த நிலையில், நேற்று முன்தினம் சென்னையில் நடந்த மதிமுக மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உயர்நிலைக் குழு கூட்டத்தில் ரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, துரை வைகோவுக்கு கட்சிப் பணியாற்ற வாய்ப்புவழங்க முடிவு செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து, மதிமுக தலைமை நிலையச் செயலாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த கூட்டத்தில் கட்சியின்அவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி கலந்து கொள்ளவில்லை. வைகோ மகனுக்கு கட்சியில் பதவிவழங்குவதில் அவருக்கு விருப்பம் இல்லை என்று கூறப்படுகிறது.அதுபோல துரை வைகோவுக்கு கட்சிப் பதவி வழங்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து மதிமுக இளைஞர் அணி செயலாளர் ஈஸ்வரன், கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இப்படி கட்சிக்குள் ஆதரவும், எதிர்ப்பும் எழுந்துள்ள நிலையில், துரை வைகோவுக்கு பல்வேறு சவால்கள் காத்திருப்பதாக மதிமுகவினர் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக மதிமுக நிர்வாகிகள் சிலரிடம் பேசியபோது, ''வாரிசு அரசியலை எதிர்த்துதான் 1994 ல் மதிமுகவை வைகோ தொடங்கினார். இப்போது அவரதுமகன் அரசியலுக்கு வந்திருப்பதால் கடும் விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அவர் எதை செய்தாலும் தந்தையுடன் ஒப்பிட்டு விமர்சனம் செய்வார்கள். இவற்றையெல்லாம் கடந்துதான் அவர் அரசியல் களத்தில் நிற்க வேண்டும்'' என்றனர்.கடந்த 1996ல் மதிமுக சந்தித்த முதல் தேர்தலில் அக்கட்சிஓரிடத்தில்கூட வெற்றி பெறவில்லை. ஆனாலும், அக்கட்சிக்கு கிடைத்த வாக்கு சதவீதமும், வைகோவின் ஆளுமையும் மதிமுகவை தமிழக அரசியலில் முக்கிய கட்சியாக வைத்திருந்தது.

ஆனால், இப்போது மதிமுகவின் நிலை, தனி சின்னத்தில் போட்டியிட முடியாத அளவுக்கு உள்ளது. 2019 மக்களவைத் தேர்தலில் மதிமுக ஒரு மக்களவைத் தொகுதியிலும், கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் 6 தொகுதிகளிலும் திமுகவின் உதயசூரியன் சின்னத்தில்தான் போட்டியிட்டது. எனவே, அடிமட்டத்தில் இருந்து கட்சியை வலுப்படுத்த வேண்டிய மிக முக்கியமான சவால்துரை வைகோவுக்கு காத்திருக்கிறது. இந்த சவால்களை எதிர்கொண்டு தனி சின்னத்தில் போட்டியிடும் அளவுக்கு மதிமுகவை வலிமைமிக்க கட்சியாக மாற்றுவாரா என்ற எதிர்பார்ப்பு அக்கட்சியினரிடம் ஏற்பட்டுள்ளது.

## கல்வெட்டு திறப்பு: சசிகலா மீது அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் போலீஸில் புகார்



சசிகலா மீது அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் போலீஸில் புகார் அளித்துள்ளார். சென்னை மாம்பலம் காவல்நிலையத்தில் அவர் புகார் மனுவை அளித்துள்ளார்.

மாம்பலம் காவல் நிலையம் காவல் ஆய்வாளரிடம் கொடுக்கப் பட்ட அந்தப் புகாரில் இருப்பதாவது: அதிமுகவின் அமைப்புச் செயலாளராக நான் (டி.ஜெயக்குமார்) தங்களின் கவனத்துக்கு நடராஜன் மனைவி வி.கே.சசிகலாவின் நடவடிக்கைகள் குறித்து கொண்டு வருகிறேன்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் நடந்த பல்வேறு குழப்பங்களால் தேர்தல் ஆணையத்திடம் அதிமுக மற்றும் இரட்டை இலை சின்னத்துக்கு உரிமைப் போர் ஏற்பட்டது. அதில் இரட்டை இலை சின்னம் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுகவுக்கே சொந்தம் என்பதை தேர்தல் ஆணையம் உறுதி செய்துள்ளது.அதன் பின்னரும் கூட இவ்விவகாரம் தொடர்பாக வி.கே.சசிகலா டெல்லி உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என அடுத்தடுத்து மனு கொடுத்துப் பார்த்தார்.ஆனால், அவை எடுபடவில்லை. உச்ச நீதிமன்றம் சசிகலாவின் மனுவை தள்ளுபடி செய்தது. சீராய்வு மனுவும் தள்ளுபடியானது.

எல்லா பக்கமும் தோல்வியைத் தழுவியதால் இப்போது குழப்பத்தை விளைவித்து தன்னைத் தானே அதிமுக பொதுச் செயலாளர் எனப் பிரகடனப்படுத்திக் கொண்டு வருகிறார்.அதிமுகவுக்கும் சசிகலாவுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆனாலும் அதிமுகவின் பொதுச் செயலாளர் எனக் கூறி குழப்பம் விளைவிக்கிறார். அவர் மீது ஐபிசி 419 கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.கடந்த அக்டோபர் 17 ஆம் தேதி எம்ஜிஆர் நினைவு இல்லத்தில் மாலை அணிவித்து வி.கே.சசிகலா மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்துஎம்.ஜி.ஆர். நினைவு இல்லத்தில் அதிமுக கொடியையும் ஏற்றினார். அங்கு நினைவு கல்வெட்டை திறந்துவைத்தார். அதில், அதிமுக பொதுச்செயலாளர் வி.கே.சசிகலா என்று பொறிக்கப்பட்டிருக்கிறது.இது முற்றிலும் சட்டவிரோதமானது.இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.இவ்வாறு அந்தப் புகாரில் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

## புதுச்சேரியில் இறைச்சியில் விஷம் வைத்து 7 நாய்கள் கொலை: போலீஸார் விசாரணை

புதுச்சேரி சுதந்திர பொன்விழா நகர்ப் பகுதியில் உள்ள 7 தெரு நாய்களை இறைச்சி மூலம் விஷம் வைத்து கொலை செய்தோரை போலீஸார் தேடி வருகின்றனர். வாயில்லா ஜீவன்களைக் கொன்றவர்களைக் கடுமையாக தண்டிக்க சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். புதுச்சேரி காமராஜர் நகர்ப் பகுதியில் உள்ளது சுதந்திர பொன் விழா நகர். அப்பகுதியில் பல அடுக்குமாடி குடியிருப்புகள் தனியாக அமைந்துள்ளது. 200க்கும் மேற்பட்டோர் இக்குடியிருப்புகளில் வசித்து வருகின்றனர்.

இந்தப் பகுதியில் 15 க்கும் மேற்பட்ட தெரு நாய்கள் இருந்தன. இதனை அப்பகுதியில் உள்ள குடியிருப்பு வாசிகளே பராமரித்து வளர்த்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று 10க்கும் மேற்பட்ட நாய்கள் திடீரென வாந்தி எடுத்தும், உயிருக்கு துடித்துக்கொண்டும் இருந்தன. இதனைப் பார்த்த அப்பகுதி பொதுமக்கள் உடனடியாக தண்ணீர், மருந்து கொடுத்துள்ளனர். இருந்த போதும் 7 நாய்கள் அடுத்தடுத்து உயிரிழந்தன.

அப்பகுதி மக்கள் இது குறித்து கோரிமேடு தன்வந்திரி காவல் நிலையத்திற்கு தகவல் அளித்தனர். போலீஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை மேற் கொண்டதில் அருகில் வசிக்கும் சிலர் நாய்களைக் கொல்லும் நோக்கிலேயே கோழிக்கறி மூலம் செடிகளுக்கு பயன்படுத்தும் கிருமி நாசினிகளை கொண்டு கொலை செய்திருப்பது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து விசாரணை மேற்கொண்டு குற்ற வாளிகளுக்கு கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# ஈழத்தில் சைவம்மீது ஒடுக்குமுறை! தடுக்க வேண்டும் இந்தியா

**- தீபச்செல்வன்**

**தெ**ன்னாடுடைய சிவனின் சைவம் தழைத்தோங்கிய பூமி ஈழம். ஈழத்தில் தமிழர்கள் சைவர்கள் என்பதாலும் தான் அழித்து ஒடுக்கப்படுகின்றனர். ஈழம் என்கிற இலங்கைத் தீவு தமிழ் மக்கள் தனித்து வாழ்ந்த பூமி என்பதற்கு பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. ஈழத்தை சிவபூமி என மூவாயிரம் ஆண்டுகள் தமிழர் நிலத்தில் வாழ்ந்த திருமூலர் என்கிற சித்தர் அழைத்திருக்கிறார். சிவாலயங்கள் நிறைந்த ஈழம், சைவப் பண்பாடு தழைத்தோங்கிய தமிழர் பூமியாக பெயர் பெற்றிருக்கிறது. அத்துடன் சங்க இலக்கியங்கள், தேவாரப் பதிகங்கள், சோழர்கால காப்பியங்கள் என பல்வேறு இலக்கிய ஆதாரங்கள் ஈழத்தின் புராதனம் குறித்துப் பேசுகின்றன. அத்துடன் ஈழத்தின் பல பகுதிகளிலும் காணப்படுகின்ற சிவாலயங்களும் தொல்பொருட்களும் ஈழத்தின் பூர்வீகத்திற்குத் தக்க சான்றுகளாகும்.

ஈழப் போராட்டம் என்பது எழுபது வருடங்களாக நடக்கிறது என்று சொல்லப்பட்டாலும் ஈழத்தை பௌத்த சிங்கள பூமியாக்கும் வேலை விஜயனின் வருகையுடன் தொடங்கியது. இன்றைய தென்னிலங்கையின் பல இடங்களில் சைவ ஆலயங்கள் பலவும் இரண்டாயிரம் வருடங்களாக இருந்திருக்கின்றன. அதற்கு இன்றும் புராதன சின்னமாய் இருக்கிற கதிர்காமமும் இல்லாமல் ஆக்கப்பட்ட தொண்டீச்சரம் என்ற சிவாலயமும்தான் தக்க சான்றுகள் ஆகின்றன. ஆக ஈழத்தை பௌத்த சிங்கள பூமியாக்குகின்ற வேலை பல ஆண்டுகளாக நடக்கின்றன என்ற உண்மையின் அடிப்படையில்தான் ஈழம் இன்று எதிர்கொள்ளும் ஆபத்துக்களை நாம் அணுக வேண்டியுள்ளது.

இதன் ஒரு பகுதியாகத்தான் ஈழத்தின் வடக்கே முல்லைத்தீவின் குருந்தூர் மலைப் பகுதியில் சிங்கள பௌத்தத்தை திணிக்கின்ற முயற்சிகளை சிங்கள அரசு துவங்கியுள்ளது. இலங்கையில் தற்போது மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்சவினரின் ஆட்சி நடைபெற்று வருகின்றது. இவர்களின் காலத்தில் கடந்த காலத்தில் சிங்கள பௌத்த மயமாக்கல் முயற்சிகள் பெருமெடுப்பில் நடைபெற்று வந்தன. (மைத்திரி ரணில் ஆட்சியில் வடக்கு கிழக்கில் 1000 விகாரைகள் அமைக்கின்ற திட்டம் அறிவிக்கப்பட்டது இன்னொரு விடயம்) போரில் தமிழர் தாயகத்தை கைபற்றிய சிங்கள அரசு, வடக்கு கிழக்கில் தமிழர்களின் புராதன இடங்கள் முழுவதும் பௌத்த விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் நிறுவி தமிழின அழிப்பை மேற்கொள்ளும் வேலைகளைத் துவங்கியது.

முழுக்க முழுக்க சைவமும் தமிழும் தழைத்தோங்கிய நிலத்தில் 2009 முள்ளிவாய்க்கால் இன அழிப்புப் போருக்குப் பின்னர், சிங்களய பௌத்த ஆதிக்கச் சின்னங்கள் நிறுவப்பட்டுள்ளன. தமிழர்களின் முக்கிய நகரங்களில் எல்லாம் பௌத்த விகாரைகளை கட்டி எழுப்பிய சிங்கள இராணுவத்தினர் அதற்காக தென்னிலங்கையில் இருந்து பிக்குகளை வரவழைத்து குடியேற்றம் செய்துள்ளனர். அத்துடன் அரச மரங்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் புத்தர் சிலைகள் எழுப்பப்பட்டுள்ளன. அத்துடன் சைவ ஆலயங்கள் காணப்படும் இடங்களிலும் விகாரைகளை சொருகுகின்ற வேலையை செய்துள்ளனர்.

முல்லைத்தீவு செம்மலை பிள்ளையார் ஆலயத்தில் மிக பிரமாண்டமாக அமைக்கப்பட்ட விகாரை, கனகாம்பிகைக் குளம் அம்மன் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை போன்றவற்றை இங்கே குறிப்பிடலாம். ஏன் சைவ ஆலயங்களுக்குள் புத்தர் சிலைகளையும் பௌத்த விகாரைகளையும் சொருக வேண்டும்? தமிழர்களை அழித்ததுபோலவே தமிழர்களின் கடவுள்களையும் அழிக்கவே இந்த திட்டத்தை சிங்கள அரசும் இராணுவமும் முன்னெடுத்து வருகின்றது.

தமிழர் தாயகம் எங்கும் இத்தகைய ஆக்கிரமிப்புக்கள் முடுக்கி விடப்பட்டுள்ள நிலையில், குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிங்களமயமாக்கல் மற்றும் பௌத்த சிங்களமயமாக்கல் என்பது தனித்தனியாகவும் கூட்டாகவும் முன்னெடுக்கப்படுகின்றது. தமிழர் தாயகத்தில் முல்லைத்தீவும் திருகோணமலையும் இதய மாவட்டங்கள் ஆகும். அத்துடன் இந்த மாவட்டங்களில் சைவ சமயத்திற்குரிய பல தொல்பொருட்கள் புதைந்து கிடக்கின்றன. இவை ஈழ மக்களின் பூர்வீகத்தின் ஆதாரங்களாகவும் கருதப்படுகின்றன.

இந்த நிலையில் இந்த மாவட்டங்களில் ஒரு புறத்தில் சிங்களக் குடியேற்றம் மிக வேகமாக முன்னெடுக்கப்படுகின்றது. இன்னொரு புறத்தில் தமிழர்களின் பூர்வீகக் கோயில்களை துடைத்தழித்து அங்கே புத்தர் சிலைகளும் விகாரைகளையும் கட்டுகின்ற முயற்சிகளும் நடக்கின்றன. இதனை ஆளும் சிங்கள அரசும், பேரினவாதிகளும் பெரும் வேகத்தில் செய்து வருவது ஈழத் தமிழ் மக்களை பெரும் அச்சத்திற்கும் பீதிக்கும் தள்ளியிருக்கிறது. திருகொணமலை மாவட்டத்தில் நகரம், குச்சவெளிப் பிரதேசம், சம்பூர் பிரதேசம் என்பன சிங்கள அரசின் பலதரப்பட்ட ஆக்கிரமிப்பில் சிக்கித் தவிக்கின்ற பகுதிகளாகும்.

தென்னிலங்கையில் பானந்துறை சைவ ஆலயத்தில் 1958 இல் பூசகர் எரியூட்டப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டமை போன்ற பல கோயில் இனக்கொலைகளை ஈழம் கண்டிருக்கிறது. மிகச் சமீபத்தில் 2019இல் ஆலய நில உரிமைக்காக போராடிய கன்னியா வெந்நீரூற்று தமிழ் சித்திர் அகத்தியார் அடிகள்மீது சிங்களப் பேரினவாதிகள் வெந்நீர் ஊற்றி தாக்குதல் நடத்தியமையும் இதன் வரலாற்றுத் தொடர்ச்சியாகும். கோயில்களில் உயிர் தஞ்சம் புகுந்த ஈழ மக்கள் கோயில்களில் விமானத் தாக்குதல்களாலும் எறிகணைகளாலும் இனவழிப்பு செய்யப்பட்டமையும் நீண்ட இரத்தக்கறை படிந்த வரலாறு ஆகும். கோயில்களில் ஈழ மக்களுடன் இந்து - சைவத் தெய்வங்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

ஆலயத்தில் வழிபாடு செய்தமைக்காக மக்கள் சிறை வைக்கப்பட்ட நாடு இலங்கைதான். தெய்வங்கள்மீதும் ஒடுக்குமுறையும் ஆலயங்கள்மீது ஆக்கிரமிப்பும் தொடர்கின்ற நாடும் இலங்கைதான். பேரினவாத அரசின் தொல்லியல் திணைக்களம் உண்மையில் சிங்கள இராணுவத்தினரின் ஆயுதம் ஏந்ததாத ஒரு அமைப்பாகவே இருக்கிறது. அது தமிழர்களின் நிலத்தை இன வேட்டையாடத் துடிக்கின்றது. ஈழத்தின் தொன்மை சான்றுகள் புதைந்த தென்னிலங்கையில் சென்று இதோபோன்ற ஆராய்ச்சிகளை நடாத்த முடியுமா? தென்னிலங்கையில் அழிக்கப்பட்ட ஈழச் சிவாலயங்களை நிறுவ தமிழர்களுக்கு அனுமதி கிடைக்குமா?

இப்படி ஈழத்தில் சைவ சமயத்தை ஈழத்தில் அழித்தும் ஒடுக்கியும் வருகின்ற ஸ்ரீலங்கா அரச தலைவர்கள் திருப்பதியில் சென்று தலையை மோதுகின்றனர். நவராத்திரிக்கு திருநீறு பூசி பொட்டு வைத்து படம் காட்டுகிறார். படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் என்றால் போல இந்தியாவில் உள்ள கோயில்களில் தேவாரத்தைப் பாடிவிட்டு ஈழத்தில் உள்ள கோவில்களை இடிக்கின்றனர். பௌத்தம் இந்து மத்தின் உட்பிரிவுகளில் ஒன்று என இந்தியாவுக்கு முகம் காட்டும் ஸ்ரீலங்கா பௌத்த சமயம் வழி நாம் நட்பு நாடுகள் என்று சீனாவுடன் உறவு கொள்கிறது. அரசியல் - மத சதுரங்க ஆட்டத்தில் பாதிக்கப்படுவது ஈழத் தமிழ் மக்களே.

தற்போது இந்தியாவின் ஆளும் கட்சியின் முக்கியஸ்தர் சுப்பிரமணியன் சுவாமி இலங்கை வந்து ராஜபக்சவினருடன் பேச்சு வார்த்தையை நடாத்தி அரசியல் செய்யப்படுவது குறித்த செய்திகளும் இந்தியாவை கவர்ந்திழுத்து ஈழத் தமிழ் மக்களை ஒடுக்கும் செயற்பாடு என்பது வெளிப்படையானது. இதுவும் ஈழத்தில் மிகக் கடுமையான மத ஒடுக்குமுறைகள் வன்முறைகள் யாவும் நிகழ்த்தப்பட்டு நீதி மறுக்கப்பட்ட நிலையில்தான் நடக்கிறது. ஈழத்தில் தமிழர்களை தம் நாட்டு சமயத்தினர் என்பதற்காகவேணும் இந்தியா கரிசனை கொள்ள வேண்டும். இந்து தர்மத்தின் அடிப்படையில்தான் இந்திய தேசத்தில் ஆட்சிகள் நடக்கின்றன என்றால் சிங்கள அரசின் தந்திரமான இனவழிப்பு மற்றும் சிறுபான்மை மத ஒடுக்குமுறையை புரிந்து ஈழத்தில் இந்து - சைவ மதம்மீது மேற்கொள்ளப்படும் இனவழிப்புக் கொடுமைகளை இந்தியா தடுக்க வேண்டும்.

## காந்தி எப்போதும் போல தலை குனிந்தார்

உயிர் காக்க உழைத்தவரின்
உயிர் குடித்த கொடியவரை சபிப்போம்
படங்களில் சிரிக்கும் புனிதர்களை
போற்றியே துதிப்போம்
ஒரு போதும் மறவோம்
சமாதானம் காத்திட கடல் கடந்து வந்தவர்கள்
சமர் செய்யத் துணிந்தனர்
மருத்துவ மகாத்மாக்களை மண்ணுக்குள்
புதைத்து
மார் தட்டி நின்றனர்.
காந்தி எப்போதும் போல தலை குனிந்தார்

**-மலையன்பன்**


**From the Government's Election Platform:**

## Canada Is Set to Become a Global Leader in Levelling the Playing Field for Local News

**Levelling the Playing Field with Digital Giants**

In 2021, most Canadians get their news from digital platforms which drives key advertising revenues away from Canadian news organizations and towards platforms owned by social media companies and digital giants.

**A re-elected Liberal Government will:**

- Introduce legislation, within 100 days, that would require digital platforms that generate revenues from the publication of news content to share a portion of their revenues with Canadian news outlets. This legislation would be based on the Australian model and level the playing field between global platforms and Canadian news outlets. The bill will also allow news publishers to work together to prepare for collective negotiation.

In a democracy, nothing is more vital than a healthy, vibrant local news media. But the threats from Big Tech are increasing every day.

The government's 100-day plan will place Canada in the front ranks of global leadership standing up for local news. The commitment is clear. All parties in Parliament support decisive action. Now is the time to act and pass legislation by early 2022.

**News Media Canada, representing hundreds of trusted titles in our print and digital media industry, and our news publishing partners across Canada and around the world, call on Canadian parliamentarians to work together to level the digital playing field between local news and Big Tech.**

News Media Canada
Médias d'Info Canada

News Media Canada (NMC, Canada) – BC & Yukon Community News Media Association (BCYCNA, Canada) – Alberta Weekly Newspapers Association (AWNA, Canada) – Saskatchewan Weekly Newspapers Association (SWNA, Canada) Manitoba Community Newspapers Association (MCNA, Canada) – Ontario Community Newspapers Association (OCNA, Canada) – Quebec Community Newspaper Association (QCNA, Canada) – Hebdos Québec (HQ, Canada) National Ethnic Press and Media Council of Canada (NEPMCC, Canada) – Inter American Press Association (IAPA) – Iberoamerican Telecommunications Organization (OTI) – International Association of Broadcasting (IAB)



# 'இளவரசரின்' இந்திய பயணம்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)

**சி**ல செய்திகள் நேரடியாகச் சொல்லப்படும், சில மறைமுகமாகக் குறிப்புணர்த்தப்படும். அந்தக் குறிப்புணர்த்தல் எப்படியான சந்தர்ப்பத்தில் வெளிப்படையாகச் செய்யப்படுகிறது என்பது அதற்குரிய விளக்கத்தை அளிக்கும்.

நாமல் ராஜபக்சவின் இந்திய விஜயமும் அப்படித்தான் தோன்றுகிறது. புத்த பகவான் மகாபரிநிர்வாணம் அடைந்த நாளான வைகாசி மாத பௌர்ணமியன்று இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலத்தில் அவர் உயிர்நீத்த குஷிநகரில் புதிய விமான நிலையம் ஒன்றை இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி திறந்து வைத்தார். பௌத்தத்தை மையப்படுத்தும் சுற்றுலாத்துறைக்கு இந்த விமான நிலையம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும், அதன் மூலம் பன்னாட்டுப் பிரயாணிகள் இந்தியா வந்து புத்தரின் வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடைய இடங்களைச் சென்று பார்க்கச் சௌகரியமாக இருக்குமென்று இந்திய அரசு கூறுகிறது.

அந்த விமான நிலையத்திற்கு வந்த முதல் விமானம் கொழும்பிலிருந்து பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மகனும் அமைச்சருமான நாமல் ராஜபக்ச தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட புத்த பிக்குகளை ஏற்றி வந்தது. இது இந்திய-இலங்கை உறவுகளை மேலும் வலுப்படும் என்பதற்கு ஒரு சான்று என்று இரு நாட்டின் தரப்பிலும் கூறப்பட்டது. ஆனால் இந்த கருத்து மேற்பூச்சு மட்டுமே அதற்கு அப்பாற்பட்டு அதில் செய்தி உள்ளது என்பதே யதார்த்தம்.

இலங்கையில் யார் ஆட்சி செய்தாலும் அவர்கள் பௌத்தத்தை அடிப்படையாக வைத்தே ஆட்சி செய்வார்கள் என்பது வரலாறு. அது அப்படியேதான் தொடரும். நாட்டின் அரசியல் சாசனத்திலும் பௌத்தத்திற்கே முன்னுரிமை என்பது மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது. எனவே இலங்கையை தனது கட்டுப்பாட்டில் வைக்க (அல்லது ராஜதந்திர வார்த்தைகளில் கூறுவதென்றால் மிகவும் நட்பு தேசம் அல்லது மிகவும் முன்னுரிமை அளிக்கப்படும் தேசம் என்று கூறப்படுவது) இந்தியாவிடம் உள்ள மிகவும் சக்திவாய்ந்த ஒரு வழி புத்த பகவான் மற்றும் பௌத்த ஆதரவு எனும் நிலைப்பாடாகும்.



அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் தான் இந்தியா இந்த விமான நிலையத்தின் திறப்பு விழாவிற்கு இலங்கைக்குச் சிறப்பு அழைப்பை விடுத்தது. பௌத்தத்தைப் பின்பற்றும் தாய்லாந்து, லாவோஸ், பர்மா, கம்போடியா, ஜப்பான் போன்ற நாடுகளின் தூதர்கள் அந்த விழாவில் பங்குபெற்றாலும், இலங்கை சார்பில் "பட்டத்து இளவரசர்" நாமல் ராஜபக்ச தலைமையில் ஒரு பெரிய குழு இந்தியா வந்ததே மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட்டது. இலங்கையை தமது சொற்படி கேட்க வைக்க வேண்டுமென்றால், அங்கு அரசைவிட அதிகம் பலம் வாய்ந்தவர்கள் பௌத்த குருமார்கள் என்பதை இந்தியா நன்கு அறிந்துள்ளது. அந்த பிக்குமார்களை "குஷியாக" வைத்திருந்தால், ஆட்சியாளர் தமது சொல் கேட்பார்கள் எனும் இந்திய அரசின் கணக்கில் நியாயம் இருக்கவே செய்கிறது. பௌத்தத்தை மையப்படுத்தி ஒரு உத்தியை முன்னெடுக்கும் போது அதை ராஜபக்சேக்கள் நிராகரிக்க முடியாது. கடவுள் நம்பிக்கையற்ற கம்யூனிஸ சீனாவை தள்ளி வைத்து இலங்கையைத் தனது கட்டுப்பாட்டில் வைப்பது இந்தியாவின் கேந்திர ரீதியான பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

கோட்டாபய ராஜபக்ச பதவியேற்றவுடன் முதல் பயணமாக இந்தியாவுக்கு சென்றது, மஹிந்த ராஜபக்ச தொடர்ச்சியாக சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இந்தியா செல்வது, அதிலும் குறிப்பாக திருப்பதி சென்று ஏழுமலையானை தரிசனம் செய்வது, பின்னர் நாடு திரும்பியதும் சீனா எங்கள் நட்பு நாடு, பீஜிங் போற்றி போற்றி என்று கூறுவதெல்லாம் யாவரும் அறிந்த ஒன்றே. இலங்கைக்கு இந்தியாவின் தயவு வேண்டும் என்பதைவிட, இந்தியாவிற்கு இலங்கையைத் தனது ஆளுமையில் வைத்திருப்பது மிகவும் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

அவ்வகையில் குஷிநகர் விமான நிலையத் திறப்பு விழாவிற்கு இலங்கை குழுவினருக்கு நாமல் ராஜபக்ச தலைமையேற்றுச் சென்றது அடுத்து அவர்தான் அனைத்தும் என்கிற செய்தியை தெளிவாகவும் உறுதியாகவும் வெளிப்படுத்தியது. அவரே மூன்றாம் ராஜபக்ச என்றும் அடுத்து அவரே அரியாசனத்தில் அமர வைக்கப்படுவார் என்கிற செய்தி இந்தியாவுக்கு கூறப்பட்டுள்ளது. அவரே எதிர்காலம் எனும் செய்தியும் அதனூடாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசின் பிரதிநிதியாக சென்ற நாமல் ராஜபக்சவை இந்தியப் பிரதமர் சந்தித்து உரையாடியதும் கவனிக்கத்தக்கது.



இதில் நாமல் ராஜபக்ச தெரிவித்த சில கருத்துக்களும் ஆழமானவை. "இந்தியா எமக்கு அளித்த மிகப்பெரிய பரிசு பௌத்தம்" என்று அவர் கூறியுள்ளது எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய ஒன்றாகவே பார்க்க வேண்டியுள்ளது. அதுமட்டுமன்றி இந்துக்களின் புனித நூல் என்று கருதப்படும் பகவத்கீதையின் ஆங்கில, தமிழ் மற்றும் சிங்கள மொழிபெயர்ப்பையும் நாமல் இந்தியப் பிரதமர் மோதியிடம் அளித்தார். பகவத்கீதைக்கு இதுவரை ஏராளமான ஆங்கில மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகள் வந்துள்ளன. அதை இலங்கையில் மொழிபெயர்ப்புச் செய்து இந்தியப் பிரதமரிடம் கையளிக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த நூலில் சிங்கள மொழிபெயர்ப்பாக மட்டும் அது இருந்தால் அது ஒரு பேசுபொருளாக இருந்திருக்கும்.

இலங்கையின் வட பகுதியிலுள்ள கடற்பரப்பில் இருக்கும் பல சிறிய தீவுகளில் சீனா பல வகைகளில் கால்பதிக்க ஆரம்பித்துள்ளதை இந்தியா தாமதமாகவே கவனிக்க ஆரம்பித்தது. சீனா ஆப்ரிக்க நாடுகளில் கையாண்ட அதே உத்தியை இலங்கையிலும் கையாளத் தொடங்கியுள்ளது என்று அரசியல் ஆய்வாளர் கூறுகின்றனர். அதாவது வளர்ச்சித் திட்டம் என்கிற பெயரில் முதலில் சீனா தனது நாட்டின் நிறுவனம் ஒன்றில் பெயரில் நிலத்தை குத்தகைக்கு எடுத்து மின்சாரம் தயாரிப்பு, அல்லது விவசாய மேம்பாடு என்று ஏதோவொரு பெயரில் ஒரு கட்டுமானத்தை ஏற்படுத்தும். பிறகு அதை அப்படியே சீன இராணுவம் தமது வசப்படுத்திக் கொண்டு அந்த கட்டமைப்பைக் கலைத்துவிட்டு அதை ஒரு இராணுவத் தளமாக மாற்றும். அவ்வகையில் இலங்கையின் வடபுலத்தில் சீன ஆக்கிரமிப்பை மேலும் தொடரவிடாமல் செய்வது இந்தியாவுக்கு இன்றியமையாததாகும். அதற்குச் சரியான ஒரு வாய்ப்பாக குஷிநகர் விமான நிலையத் திறப்பை இந்தியா பயன்படுத்திக் கொண்டது. அதே போன்று பௌத்தத்திற்கு இந்தியா அளிக்கும் அளப்பரிய ஆதரவை அங்கீகரிக்கும் நோக்கிலும், இந்தியா தமக்கு மிகவும் முக்கியம் என்கிற செய்தியைத் தெரிவிக்கவும் இலங்கை "பட்டத்து இளவரசர்" நாமல் ராஜபக்ச தலைமையில் பிக்குமார் குழுவொன்றை அனுப்பியது. இவர்தான் ராஜபக்ச குடும்பத்திலிருந்து வரப்போகும் தலைவர் என்கிற செய்தி இந்தியாவுக்குத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது என்றே இதைக் கருதவேண்டியுள்ளது.



உலகின் பல முக்கிய நாடுகளின் தலைவர் இந்தியப் பிரதமரைச் சந்திக்க நேரம் கேட்டு பல மாதங்கள் காத்திருக்கும் நிலையில், குஷிநகரில் இந்தியப் பிரதமர் நாமல் ராஜபக்சவை தனியாகச் சந்தித்துப் பேசியதும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருதரப்பும் கருதுகிறது. நாமல் ராஜபக்சவை ஏற்றுக் கொள்ள இந்தியா தயார் என்று இலங்கையும், அடுத்த தலைவருடன் நல்லுறவை கட்டியெழுப்ப இப்போதிலிருந்தே நடவடிக்கை எடுப்பதே சிறந்த இராஜதந்திரம் என்று இந்தியாவும் கருதுகின்றன.

ஆனால் இதில் ஒரு விஷயம் கவனிக்கப்பட வேண்டும். இலங்கையில் பௌத்த மதத்திற்கான ஆதரவை இந்தியா தொடர்ந்து அளிக்க வேண்டும், போதிய நிதியுதவிகள் செய்ய வேண்டும் என்று இலங்கை தரப்பில் விடுக்கப்பட்ட கோரிக்கை இந்தியத் தரப்பால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக ராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன. அதேவேளை இலங்கையில் சிதிலமடைந்துள்ள, திட்டமிட்டு பராமரிக்கப்படாமலுள்ள இந்து ஆலயங்கள் குறிப்பாகப் பழங்காலத்தில் சோழர்கால சிவாலயங்களைப் புனரமைக்க இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் அதற்கு இந்தியா உதவும் என்கிற செய்தி விடுக்கப்படவில்லை. இலங்கையில் பௌத்தத்தைப் பேணுவதற்கு இந்தியா அளிக்கும் ஆதரவு அங்கு நாட்டில் பரவலாக இருக்கும் சிவாலயங்களைப் பராமரிக்க இந்தியா ஏன் அழுத்தம் கொடுக்கவில்லை என்கிற கேள்வி எழுகிறது. உதாரணமாகச் சோழர் காலத்தில் பொலன்னறுவையில் கட்டப்பட்ட ஆலயங்களைக் கூற முடியும். அதே போன்று இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இனப்பிரச்சனைகான தீர்வு, தமிழர் நிலங்கள் மீண்டும் கையளிக்கப்படுதல், இறுதி யுத்தத்தில் காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, தமிழர் பகுதிகளில் வேலை வாய்ப்பை மேம்படுத்துதல் போன்ற பல விஷயங்களை இந்த சந்தர்ப்பத்தில் இந்தியா நாமல் ராஜபக்ச மூலம் இலங்கை ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுத்திருக்க வேண்டும் என்கிற கருத்துக்கள் ஒலிக்க ஆரம்பித்துள்ளன.




புத்தரை மையப்படுத்தி இரு நாடுகளும் தம்மிடையேயான உறவை பலப்படுத்தி கொள்ள விரும்பும் அதேவேளை, இலங்கையிலுள்ள தமிழர்களையும் அவர்களில் பெரும்பாலானவர்கள் சார்ந்திருக்கும் இந்து சமயத்தையும் இலங்கையில் பேணி காக்க வேண்டிய பொறுப்பும் இந்தியாவுக்கு உள்ளன என்று வடக்கு கிழக்கு வாழ் தமிழர்கள் வலியுறுத்துகின்றனர்.

குஷிநகர் விமான நிலைய திறப்பு விழா என்பது புத்த பகவானையும் அவரது வாழ்வையும் போற்றுவதற்கு அப்பாற்பட்டு இலங்கையின் அடுத்த தலைவர் "இளவரசர்" நாமல் ராஜபக்சவே என்பது இந்தப் பயணத்தின் போது வெளிப்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது.


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக்
கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும்
உணவுப் பதார்த்தங்களும்.....
மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைண்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைண்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...
தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற வெற்றிகரமான வர்த்தக நிறுவனமாக விளங்கும்
'சங்கர் அன் கோ' தனது வாடிக்கையாளர்களில் எதிர்பார்ப்பு கருதி, எதிர்வரும்
தீபாவளி பண்டிகைக்குத் தேவையான அனைத்து பொருட்களும் இறக்குமதி செய்துள்ளார்கள்.
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# அதிரடித் தாக்குதலுக்கு உள்ளான ஹவாய் பேர்ள் ஹாபரின் நினைவுச் சின்னங்கள்

குரு அரவிந்தன்



இலங்கையில் இருக்கும் இயற்கைத் துறைமுகமான திருகோணமலை துறைமுகம்போல, ஹவாயிலும் ஒரு இயற்கைத் துறைமுகம் இருக்கின்றது. பேர்ள் ஹாபர் என்ற பெயரைக் கொண்ட இந்தத் துறைமுகம்தான் இரண்டாம் உலகயுத்தத்தின் திருப்புமுனையாக இருந்தது. இந்த பேர்ள் ஹாபர் துறைமுகம்தான் அமெரிக்காவின் பசுபிக்பிராந்திய முக்கியமான கடற்படைத் தளமாக இருந்தது. சுமார் 80 வருடங்களுக்கு முன், அதாவது 1941 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி திடீரென உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்தது இங்கே உள்ள பேர்ள் ஹாபர் என்ற இயற்கைத் துறைமுகம்.

அதற்குக் காரணம், யப்பானியரின் அதிரடித் தாக்குதலில் இந்தத் துறைமுகம் தரைமட்டமாக்கப்பட்டுச் செயலிழக்கப்பட்டதுதான். 2ஆம் உலக யுத்தத்தின் போது யப்பானின் கூட்டுப்படையினர் இரகசியமாக ஏற்கனவே திட்டமிட்டபடி, பேர்ள் ஹாபரின் தாக்குதலுக்குத் தயாரானார்கள். யப்பானின் ஆறு விமானந்தாங்கி யுத்தக் கப்பல்கள் 1941 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி ஹவாய் தீவுகளை நோக்கிப் புறப்பட்டிருந்தன. இந்தக் கப்பல்களில் 360 தாக்குதல் விமானங்களும், 48 தற்பாதுகாப்பு விமானங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. முதற்கட்டமாக யப்பானிய விமானங்கள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டு தாக்குதலுக்குத் தயாராகின. முதற்பிரிவு விமானங்கள் முக்கியமான நிலைகளைத் தாக்குவது, அதைத் தொடர்ந்து இரண்டாவது பிரிவு விமானங்கள் யுத்தக் கப்பல்களை தாக்கி அழிப்பது. மூன்றாவது பிரிவு விமானங்கள்,



தாக்கப்படாமல் எஞ்சியிருக்கும் நிலைகளைத் தேடி அழிப்பது.

90 நிமிடங்கள் நடந்த இந்தத் தாக்குதலில் பேர்ள் ஹாபரில் நின்ற அமெரிக்காவின் 18 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இந்தத் தாக்குதலில் 2403 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இத்தாக்குதலின் போது அவர்களின் தாய் மொழியான யப்பானிய மொழியிலேயே அவர்களின் உரையாடல் எல்லாம் இடம் பெற்றதாம். ஆங்கில மொழி பாவிக்கப்படாததால் அவர்களின் உரையாடல்களை இடைமறித்து ஒட்டுக் கேட்டவர்களால் கூட என்ன நடக்கிறது என்பதைப் விளங்கிக் கொள்ள முடியவில்லை. இந்தப் பிரமாண்டமான அதிரடித் தாக்குதலைக் கவனமாகத் திட்மிட்டுச் சாதித்துக் காட்டியவர் யப்பானிய அட்மிரல் யமாமோட்டோதான். யமாமோட்டோவின் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அட்மிரல் நகுமோ சூச்சி **(Nagumo Chuchi)** என்பவர்தான் துணிந்து முன் வந்து தளத்தில் நின்று செயற்படுத்தினார். மிக முக்கியமான அழிப்பு நடவடிக்கைகள் முதல் 30 நிமிடத்திலேயே செய்து முடிக்கப்பட்டன. அரிசோனா, ஒக்லஹோமா, கலிபோர்ணியா, நிவாடா, வெஸ்ட்வேர்ஜினியா போன்ற யுத்தக்கப்பல்கள் துறைமுகத்தில் வைத்தே மூழ்கடிக்கப்பட்டன.

யப்பான் விமானத்தின் குண்டுத் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட 'அரிசோனா' கப்பல் இப்பொழுதும் அதே இடத்தில் கடலுக்குள் மூழ்கிய நிலையில் இருக்கின்றது. இதற்கு அருகே நினைவு மண்டம் ஒன்று எழுப்பி இருக்கிறார்கள். மண்டபத்தில் இருந்து நீருக்குள் இருக்கும் கப்பலைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. தாக்குதலின் போது, மரணித்தவர்களின் பெயர்கள் அங்கே இடம் பெற்றிருக்கின்றன. அமெரிக்கா கைப்பற்றிய 'கெயிற்றென்' என்று சொல்லப்படுகின்ற யப்பானியர்களின் தண்ணீரில் செல்லக்கூடிய கறுப்பு நிறத்திலான தற்கொலை குண்டுதாக்கியை அங்கே பார்வைக்கு வைத்திருந்தார்கள். **(One Man Japanese Suicide Torpedo).**

பேர்ள்ஹாபர் கரையில் மௌனத் தூக்கம் போட்டுக் கொண்டிருந்தது பவ்பின் என்ற நீர்மூழ்கிக் கப்பல். இந்த நீர்மூழ்கி சுமார் 15 மேற்பட்ட பெரிய கப்பல்களைக் கடந்த காலங்களில் மூழ்கடித்திருந்தது. இந்த நீர்மூழ்கி விமான எதிர்ப்புப் பீரங்கியை தன்னகத்தே கொண்டது. 1944 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 ஆம் திகதி 445 அடி நீளமான 'சுஷிமா மாறு' என்ற யப்பானியக் கப்பலை இரவு 10 மணியளவில் பவ்பின் மூழ்கடித்திருந்தது. 775 பள்ளிச் சிறார்கள் அதில் கொல்லப்பட்டார்கள். மூழ்கடிக்கப்பட்ட கப்லில் சிறார்கள் இருந்த விடயம் பவ்பின் மாலுமிகளுக்குத் தெரிந்திருக்கவில்லை. சுமார் 20 வருடங்களின் பின்தான் பவ்பின் மாலுமிகளுக்குத் தெரிய வந்தது. மூழ்கடிக்கப்பட்டிருந்த சுஷிமா மாறு 33 வருடங்களின் பின் 1977 ஆம் ஆண்டு ஆழ்கடலில் இனங்காணப்பட்டது. யப்பானிய கவிஞர் ஒருவர் மரணித்த அந்த சிறுவர்களைப் பற்றி எழுதிய கவிதையில் இரண்டு வரிகளை ஆங்கிலத்தில் தருகின்றேன்.

**'They dreamed because they were alive. When they became victims> their dreams for the future died with them. '**

இதை வாசித்தபோது, எனக்கு தாயகத்தில், விமானக் குண்டுவீச்சில் மரணித்த பள்ளிச் சிறார்களின் இனிய கனவுகளும் அவர்களுடனே மரணித்த நினைவுதான் வந்தது.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது அமெரிக்கா 52 நீர்மூழ்கிகளை இழந்திருந்தது. அதே சமயம் நீர்மூழ்கியில் இருந்த 3500 மாலுமிகள் வெவ்வேறு சம்பவங்களின் போது, இந்த யுத்தத்தில் இறந்து போயிருந்தனர். இந்த அதிரடித் தாக்குதலில் யப்பான் தரப்பில் அதிக சேதம் ஏற்படவில்லை. 29 விமானங்களையும் 5 நீர்மூழ்கி கப்பல்களையும் யப்பான் இழந்தது. இந்த அதிரடித் தாக்குதலில் 64 யப்பானிய வீரர்களும் கொல்லப்பட்டனர்.

தங்கள் நாட்டின் மீது இருந்த அதீத பற்றுக் காரணமாக 3862 யப்பானிய தற்கொலைப் படையினர் இரண்டாம் உலக யுத்தத்தின் போது தற்கொலைத் தாக்குதல் செய்து மரணமாகியிருந்தனர். சுமார் 7000 க்கும் அதிகமான அமெரிக்க கடற்படையினர் இப்படியான தற்கொலைத் தாக்குதலின் போது கொல்லப்பட்டிருந்தனர். யப்பானியர்களின் எண்ணிக்கைப்படி தற்கொலைப் படையினரால் சுமார் 81 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டும், 195




கப்பல்கள் சேதமாக்கப்பட்டும் இருந்தன. இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஆழ்கடலில் சென்ற யுத்தக் கப்பல்கள் எல்லாம் இந்த தற்கொலைப் படைக்கு அஞ்சியே பயணத்தை மேற்கொண்டன.
இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்கத்தோடுதான் அமெரிக்கா குரோஷிமா என்ற யப்பானிய தீவுமீது ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி 1945 ஆம் ஆண்டு அணுக்குண்டுத் தாக்குதல் நடத்தி இருந்தது. இத்தாக்குதலில் சுமார் 80,000 மக்கள் அந்த இடத்திலேயே இறந்து போயிருந்தனர். அந்த அதிர்ச்சியில் இருந்து யப்பான் எழுந்திருக்குமுன் மீண்டும் மூன்றாவது நாள் நாகசாகி மீது அடுத்த அணுக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் 40,000 பேர் கொல்லப்பட்டனர். இதன் காரணமாக வேறு வழியில்லாமல் யப்பான் சரணடைந்தது.

யப்பானிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று ஹவாயில் தரைதட்டிய போது அதிலிருந்த எல்லோரும் கொல்லப்பட 23 வயதான சஹூமாகி ***(Kazuo Sakamaki )*** என்பவர் மட்டும் மயங்கிய நிலையில் 'வைமனாலோ' கடற்கரையோரம் உயிரோடு கைப்பற்றப்பட்டார். இரண்டாம் உலக யுத்தத்தின் போது உயிரோடு முதலில் கைப்பற்றப்பட்ட யப்பானிய வீரர் இவர்தான். இவர் சான்ஜலண்டில் கைதியாக இருந்தபோது, தற்கொலை செய்து வீரமரணம் அடையப் போவதாக கேட்டபோதும் அதற்கு அனுமதிக்கப் படவில்லை. யுத்தம் முடிவடைந்தபின் இவர் யப்பானுக்கு அனுப்பப்பட்டார். எதிரியிடம் அகப்பட்ட யுத்தக் கைதி என்பதால் அவருக்கு அங்கே அதிக வரவேற்பு இருக்கவில்லை. ரெக்ஸாசில் நடந்த சரித்திர மகாநாடு ஒன்றுக்கு 1991 ஆம் ஆண்டு இவர் அழைக்கப்பட்ட போது உணர்ச்சி வசப்பட்டு பெரிதாக இவர் அழுததாகத் தெரிகின்றது. அப்போது காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருந்த அவர் பயணித்த நீர்மூழ்கிக் கப்பலுக்கும் அவரை அழைத்துச் சென்று காட்டினார்களாம். இவர் 1999 ஆம் ஆண்டு தனது 81 வது வயதில் மரணமானார். ஒரு கைதியின் வலியை உணர முடியாவிட்டாலும் யுத்தத்தின் வலியை உணர்ந்தவர்கள் நாங்கள், அதனால்தான் ஹவாய் பேர்ள் ஹாபர் யுத்தக் காட்சிச் சாலைக்குச் சென்றபோது, அரிசோனா கப்பல் நினைவாலயத்தில் மலர் வைத்து மரணித்தவர்களின் உறவுகள் விம்மி விம்மி அழுதபோது, மரணத்தின் வலியை என்னால் உணரமுடிந்தது. உறவுகளைக்கூடச் சொந்த மண்ணில் நினைவு கூரமுடியாத சூழ்நிலையில் இன்று எங்கள் தமிழ் இனம் இருப்பதை நாங்கள் யாரிடம் சொல்லி அழுவது?



கனடாவில்
ஒரே நாளில் ஒரே மேடையில்
அதிபர் பொ. கனகசபாபதி அரங்கில்

POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby

Covid-19
கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப அழைக்கப்படுவோரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும்

உதயன் வெள்ளி விழாவும்
நண்பன் WORLDWIDE விருது விழாவும்

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக...
Tasty தமிழா

30.10.2021 சனிக்கிழமை
மாலை 6.00 மணி தொடக்கம்

கலை நிகழ்ச்சிகள், இசை, விருதுகள் வழங்கல்,
இராப்போசன விருந்து

Netwyn.Place Auditorium
10. Thornmount Drive
Scarborough ON, M1B 3J4

அனுமதிச் சீட்டுகளுக்கு
416 732 1608 அல்லது
647 762 9512

An Authentic Tamil Take-out & Catering Restaurant

BUY - SELL - INVEST - LEASE
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Rajeef Koneswaran
Manager
(416) 282-4444
1265 Morningside Ave Suite 203, Toronto, ON M1B 3V9

Sugshe Finance Canada Inc.
Sugshi Group of Companies
Ganesan Sugumar
Tel: 416 363 2624
220 Duncan Mills Rd, Unit #83, North York, ON. M3B 3J5

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage

NO.1 NORTH AMERICAN PROFESSIONAL SECURITY COMPANY
CAMSONICS
PROTECT YOUR HOME AND BUSINESS ANY TIME ANY WHERE IN THE WORLD.
WE ONLY DO PROFESSIONAL INSTALLATIONS AND CONCEAL WIRES IN THE ATTIC OR BEHIND THE WALLS.
CAMSONICS :- 905 216 8966

PACE LAW FOR 40 YEARS SERIOUS INJ
DESMOND & POORANI
647.968.7059
PACE LAW SERIOUS INJURY LAWYER
191 The West Mall Suite 1100, Toronto, ON M9C 5K8, Canada
Phone: 1-877-236-3060 - Fax: 416-236-1809, info@pacelawfirm.com

Ethos COMMUNICATIONS
We wish Uthayan Publishers Team, all the very best as they celebrate 25 glorious years in Publishing and Community Service.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON, L3S 4N8

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600

Residential & Commercial Real Estate Services
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY

"Invest Today Harvest Tomorrow"
Homelife /Future Realty Inc., Brokerage
Filona Thushyanthi
Real Estate Agent
647-606-1009

AGA BEAUTY LEARNING ACADEMY & SPA
Sasi Naren
647.716.5252
3 LOCATIONS TO SERVE YOU
A14, L5 - 2900 Markham Road, Scarborough ON M1X 0C8

YOUR HOME SOLD GUARANTEED AT THE PRICE YOU WANT, OR I'LL BUY IT
416-858-9633

MORTGAGE ALLIANCE RIGHT TEAM
Purchase, Refinancing, Equity Loan, Business Loan, 1st & 2nd Mortgages
Krishna Punniyam
Mortgage Agent
Cell: (416) 710-9150
krishna@rightteam.ca
License Number M08000952

Kailain Thillainathan
Sales Representative
647-668-8276
Ragu Thillainathan
Sales Representative
416-629-5800

CANADIAN HOME APPRAISAL INC.
S.K.Bales
Bus:- 416- 438- 2200
Cell:- 416- 801- 3219
Email:skbales@hotmail.com

Award Winning Team
Amal
416.829.9993
Abi
416.732.1810
Homelife /Future Realty Inc., Brokerage.

JRB universal Inc.
Home Mortgage
2nd Mortgage
Re-Financing
Commercial Mortgage
Business Loan
Line of Credit
R.R.Rajkumar
647-289-6164

PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha
Tel: 416-200-5470
info@santha.ca
www.santha.ca

Sharuthie Windows
1755 Bough Beeches Blvd, Mississauga, ON. L4W 2B9
Tel: 416 844 4373

அம்மா
AMMA PAWN BROKER
1.0% 1.5%
416-757-0034 416-994-3861
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

Chapel Ridge
Christeen Seevaratnam - 416-258-6759
Serving the Tamil Community
8911 Woodbine Ave, Markham, ON, L3R 5G1

Debt Problems ?
V. SRI
CREDIT SOLUTION CENTRE
416.439.0224

Mortgage Architects
Sabesan Sivasubramaniam
Mortgage Agent
Dir: 416.834.3226

HONDA Formula Honda
Where You're Treated like Family.
2240 Markham Road, Scarborough
1-888-496-7156 www.formulahonda.com

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buy - Sell - Invest
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

TECHSOURCE
Computer & Electronics Liquidator
TEL: (416)757-9111
EMAIL: SCARBOROUGH@TECHSOURCECANADA.CA
1260 KENNEDY RD, SCARBOROUGH, ON M1P 2L4

வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
Broker
RE/MAX ACE
416 880 8585
1286 Kennedy Rd, Unit 3
Toronto, ON M1P 2L5

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
416-666-9464
416-291-0005

சங்கர் அன் கோ.
SANKAR INTERNATIONAL
இறக்குமதியாளர்கள், மொத்த - சில்லறை விற்பனையாளர்கள்
2425 EGLINTON AVE, EAST UNIT # 6
SCARBOROUGH ON
(Kennedy & Eglinton)
Tel: 416 759 5100 Fax: 416 759 4916

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY
டாக்டர் திருமதி வசந்தகுமார்
Acupuncture Specialist
5200 Finch Ave East #313
Scarborough
(Middelfield & Finch)
416-754-4024

ANGELS FASHION CENTRE
Majestic City Mall
Sarees & Jewellery
Tel: 416-854-5622
angelfashion003@gmail.com
Unit: G3 2900 Markham Road
Scarborough ON, M1X 0C8

Designs 2 Prints Ltd
Design Solutions For Any Media
Logos | Flyers
Business Cards | Posters
Banners | For sale sign
Lawn sign | Bag Sign
specially Social media ad, website designing and More....
Prabagar - 647.858.2290 / 416 292 4999
www.designs2prints.com - info@designs2prints.com
2900 Markham Road, Unit G1, Scarborough, ON M1X 0C8

Seithy.com
east FM 102.7
ஈழநாடு
GTA தமிழ்
Easy 24 News

VOTE



## மொன்றியால் வெஸ்ட் ஐலண்ட் (WEST ISLAND) நகரசபைத் தேர்தல் அபேட்சகர்

# திரு. ரியான் பிரவுண்ஸ்ரெயின்



**வெஸ்ட் ஐலண்ட் (WEST ISLAND)**
**நகரசபைத் தேர்தல் வேட்பாளர்**
**திரு. ரியான் பிரவுண்ஸ்ரெயின்**
**MR. RYAN BROWN STEIN**
**DOLLARD DES ORMEAUX (D.D.O)**
**வட்டாரம் 7 (DISTRICT 7)**

திரு. ரியான் பிரவுன் ட்ரெயின் அவர்கள் WEST ISLAND வாழ் அனைத்து தமிழ் சமூகத்தினருக்கும் நன்கு அறிமுகமான வேட்பாளராவார். கடந்த தேர்தலிலும் போட்டியிட்டு 28 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை நழுவவிட்ட மக்கள் தோழராகும்.

**வாழ்க்கை குறிப்புகள்:**

B.A பட்டதாரி, விவாகமானவர். Communication Studies and Political Science பாடங்களை முதன்மைப் படிப்பாக தேர்வு செய்து அனுபவம் பெற்றவர்.

சில காலம் (JAD 800 AM வானொலி ஒலிபரப்பு சேவையிலும் - Canada Paramount திரைப்பட நிறுவனத்திலும் பணியாற்றியவர்.

மாநில லிபரல் கட்சியின் ஆலோசகராகவும், உதவித் தலைவராகவும் - பல மாநில - மத்திய தேர்தல் காலங்களில் மாநில அமைச்சர் திரு. CARLOS LEITAOவுடனும், மாநில அவை உறுப்பினர் Pierre Marsan வுடனும் இணைந்து பல சீர்திருத்த பணிகளை ஆற்றியவர்.

WEST ISLAND பகுதி சுகாதார சீரமைப்பு - போக்குவரத்து சேவை - சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவை முக்கியமானவையாகும். 'DISTRICT 7" வாழும் அனைத்து சமூக மக்களும் ஒருங்கிணைந்து எனக்கு வாக்களிப்பதன் மூலம் - எனது வட்டார எல்லைக்குள் வாழும் தமிழ் முதியோர் தேவைகள் - குறிப்பாக மொன்றியல் அருள்மிகு திருமுருகன் கோயில் வளாகத்தில் நடைபெறும் வருடாந்த திருவிழா நிகழ்வுகள், ஏனைய மத சமூகத்தினரால் இடையூறு விளைவிக்காமலும், மற்றும் ஆலய நிர்வாகத்தினரின் கட்டுமான விஸ்தரிப்புகளுக்கும் நகரபிதாவுடன் கலந்தாலோசித்து ஆவண செய்வதற்கும் உங்கள் பரிபூரண ஆதரவை வழங்குங்கள்", என கேட்டுக் கொள்கிறார்.

**தகவல்: மொன்றியல் உதயன் செய்தியாளர்**

## ADVANCE VOTING -- Sunday, October 31st, 2021

*All addresses in district 7*

**Polyvalente des Sources High School, 2900 Lake Street**

## Sunday, November 7th

*Alphabetical Order*

| ANDRAS TO MAISONNEUVE STREET | NASH TO WOODSIDE STREET |
|---|---|
| Sunshine Academy | Sunnybrooke Chalet |
| 65 Sunshine | 7 Cadman |

கனடா மொன்றியால் மாநகரில்
ஒரே நாளில் ஒரே மேடையில்

கலைஞர் வர்ண ராமேஸ்வரன் அரங்கில்

Powered by
FRUITS HABY
5925 Victoria
Monreal, QC
H3W 2R9
(514) 342-4229
(514) 865-0519

www.uthayannews.ca
உதயன்
நண்பன் WORLDWIDE

# வெள்ளி விழாவும் விருது விழாவும்

13-11-2021
சனிக்கிழமை
மாலை 6:00 மணி
தொடக்கம்

கலை நிகழ்ச்சிகள், இனிதான இசைச்சாரல்,
விருதுகள் வழங்கல் மற்றும் இராப்போசன விருந்து.

Sunnybrook Condominium Village Auditorium
105 Rue Angora,
Dollard Des Ormeaus,
Quebec, H9B 1W6

Covid-19
கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப
அழைக்கப்படுவோரின்
எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும்

அனுமதிச் சீட்டுக்களுக்கும் விபரங்களுக்கும்:
(514) 684-3604, (514) 924-3436
(514) 465-1053, (416) 732-1608

Boulangerie et Cuisine
Nanthu Kitchen
NANTHU
உணவகம்
438-229-1768 514-357-6908
6953 Ave. Victoria, Montréal, Québec H3W 2T5

Meubles / Home furniture
Sri Durga
659 AV. Ogilvy, Montréal, H3N 1N2
514.495.4155 Parc metro

கனடாவின் மொன்றியால் மாநகரில்
பழங்கள் மற்றும் பலசரக்குகளின் மாளிகை
FRUITERIE A.M.R
A.M.R. Fruiterie Inc 1150 rue Deccarie, Saint-Laurent, Quebec
Phone: (514) 334-6737

Thanjai
We do On-Site Dosa
much more to add on
Taste the authentic Indian Cuisine
We undertake Outdoor Catering

PRODUITS
NAM THAYAGAM
நம் தாயகம்
Tel.: 514.980.3635
928 Ogilvy Ave, Montréal QC H3N 1P1 PARC

THINKING OF BUYING OR SELLING A PROPERTY?
FREE MARKET EVALUATION OF YOUR PROPERTY
- More than 17 years of experience.
- Virtual Tour
- Best negotiator.
- Mortgage arrangement with a lowest interest rate.
- I will work with you beyond closing.

L'EXPERT IMMOBILIER
THANKA Elaiyathamby AEO
Chartered Real Estate Broker, Mortgage Broker
Tel: 514-823-2426
thankahomes@gmail.com

Marché M.S
மொன்றியால் மாநகருக்கு இலங்கையிலிருந்து
நேரடியாக கடலுணவுப் பொருட்களை
இறக்குமதி செய்யும் ஒரே தமிழர் நிறுவனம்
4983 des sources, Pierrefonds, Quebec H8Y 3E3
Phone: (514) 684-4035

Tasty தமிழா
437 539 7521



Toronto District School Board

# புதியது! கனிஸ்ட மழலையர் பிரிவில் ஆரம்பமாகின்றது French Immersion வகுப்புக்கள்

(செப்டம்பர் 2022 கனிஸ்ட மற்றும் சிரேஸ்ட மழலையர் பிரிவினருக்கான ஆரம்பம்)

விண்ணப்பங்கள் திறப்பு:— நவம்பர் 1, 2021
விண்ணப்பங்கள் முடிவு:— நவம்பர் 26, 2021

இணையவழி ஊடாக விண்ணப்பிக்கவும்
www.tdsb.on.ca/french

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com






Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**



# ஆயிரம் ஈழக் குழந்தைகளைக் கொன்ற அரக்கன்

**- ஆதித்தன்**

அண்மையில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத்தில் கலந்து கொள்ளும் அமெரிக்கா சென்ற ஸ்ரீலங்கா அதிபர் கோத்தபாய ராஜபக்ச, தனது பேத்தியை தூக்கி முத்தமிடுகின்ற புகைப்படம் இணையத்தில் வெளியாகியிருந்தது. பேரினவாதப் பேச்சும் இனவழிப்புப் போர் முழக்கமும் தான் கோத்தபாயவின் அடையாளங்கள் என்பதை இந்த உலகம் நன்கு அறியும். இந்த நிலையில் கோத்தாயவின் கரங்களில் எப்போதுமே இனப்படுகொலை செய்யப்பட்ட ஈழக் குழந்தைகளின் குருதி வழிந்தபடி இருப்பதைப் போலவே தோன்றும். இப்போது ஒரு குழந்தையை தூக்கி முத்தமிடுவது ஒரு அச்சம் தருகிற பதற்றமாகவே உள்ளது.

ஏன் அந்தப் பதற்றம்? ஏன் அந்த அச்சம்? இந்த உலகில் குழந்தைகளுக்கு மொழி இல்லை. குழந்தைகளுக்கு இனம் இல்லை. குழந்தைகளுக்கு குழந்தைகள் என்ற அடையாளத்தை தவிர ஏதுமே இல்லை. ஆனால் ஈழ இனப்படுகொலை யுத்தத்தில் குழந்தைகள் ஈழக் குழந்தைகள் என்பதற்காக எந்தவிதமான இரக்கமும் இல்லாமல் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். முள்ளிவாய்க்காலில் இறந்து கடந்த தாயின் காயப்பட்டு குருதி பிசுபிசுக்கும் மார்பில் பால் குடித்த குழந்தைகளும் உள்ளனர். தாயின் கருவறையி-லேயே கொல்லப்பட்டு இறந்து கிடந்த சிசுக்களையும் பார்த்துள்ளோம். முள்ளிவாய்க்கால் நிலமெங்கும் கொல்லப்பட்டுக் கிடந்த குழந்தைகளின் காட்சியை உலகம் மறவாது.

வியட்னாமில் நடந்த போரில் தெற்கு வியட்னாம் வீசிய பெற்றோல் குண்டுத் தாக்குதலில் குழந்தைகளும் சிறுவர்களும் தாக்கப்பட்டனர். அவர்களின் ஆடைகளெங்கும் தீ பரவியது. கிம் ப்ஹுக் என்ற சிறுமி இராணுவ வீரர்களுக்கு நடுவே உயிரை காக்க அலறிக் கொண்டு ஓடிய காட்சியை புகைப்படக் கலை-ஞர் நிக்வுட் படமாக்கினார். வியட்னாம் போரின் கொடூரத்தை அச் சிறுமியின் ஓலக் குரம் நிரம்பிய முகம் உலகிற்கு எடுத்துக் காட்டியது. வியட்னாம்மீது கவனம் பெருகியது. அப்படியொரு பெருந்தாக்கத்தை அந்தப் புகைப்படம் ஏற்படுத்தியிருந்தது.

ஈழ இனப்படுகொலையின் போது அத்தகைய பல புகைப்படங்கள் வெளியில் வந்தன. இறந்து கிடக்கும் தாயில் பால் குடிக்கும் குழந்தையின் புகைப்படம் அதில் முக்கியமான ஆவணமாகும். ஈழம்மீது தொடுக்கப்பட்ட இனப்படுகொலைப் போர் எவ்வளவு கொடுமையானது என்பதை அந்தப் புகைப்படம் உணர்த்துகிறது. அதைப் போல உடல் பாகங்கள் சிதைக்கப்பட்ட சனங்கள், செல்கள் கனால்களை கிழித்தபடி கிடக்கும் மக்களின் கோலங்கள் என பலவற்றையும் ஈழ இனப்படுகொலை போரில் ஊடகவியலாளர்கள் ஆவணப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் இனப்படுகொலை செய்யப்பட்ட ஈழக் குழந்தைகளின் குறியீடாக, பிரதிநிதியாக இருக்கும் பாலச்சந்திரன் பற்றிய புகைப்படமும் இந்த உலகை உலுக்கிய புகைப்படம் எனலாம். இறுதிப் போரில் சரணடைந்த பாலச்சந்திரன் இராணுவத்தின் காவலரணில் அமர்த்தப்பட்டுள்ளார். அவரின் கைகளில் பிஸ்கட் கொடுக்கப்பட்டுள்ளது. ஏக்கம் மிகுந்த விழிகளுடன் நடப்பதை அறியாது மிகுந்த அப்பாவித்தனமாக, குழந்தையுடன் அச் சி-றுவன் பிஸ்கட்டை கடித்தபடி பார்க்கும் பார்வை இந்த உலகின் மனசாட்சியை உலுப்புகிறது.

இப்படி அமர்த்தப்பட்ட சிறுவன், பின்னர் நிலத்தில் கொல்லப்பட்டுக் கிடக்கிறார். அவன் நெஞ்சின் நான்கு பக்கமும் நான்கு துளைகள் காணப்படுகின்றன. அந்தப் பாலகனின் நெஞ்சில் இரும்புத் துப்பாக்கியை வைத்து இனப்படுகொலை இராணுவம் கொலை செய்திருக்கிறது. அந்த இனப்படுகொலையை உலகிற்கு எடுத்துரைக்க அப் படம் மிகச் சரியான ஆதாரம். அதனை பரிசோதித்து அதன் உண்மைத் தன்மையும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் முன்னைய அறிக்கைகளில் பாலச்சந்திரன் படுகொலை பாரதூரமான போர்க்குற்றமாக குற்றம் சுமத்தப்பட்டது.

இன்றைக்கு அதிபர் கோத்தபாய ராஜபக்சவின் கைகளில் அவர் பேத்தியைப் பார்க்கின்ற போது எமக்கு பாலச்சந்திரனே நினைவுக்கு வருகி-றார். இதேபோலொரு குழந்தையைத்தானே பிஸ்கட் கொடுத்து படுகொலை செய்ய உத்தரவிட்டார் கோத்தபாய ராஜபக்ச. உங்கள் கைகள் நடுங்காது. உங்கள் கைகளில் வழியும் குருதி அந்தக் குழந்தையை அச்சுறுத்தாதா? அந்தக் குழந்தை நிச்சயமாக பாலச்சந்திரன் படுகொலையை ஒருபோதும் ஏற்காது. நிச்சயமாக குருதி நிணம் வீசும் கோத்தபாயவைக் கண்டு அந்தக் குழந்தை முகத்தை திருப்பிக் கொள்ளும்.

உலகில் குழந்தைகளுடன் இனப்படுகொலை போர் புரிந்த நாடு ஸ்ரீலங்கா. ஈழக் குழந்தைகளை இனப்படுகொலை செய்த பட்டியல் என்பது மிக நீண்டது. ஒரு இனத்தை அழிக்க வேண்டுமாக இருந்தால் அந்த இனத்தின் குழந்தைகளை அழித்துவிடுகிற கருவிலேயே இனவழிப்பு என்ற திட்டத்தை கனகச்சிதமாக சிங்கள அரசு செய்திருக்கிறது. தாயின் கருவறை முதல், குழந்தைகள் பிறந்த மருத்துவமனை மாத்திரமின்றி குழந்தைகள் படிக்கும் பள்ளிக் கூடங்களின்மீதும் குண்டுகளை கொட்டி அவர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

ஈழக் குழந்தைகள் தாம் தமிழர் என்று அறிவதற்கு முன்னரே, தாம் தமிழ் மொழி பேசுவற்கு முன்னரே அழிக்கப்பட்டுள்ளார்கள் என்பது எவ்வளவு கொடுமையான விசயம்? இப்போதும் ஈழ இனப்படுகொலைக்கான நீதியைக் கோரிக் கொண்டிருக்கிறது தமிழ் ஈழம். குழந்தைகளின் நலன், குழந்தைகளின் உரிமை எனப் பேசிக் கொண்டிருக்கும் பன்னாட்டு நிறுவனங்கள் ஈழக் குழந்தைகளின் உரிமைகள் பற்றியும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றியும் விசாரணை செய்ய முன்வரவேண்டும்.

குழந்தைகளின் விழிகளில் தெய்வத்தைக் காணலாம். குழந்தைகளை ஈர்க்காத மனிதர்கள் இல்லை. குழந்தைகள் என்றால் மனித குணமுள்ள எவரும் இரங்குவர். ஏதுமறியாத அப்பாவிக் குழந்தைகளை மிகக் கொடிய வழிமுறைகளின் ஊடாக இனவழிப்பு செய்த கோத்தபாய ராஜபக்சவின் இந்த போலிச் சிரிப்பும் போலிப் பாசமும் எதற்கானது?

கோத்தபாய ராஜபக்ச தனது பேத்தியை முத்தமிடுவது என்பது போலியானது. அது இனப்படுகொலை செய்யப்பட்ட ஈழக் குழந்தைகளின் இபடுகொலையை மூடி மறைக்கின்ற செயல். ஆயிரம் குழந்தைகளை கொன்ற அரக்கனாக இருக்கும் கோத்தபாய சிங்களக் குழந்தையை மாத்திரமல்ல, உல-கின் எந்தக் குழந்தையையும் தொட அருகதையற்றவர். ஈழக் குழந்தைகள்மீதான இனவழிப்புக்கான நீதி என்பது சிங்களக் குழந்தைகளுக்கும் பாதுகாப்பைத் தரும். உலகின் எல்லாக் குழந்தைகளுக்குமான நீதியைப் பாதுகாப்பைத் தரும் என்பதே உண்மை.


DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy

DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6

416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan



ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா வாழ் செல்வி தியானா இளங்கீரன் அன்னை சரஸ்வதியைத் துதித்து பாடியுள்ள "கோடி தரம் பாடும் வரம் தேவி தருவாளே..."



கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர் இளங்கீரன்-ரோகினி தம்பதியினரின் புதல்வி இசைச் செல்வி தியானா இளங்கீரன்அன்னை சரஸ்வதியைத் துதித்து பாடியுள்ள "கோடி தரம் பாடும் வரம் தேவி தருவாளே..." பக்திப் பாடல் 15ம் திகதி வெள்ளிக்கிழமையன்று கனடா-ஸ்காபுரோ ஸ்ரீ சந்திர மௌலிஸ்வரர் ஆலய மண்டபத்தில் வெளியிடப்பெற்றது.

ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ ஸ்ரீதரக் குருக்கள் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் "உதயன்" பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களும் கலந்து கொண்டு செல்வியை வாழ்த்தி உரை நிகழ்த்தினார்.





கனடாவில் இசையாசிரியை ஸ்ரீமதி குலநாயகி விவேகானந்தன் அவர்களிடம் முறையாக கர்நாடக இசை கற்று வரும் இசைச் செல்வி தியானா இளங்கீரன் கர்நாடக இசையிலும் பாடசாலைக் கல்வியிலும் மிகுந்த அக்கறை காட்டி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி பாடல் அடங்கிய இசைத் தட்டில் தியானாவின் உடன் பிறவாச் சகோதரிகளான கிருத்திகா சுகர்ணன் (இங்கிலாந்து) மதுஷிகா சுகர்ணன் (இங்கிலாந்து) ஆகியோரும் இணைந்து பாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. பாடல் வரிகளுக்குச் சொந்தக்காரர் கவிஞர் வேலணை சுரேஸ் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இசைக் குடும்பம் ஒன்றின் வாரிசாக விளங்கும் தியானா உட்பட கிருத்திகா சுகர்ணன் (இங்கிலாந்து) மதுஷிகா சுகர்ணன் (இங்கிலாந்து) ஆகியோர் இணைந்து வழங்கிய இந்த அற்புதமான பாடல் கடந்த 14ம் திகதி யுரியுப்பில் தரவேற்றம் செய்யப்பெற்றுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



நல்ல பாடல் வரிகள் நயமான இசையமைப்பு அழகிய படப்பிடிப்பு நேர்த்தியான ஒளிப்படத் தொகுப்பு இனிமையான குரல் ஆகியன நிறைந்த இந்த பாடல் காணொளியை அனைவரும் பார்த்து மகிழலாம்.

இங்கே காணப்படும் படங்கள் ஆலய மண்டபத்தில் எடுக்கப்பெற்றவையாகும்.

# சீக்கியரான கனடாவின் முன்னாள் மத்திய அமைச்சர் அமர்ஜீத் சோஹி எட்மண்டன் மாநகரத்தின் மேயரானார்




கனடாவின் அல்பர்ட்டா மாகாணத்தின் தலைநகரான எட்மண்டன் நகரத்தின் புதிய மேயராக இந்திய வம்சாவளி கனடிய பிரஜையான அமர்ஜீத் சோஹி தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற மகிழ்ச்சியான செய்தி வெளியாகியுள்ளது. இவர் சீக்கிய இனத்தைச் சேர்ந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எட்மண்டன் நகர மேயராக தெரிவு செய்யப்பட்ட முதல் ஆசிய நாட்டவராக சோஹி வரலாறு படைத்துள்ளார். தமது வெற்றி, இந்த சமூகத்தின் வெற்றியாகவும், இந்த வெற்றியால் இனி எஞ்சிய சமூக மக்களும் உயரிய பொறுப்புக்கு முன்வர நம்பிக்கை பிறக்கும் என தமது உரையில் குறிப்பிட்டுள்ளார் சோஹி.

சிறுபான்மையினர், பெண்கள் மற்றும் வேறுபட்ட பின்னணியில் இருந்து வரும் மக்கள் என அனைவரும் நாட்டின் முக்கிய பொறுப்புகளுக்கு வர தடையாக இருக்கும் அனைத்து விதிகளையும் திருத்த வேண்டும் எனவும், அதுவே புதிய மாறுதலை சமூகத்தில் ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளார் சோஹி.

எட்மண்டன் மக்களுக்கு நன்கு அறிமுகமான சோஹி பலமுறை நகராட்சி மற்றும் பெடரல் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றுள்ளார். 2007ல் தென்கிழக்கு எட்மண்டனில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு எட்டு ஆண்டுகள் நகர சபையில் பிரதிநிதித்துவப்படுத்தினார்.




2015ல் கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவான சோஹி, 2018 வரையில் உள்கட்டமைப்பு மற்றும் சமூக நல அமைச்சராக பணியாற்றினார். தற்போது எட்மண்டன் மேயர் தேர்தலில் பதிவான 89 சதவீத வாக்குகளில் 45 சதவீதம் சோஹி கைப்பற்றியதாக தெரிய வந்துள்ளது.

1981ல் குடும்பத்துடன் இந்தியாவில் இருந்து கனடாவின் எட்மண்டன் நகருக்கு புலம்பெயர்ந்த சோஹி, போனி டூன் உயர்நிலைப்பள்ளியில் கல்வி பயின்றுள்ளார். பின்னாளில் எட்மண்டன் நகரில் பேருந்து சாரதியாகவும் பணியாற்றியுள்ளார். இவரது வளர்ச்சிக்கு இவர் துணைவியார் காரணமாக இருந்துள்ளார் என்று கனடாவின் தேசியப் பத்திரிகைகள் புகழாரம் சூட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது

# Canada- ekuruvi Steps 2021 திட்டத்தின் மூலமாக இலங்கையின் வடகிழக்கு பகுதிகளுக்கு இலங்கை ரூபா 3,882,568.57 வழங்கப்பெற்றது

## CAD $ 21,042.15

கடந்த மாதம் கனடாவின் ekuruvi Steps 2021 தினமும் 10,000 காலடிகள் மூலம் நூறுநாள் நிகழ்வு, உழளனை 19 காலத்தில் உடல், உள அரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்குடன், இரண்டாவது வருடமாக இந்த வருடமும் சுமார் 200 பேரின் பங்குபற்றுதலுடன் நடந்து முடிந்தது.

அதே நேரத்தில் வட, கிழக்கு மற்றும் மலையகம் எங்கும் கோவிட 19 காலத்தில் பொருளாதார கடும் நெருக்கடியை எதிர்வுகொள்ளும் ஆதரவற்ற மக்களுக்கு உதவுமுகமாக திரு ஆறுதிருமுருகன் ஐயாவின் வழிநடத்தலில் "சிவபூமி அறக்கட்டளை"யை ஒரு குறியீட்டு அமைப்பாக நாம் இந்த வருடம் தேர்ந்தெடுத்து உதவியிருந்தோம். அவர்களோடு சில அத்தியாவசிய தேவைகளுக்கும் வழங்கியிருந்தோம்.

இந்த வகையில் ekuruvi Steps 2021 ஊடாக தாயகத்துக்கு 3,882,568.57 SL Rupees ( $21,042.15 CAD) அனுப்பியுள்ளோம் என்பதை தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

இதில் பங்குபற்றிய அனைத்து பேரன்புமிக்க கருணைகொள் உள்ளங்களுக்கும் எங்கள் அன்பையும், நன்றியையும் தெரிவிக்கின்றோம். உங்கள் உடல் உள ஆரோக்கியத்துடன் இறைவன் எப்பொழுதும் இருப்பார்.

இவ்வாறு Ekuruvi Steps 2021 அமைப்பின் நிர்வாகியும் ஸ்தாபகருமான நவநீதன் ஆனந்தராஜ் தெரிவித்துள்ளார்.





# யானைக்கு வந்த சோதனை

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)

தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தில் திருவக்கரை என்று ஓர் இடமுண்டு. இந்த இடம் சரித்திரம் மற்றும் சமயம் இரண்டு விஷயங்களுக்கும் மிகவும் பிரசித்தி பெற்றவை. ஆசியாவில் மிக அபூர்வமாகக் காணப்படும் கல் மரங்கள் இங்கு ஏராளமான உள்ளன. அதாவது மிகவும் பெரிய மரங்கள் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக பூமியில் புதையுண்டு அவை கல்லாக மாறியுள்ளதாக இங்குள்ள கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை திருவக்கரை கிராமத்தின் பல இடங்களிலும் குறுக்கும் நெடுக்குமாகக் காணப்படும். இப்போது அவற்றை ஒன்றாக பூங்கா போன்ற ஒரு இடத்தில் வைத்து அரச பாதுகாக்கிறது.

அடுத்து திருவக்கரை கிராமத்திலுள்ள வக்கிரகாளியம்மன் அல்லது சந்திரமௌலீஸ்வரர் ஆலயம். உலகில் வேறு எந்த ஆலயத்திலும் இல்லாத பல அம்சங்கள் இங்கு உண்டு. சுருங்கச் சொன்னால் இந்த ஆலயத்தில் அனைத்துமே வக்கிரமாக இருக்கும். உதாரணமாக சிவன் கோவில்களில் இறைவனின் சன்னதி, நந்தி, கொடிமரம் ஆகியவை நேர்க்கோட்டில் இருக்கும். முதலில் கொடிமரத்தின் வழியாக ஆலயத்தில் நுழைந்து நந்திதேவரைத் தரிசித்து பிறகு சிவபெருமானை வழிபடுவது காலங்காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு மரபு. ஆனால் இங்கு திருவக்கரையில் இந்த மூன்றும் நேர்க்கோட்டில் இல்லாமல் ஒவ்வொன்றும் ஒரு திசையில் இருக்கும். மேலும் இந்தக் கோவிலிலுள்ள சனி பகவானின் வாகனமான காக்கை வலப்புறம் இல்லாமல் இடது புறத்திலேயே. பொதுவாகக் கூறுவதானால் இந்த ஆலயத்தில் எதுவே நேராக இருக்காது அல்லது முறையாக இருக்காது. எல்லாமே முரணாகவே இருக்கும்.

சோழர் காலத்தில் 10ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்த திருக்கோயிலுக்கு செம்பியன் மாதேவி ஏராளமான நன்கொடைகளும் நிலங்களும் அளித்துள்ளதாக ஆலய கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. வராக நதிக்கரையோரம் கட்டப்பட்டுள்ள இந்த ஆலயத்தில் ஏழு நிலை இராஜகோபுரம் சிறப்பு வாய்ந்தது. எனினும் கருவறையின் நுழைவாயில் நந்தி மற்றும் கொடி மரத்துடன் நேர்க்கோட்டில் இருக்காது. மேலும் இங்கு அபூர்வமாக மூலவராக லிங்க வடிவிலுள்ள சந்திரமௌலீஸ்வரர் மூன்று முகங்களைக் கொண்டுள்ளது மேலும் சிறப்பு என்று தொல்லியல் துறையினர் கூறுகின்றனர்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்த ஆலயத்திற்குச் செல்ல வேண்டும் என்கிற ஒரு எண்ணம் வந்த போது இலங்கையிலிருந்து ஒரு செய்தி வந்தது. அந்தச் செய்தியும் சற்று வக்கிரமான செய்தியாகவே இருந்தது. உலகில் எங்குமில்லாத வகையில் அனைத்திலும் வக்கரித்து கொண்டிருக்கும் திருவக்கரை கோவிலைப் போன்றே இலங்கையின் பல செயல்பாடுகள், நடவடிக்கைகள், ஒழுங்கீனம் ஆகியவை உள்ளன. ஆனால் திருவக்கரையில் அனைத்தும் வக்கிரமாக இருப்பதற்கு புராண ரீதியாக சில காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால் இலங்கையில் ஆட்சியாளர்கள் மற்றும் கொள்கையிலுள்ள வக்கிரத்தனத்திற்கு பேரினவாத கொள்கைகளே காரணமாக இருந்துள்ளன.



பொதுவாக வக்கிரம் என்பது இயற்கைக்கு மாறான அல்லது ஒவ்வாத செயலாகவே கருதப்படுகிறது. இலங்கையிலிருந்து எனக்கு அந்தச் செய்தி கிடைத்த போது அப்படியான எண்ணமே தோன்றியது.

உலகில் எங்குமில்லாத வகையில் இலங்கையில் தான் பழக்கப்பட்ட யானைகளில் பாதிக்கும் மேற்பட்டவை தனியார் வீடுகளில் உள்ளன என்பதே அந்தச் செய்தி. காட்டில் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்து இயற்கை சமநிலைக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் வலு சேர்க்கும் யானையை நாட்டிற்குள் பழக்கப்படுத்திக் கொண்டுவருவதே இயற்கைக்கு முரணானது. இது கேரளாவில் யானைகளுக்கும் பொருந்தும் என்று அறிவியல் வல்லுநர்களும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் நீண்டகாலமாகக் கூறி வருகின்றனர். ஒரு யானை ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்றால் அது குறைந்தபட்சம் நாளொன்றிற்கு 250 கிலோ தாவரங்களை உண்ண வேண்டும் அதற்காக அது 50-75 கிலோமீட்டர் அலைய வேண்டும் அல்லது நடக்க வேண்டும்.

அண்மையில் இலங்கை அரசிடமிருந்து வெளியான ஒரு தகவலின்படி நாட்டில் பாதிக்கும் மேற்பட்ட யானைகள் தனியாருக்குச் சொந்தமானது என்பது தெரியவந்துள்ளது. அரச தகவலின்படி நாட்டில் பழக்கப்பட்ட 210 யானைகளில், 102 தேசிய உயிரியல் பூங்காக்களிலும், எஞ்சிய 108 யானைகள் தனியாருக்குச் சொந்தமானவை என்று வனஜீவராசிகள் அமைச்சர் கூறியுள்ளார்.

இந்தியா போன்ற பெரிய நாடுகளில் கூட தனியார் வீடுகளில் யானைகளை வைத்துக் கொள்வது சட்டரீதியாக இயலாத ஒன்று. உலகின் மிகப்பெரும் பணக்காரர்கள் பட்டியலில் இருக்கும் இருக்கும் அம்பானி போன்றவர்கள் கூட தமது வீடுகளில் யானைகளை வைத்து கொள்வதில்லை. கோவில்களில் யானைகளை வைத்துப் பராமரிப்பதற்கு கடுமையான விதிமுறைகள் உள்ளன. ஆனால் பல இடங்களில் இந்த விதிகள் மீறப்படுகின்றன என்பது கசப்பான உண்மை.

ஆனால் இலங்கை எப்படி108 தனியார்கள் தமது வீடுகளில் யானைகளை வைத்துள்ளனர் என்கிற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. இவர்களுக்கு யார் எப்போது, எதன் அடிப்படையில் அனுமதி கொடுத்தனர், அது நாட்டின் அரசியல் சாசனம் மற்றும் வனஜீவராசிகள் தொடர்பான சட்டங்களுக்கு உட்பட்டதா, தனியார் ஒரு வனவிலங்கை வளர்க்கும் போது அதன் நலனைப் பேண முடியுமா? போன்று பல கேள்விகள் இதிலுள்ளன.

நாட்டில் தனியார் வசம் 108 யானைகள் உள்ளன என்பதை வனஜீவராசிகள் துறைக்கு பொறுப்பான அமைச்சர் சி பி ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவிக்க, பன்னாட்டு அமைப்புகளும், வனவிலங்கு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆர்வலர்களும் கண்டனக் குரல்களை எழுப்பியுள்ளனர். அவை தனியாருக்குச் சொந்தமானவை என்று அமைச்சர் கூற, சிங்கம், புலி, நரி, காட்டு எருமை, முதலை போன்ற விலங்குகளையும் தனியார் வளர்ப்பதற்கு இலங்கை அரசு அனுமதிக்குமா என்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கேள்விகள் எழுந்துள்ளன. வனஜீவராசிகள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழான விதிகள் மீதான விவாதத்தை தொடங்கி வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இந்த யானைகள் விஷயத்தை தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் தனியார் வசம் 108 யானைகள் இருப்பதை மறைமுகமாக நியாயப்படுத்தியுள்ள அமைச்சர் முன்னர் இருந்த அரசுகளும் யானைகளை தனியாருக்கு அளித்தன என்று கூறுகிறார். அதுமட்டுமின்றி முந்தைய அரசு 49 யானைகளை வைத்திருந்த தனியாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். ஆனால் என்ன நடவடிக்கை, ஏன் தொடர்ந்து காட்டு விலங்கான யானை நாட்டில் தனியாரிடம் இருக்க வேண்டும் என்கிற கேள்வி நாடாளுமன்றத்தில் கேட்கப்படவுமில்லை அமைச்சர் அதற்கான விளக்கத்தை அளிக்கவுமில்லை.



தனியார் வசமுள்ள யானைகளின் பதிவை முறைப்படுத்தவும், புதிய சட்டம் மற்றும் நலன்களைச் செயல்படுத்தவும் 2020 ஆம் ஆண்டு அமைச்சரவை பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டதாகவும் இலங்கை அரசு கூறுகிறது. கடந்த அரசால் யானைகள் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் யானைகளின் உரிமையாளர்கள் துன்புறுத்தப்பட்டதாக அமைச்சர் ரத்நாயக்க வாதிடுகிறார்.

அப்படியென்றால் நாட்டில் தனியார் வசமுள்ள அனைத்து யானைகளையும் விடுவித்து அவற்றை மீண்டும் காட்டிற்குள் அனுப்ப வேண்டிய நடவடிக்கையை ஏன் இந்த அரசு எடுக்கவில்லை? பதில் எப்போதும் எதற்கும் போல மௌனமே.

வனவிலங்குகளையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்காமல், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க யானைகளை முறையாகப் பதிவு செய்ய புதிய விதிகள் வகுக்கப்படும், யானைகளை பழக்குவதற்கு புதிய விதிமுறைகள் ஏற்படுத்தப்படும் என்று ஒரு அமைச்சர் கூறுவதை எப்படி ஏற்க முடியும். வனவிலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் மீது அக்கறை இல்லாத ஒரு அரசு வக்கிரமாக நடந்துகொள்கிறது என்று எழும் விமர்சனங்களுக்கு அரசு என்ன பதில் கூறப் போகிறது?

இதைவிட வக்கிரமாக ஒரு தகவலை அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. "பழக்கப்பட்ட யானைகள் மீதான நீதிமன்ற அழுத்தத்தை குறைத்தல், சமூகத்தில் சர்ச்சைக்குரிய சித்தாந்தங்களைக் குறைத்தல், யானைகளின் நலன் மற்றும் விலங்குகளின் கொடுமையைத் தடுப்பது போன்ற நடவடிக்கைகளில் அமைச்சர் கவனம் செலுத்தவுள்ளார்" - வாசிக்கும் உங்களுக்கு இது புரியவில்லை என்றால் அதற்கு நான் பொறுப்பல்ல.

"சட்டத்திற்குட்பட்டு" யானைகளை வைத்திருப்பது குறித்து அரசு வியாக்கியானம் அளித்துள்ள நிலையில், சட்ட விரோதமாக யானை குட்டிகளை வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அதை மீண்டும் ஒப்படைக்க நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது. இதில் சட்டவிரோதமாக 13 யானை குட்டிகளை வைத்திருந்த குற்றச்சாட்டுக்கு ஆளாது யார் என்றால் அது இலங்கை தேசிய விலங்கியல் பூங்கா! பத்தாண்டுகளுக்கு முன்னர் இலங்கை நடத்தப்பட்ட யானை கணக்கெடுப்பின்படி நாட்டின் 5,879 யானைகள் இருந்ததாகத் தெரிய வந்தது. ஆனால் இந்த பத்தாண்டுகளில் அந்த எண்ணிக்கை கூடியுள்ளதா அல்லது குறைந்துள்ளதா என்று அரசிடம் எவ்வித தகவலும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவை தந்தங்களை கொண்ட யானைகளின் எண்ணிக்கை 55 என்று அந்த கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளது. அதாவது நாட்டிலுள்ள மொத்த யானைகளின் தொகையில் இது ஒரு வீதமே. இது பல கேள்விகளை எழுப்புகிறது. தந்த சந்தையின் முக்கியமான ஒரு கேந்திரமாகக் கருதப்படும் சீனாவுக்கு எத்தனை யானை தந்தங்கள் கடத்தப்பட்டோ அல்லது அனுப்பப்பட்டோ உள்ளன என்பது யாருக்கும் தெரியாது. 5,879 யானைகளில் 55 யானைகளே தந்தம் கொண்டவை என்றால் ஆண்-பெண் யானை விகிதாசாரம் என்னவாகும், எதிர்காலத்தில் இனப்பெருக்கம் எப்படியிருக்கும் என்று பல கேள்விகள் பல மட்டங்களில் கேட்கப்படுகின்றன.



ஆனால், எதிலுமே நேராகவும் நேர்மையாகவும் சிந்திக்காமல் "வக்கிரமாக" சிந்திக்கும் அரசிடமிருந்து மனிதர்கள் மட்டுமல்ல விலங்குகளுக்குக் கூட நியாயம் கிடைக்காது என்பதை மறுப்பதற்கில்லை.



# கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

**NEW LIFE FRESH START**

**வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு**

**Reduce your debts upto 80%**

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
ᵉroted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

**55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4**

**Tel: 647-274-2832**
**Fax: 416-332-0914**
www.creditrecoverycanada.com



# தமிழக மீனவர்கள் எங்கள் உறவுகள்தான் ஆனால் வாயும் வயிறும் வேறு!

- கனடா நக்கீரன்

இந்த மாதம் தமிழக மீனவர்கள் இலங்கை - இந்தியா கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடிக்க வருவதால் ஏற்படும் விளைவுகள் பற்றிய வாதப் பிரதிவாதம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த ஒப்தோபர் 18 அன்று புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டினத்திலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குள் சென்றனர். கோட்டப் பட்டினத்தைச் சேர்ந்த 3 மீனவர்களும் விசைப்படகில் மீன்பிடிக்க சென்றனர்.

இலங்கை கோவளம் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி அவர்களைக் கைது செய்ய முயன்றனர்.

இதன்போது தமிழக மீன்பிடி விசைப்படகு இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான கண்காணிப்புக் கப்பல் மீது மோதியதில் மீன்பிடி விசைப்படகு நடுக்கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

கடலில் தத்தளித்த இருவரை இலங்கைக் கடற்படையினர் மீட்டு காங்கேசன்துறைக் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்று முதலுதவி அளித்தனர். ஆனால் மூன்றாவது மீனவருக்கு (இராஜ்கிரன்) என்ன நடந்தது என்பது தெரியாமல் இருந்தது. ஒக்தோபர் 19 அன்று கடலில் மூழ்கிக் காணாமல் போன மீனவர் இராஜ்கிரனது சடலம் மீட்கப்பட்டதாக செய்தி வந்தது.

இரண்டாவது நிகழ்வு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வடக்கு, கிழக்கில் கமக்காரர்கள், தோட்டக்காரர்கள் மற்றும் மீனவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்குத் தீர்வு கோரி ஒக்தோபர் 17 ஞாயிறு, 18 திங்கட்கிழமை நாட்களில் இரண்டு கவனவீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றன.

இழுவைப் படகு தடைச் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துமாறு கடற்தொழில் நீரியல்துறை அமைச்சரைக் கோரி ஒக்தோபர் 17, ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரை கடல் வழியாக எதிர்ப்புப் பேரணி இடம்பெற்றது.

"இந்திய மீனவர்களுக்கு எதிரான போராட்டம் நடத்துவது என்பதும் அதற்கு எதிராக போர்க்கொடி உயர்த்துவது என்பதும் ஏற்புடையது அல்ல. எல்லா மீனவர்களும் எங்கே மீன்வளம் இருக்கின்றதோ அந்த மீன் வளத்தை தேடிப் போவது என்பது இயற்கையான ஒன்று" என சுரே' பிரேமச்சந்திரன் உபதேசம் செய்கிறார்.

இந்த வாதத்தின் அடிப்படையில் தென்னிலங்கை சிங்கள மீனவர்கள் வடக்கே படையெடுத்து வந்து மேற்கே மன்னார் தொடக்கம் கிழக்கே முல்லைத்தீவு வரை மீன் பிடிக்கலாம், வட மாகாண மீனவர்கள் தங்கள் தொழில், படகுகள், வலைகள், வாழ்வாதாரங்களை இழந்து பஞ்சை பராரியாய் தெருக்களில் பிச்சை எடுத்து வாழ வேண்டும் என்று சொல்ல வருகிறாரா?

இன்று கடற்தொழில் நீரியல்துறை அமைச்சராக ஒரு தமிழரே இருக்கிறார். அவர் நினைத்தால் இழுவைப் படகுத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி தமி-ழக மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லையைத் தாண்டி வந்து மீன்பிடிக்கும் இழுவைப் படகுகளை **(Trawlers)** சிறைப்பிடிக்கலாம். அவர்கள் பயன்படுத்தும் தடைசெய்யப்பட்ட இருமடி மற்றும் சுருக்குமடி வலைகளையும் கைப்பற்றலாம்.

தமிழக மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லையை மீறவில்லை என்று வாதாடவில்லை. கடல் எல்லையைத் தாண்டுகிறோம் எனத் தெரிந்தே செய்கிறார்கள். கேட்டால் தங்கள் பகுதிக் கடலில் மீன் வளம் இல்லையென்றும் இந்தப் பக்கத்தில்தான் மீன்வளம் அதிகமாக இருப்பதாகவும் இங்கு மீன்பிடிக்க முடியாவிட்டால் தாங்கள் தங்கள் குடும்பத்தோடு பட்டினி கிடந்து சாக வேண்டும் என ஒளிவு மறைவின்றிக் கூறுகிறார்கள்.

தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தின் விளைவாகத்தான் தமிழகப் பக்கம் இருக்கும் கடல் வளம் அழிந்தது என்பது வரலாறு.

அத்து மீறி நுழையும் மீனவர்களை அவ்வப்போது இலங்கைக் கடற்படை கைது செய்கிறது. அவர்கள் பயன்படுத்திய இழுவைப்படகுகளையும் கைப்பற்றுகிறது. ஆனால் கைது செய்யப்பட்டவர்கள் விரைவாக விடுதலை செய்யப்படுகிறார்கள். கைப்பற்றப்பட்ட படகுகளும் விடுவிக்கப்படுகின்றன என வட - கிழுக்கு மீனவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

இலங்கைக் கடற்படையினரால் மார்ச் 25, 2021 அன்று தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மீனவர்கள் 54 பேரை கைது செய்யப்பட்டனர். அவர்களது படகுகளையும் இலங்கைக் கடற்படை கைது செய்தது. இலங்கை மீனவர்களையும் இலங்கை கடல் வளங்களையும் பாதுகாப்பதற்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டதாக மீன்வள அமைச்சர் டக்லஸ் தேவானந்தா கூறுகிறார்.

இந்த ஆண்டு சனவரி 18, 2021 ஆம் தேதி காலை புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்திலிருந்து நான்கு மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குள் சென்றனர். அவர்கள் நெடுந்தீவுக்கும் கச்சத்தீவுக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது தமிழக மீனவர்களையும் மீன்பிடிப் படகையம் இலங்கைக் கடற்படை சிறைப் பிடித்தது.

எல்லைமீறி நுழையும் தமிழக மீனவர்களின் இழுவைப் படகுகள் யாழ்ப்பாணம் - வடமராட்சி பருத்தித்துறை கடற் தொழிலாளர்களின் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் நாசம் செய்கின்றன என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழக அரசால் 2000 ஆம் ஆண்டு தடைசெய்யப்பட்ட சுருக்குமடி வலைகளைப் பயன்படுத்துவதால் அதில் பவளப்பாறைகள் மற்றும் குஞ்சு மீன், முட்டைகள் தொடங்கி பெரிய வகை மீன்கள் சிக்கிக்கொள்கின்றன. தமிழக மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடலில் மீன்பிடிப்பதற்குக் காரணம் தங்கள் பக்க மீன்வளம் அழிந்துவிட்டது என்பதாகும்.

அப்படிச் சொல்லும் தமிழக மீனவர்கள் இலங்கைப் பக்கம் காணப்படும் உள்ள மீன்வளமும் அழிந்துவிடும் என்பதை உணர மறுக்கிறார்கள்.

அண்மையில் இராமேஸ்வரம் மீனவர்கள் தடைசெய்யப்பட்ட இரட்டைமடி, சுருக்குமடி ஆகிய மீன்பிடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடிப்பதாக வந்த செய்தியை அடுத்து இந்திய கடற்படையும் இராமநாதபுரம் மீன் வளத்துறை இணை இயக்குநர் மற்றும் மீன் வளத்துறை ஆய்வாளர் இராஜ்குமார் கொண்ட அதிகாரிகள் குழு இனைந்து தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்து கொண்டிருந்த மீனவர்களை கைது செய்தது. அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்துள்ளது. ஆனால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

இலங்கை மீனவர்கள், குறிப்பாக வட இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கும் இதுதான் சிக்கல். தங்கள் கடலில் அத்துமீறி நுழைந்து தடைசெய்யப்பட்ட படகுகளையும் வலைகளையும் பயன்படுத்தி தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கிறார்கள். இதனால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக வட இலங்கை மீனவர்கள் முறையிடுகிறார்கள். அவ்வப்போது ஆட்சியாளர்களின் கவனத்தை ஈர்க்க போராட்டமும் நடத்துகிறார்கள். முப்பது ஆண்டு போர் காரணமாக தென்னிலங்கையோடு ஒப்பிடும் போது வட இலங்கையின் கடற்றொழில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. தெற்கில் உள்ள வசதிகளில் கால் பங்கு கூட வடக்கில் இல்லை.

1956 இல் இந்திய அரசு, தன் கடல் ஆதிக்க எல்லைக் கோட்டை, 3 கடல் மைல்களிலிருந்து (ஒரு கடல் மைல் என்பது, 1.15 மைல் அல்லது 1.863 கிமீ) 6 கடல் மைல்களாக விரிவுபடுத்தியது. இது போன்ற போட்டி அறிவிப்பை இலங்கை அரசும் வெளியிட்டது. இதனால் இருநாடுகளுக்கும் இடையிலான சிக்கல் வலுவடைந்தது. 1973 இல், அன்றைய பிரதமர் இந்திரா இலங்கை சென்றார். பின், இரு நாடு அதிகாரிகளும் கூடிப் பேசினர். 1974 இல், இலங்கைப் பிரதமர், சிரிமாவோ பண்டாரநாயகா இந்தியா வந்தார். அண்டை நாடுகளுடன் சமாதான சகவாழ்வு என்ற இந்தியாவின் கொள்கை இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் சேதுபதிக்குச் சொந்தமான கச்சதீவு கைமாறக் காரணமாக இருந்தது. 1947 ஆம் ஆண்டு ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் கொண்டு வரும் வரையில் கச்சதீவு சேதுபதி மன்னர்களின் ஆட்சியில் இருந்தது.

1974 இல் எழுதப்பட்ட இலங்கை - இந்திய உடன்பாடு காகரணமாக இலங்கையின் கடல் எல்லைக்குள் கச்சதீவு வந்துவிட்டது. கச்சதீவு நெடுந்தீவுக்கு தெற்கே 9 மைல் தொலைவிலும் இராமேஸ்வரத்திற்கு வடகிழக்கே 10 மைல் தொலைவிலும் உள்ள பாக்கு நீரணை என்ற பகுதி-யில் இருக்கிறது.

1976 ஆம் ஆண்டு 1974 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட உடன்படிக்கையின் கீழ் தமிழக மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சலுகைகள் பறிக்கப்பட்டன.

1976 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து 1983 இல் தமிழ்நாடு கடல்வள மீனவர் சட்டம் கொண்டு வரப்பட்டபோது கச்சதீவு எல்லை மாற்றி அமைக்ககப்பட்டது. இன்றைய சிக்கலுக்கு இந்தச் சட்டம் முக்கிய காரணம் ஆகும்.

பாக்கு விரிகுடா இலங்கையின் வடக்கு மாகாணத்திலிருந்து தமிழ்நாடு மாநிலத்தை பிரிக்கும் ஒரு குறுகிய நீரணை. வரலாற்று ரீதியாக இரு நாடுகளுக்கும் வளமான மீன்பிடித் தளங்களை வழங்கியுள்ளது.

மே 19, 2009 ஆம் ஆண்டு இலங்கை உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் மோதல்கள் ஒரு புதிய பரிமாணத்தை எடுத்தன.

இந்தப் பாக்கு விரிகுடா 137 கிமீ நீளம் மற்றும் 64 முதல் 137 கிமீ (தோராயமாக 40 முதல் 85 மைல்கள்) அகலம் கொண்டது. சர்வதேச கடல் எல்லைக் கோட்டால் (ஐஎம்பிஎல்) பிரிக்கப்பட்டுள்ளது. அதன் எல்லையில் 5 இந்திய மாவட்டங்களும் 3 இலங்கை மாவட்டங்களும் உள்ளன. 2004 ஆம் ஆண்டில், இந்தியப் பக்கத்தில் தோராயமாக 262,562 மீனவர்களும், இலங்கை பக்கத்தில் 119,000 மீனவர்களும் இருக்கின்றனர்.

இலங்கையின் வடக்கு மாகாணத்திற்கு மீன்பிடித்தல் பொருளாதார ரீதியாக மிகவும் முக்கியமானது. இலங்கையில் இயல்பு நிலை நிலவியபோது அந்த மாகாணம் "நாட்டின் மொத்தப் பிடிப்பில் மூன்றில் ஒரு பங்கிற்கு பங்களித்தது". போர் காரணமாக மீன் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தது.

யாழ்ப்பாணத்தில் உள்ள அரசாங்க முகவரின் கூற்றுப்படி, யாழ்ப்பாண மாவட்டம் 1983 இல் 48,776 மெட்ரிக் தொன் மீன்களை உற்பத்தி செய்வதில் இருந்து 2000 இல் 2,211 மெட்ரிக் தொன்களாக இருந்தது. மன்னார் மாவட்டத்தில், 1983 இல் 11,798 மெட்ரிக் தொன்னிலிருந்து 2002 இல் 3,614 மெட்ரிக் தொன்களாக உற்பத்தி சென்றது.

இன்று மீன்பிடிக்குப் பெயர் போன மயிலிட்டிக் கிராமத்தில் வாழ்ந்த ஆயிரத்துக்கும் மேலான மீனவக் குடும்பங்கள் மீள் குடியமர்தப்படவில்லை. வலிகாமம் வடக்கில் 3,500 ஏக்கருக்க மேலான காணிகளை இராணுவம் பிடித்து வைத்திருக்கிறமது.

தமிழக மீனவர்கள் எங்கள் உறவுகள்தான். ஆனால் வாயும் வயிறும் வேறு. தமிழக மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு இந்திய அரசு வேண்டிய பயிற்சியை, படகுகளை, வலைகளை கொடுத்து உதவவேண்டும். இருபக்க மீனவர்களுக்கு இடையே இன்று காணப்படும் மோதல் போக்கை நிரந்தரமாகத் தணிப்பதற்கு இதுவே ஒரே வழி!


கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

அறிவித்தல்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவீரர் தொடர்பான விபரங்களையும், மாவீரர்களது பெற்றோர், சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது.

கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர்,தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரரின் குடும்பத்தினர்,புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர்களது குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம். போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

நன்றி.
வணக்கம்.
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
தொடர்பு இலக்கம்: 647 619 3619
**ctro@tamilremembrance.com.**

# அன்பின் தொனி - 627

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள் - Be Holy**

**கடவுளை அறிகிற அறிவு அவசியம்**

கடவுளைப் பற்றிய அறிவில்லாமல் பரிசுத்தத்தைக் குறித்து சரிவர தெரிந்துகொள்ள முடியாது, ஏனெனில் கடவுள் பரிசுத்தராய் இருப்பதனால் அவரை அறிகிற அறிவு பரிசுத்தத்தை இலகுவாக புரிந்துகொள்ள ஏதவாயிருக்கும். ஆகவே தேவனையும், அவருடைய மகத்துவங்களையும், மேன்மைகளையும், இயல்புகளையும், தேவத்துவத்தின் தன்மைகளையும், அவருடைய குணாதிசயங்களையும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து மேலும் பார்த்து அறிந்து கொள்வது அவசியம்.

**தேவனுடைய தத்துவத்தின் தன்மைகள் (தேவத்துவம்) - Attributes of God**

**1. தேவனுடைய அறிவு - The Knowledge of God**

தேவன் சகலத்தையும் அறிந்தவர், அவர் அறியாததென்று ஒன்றும் இல்லை, இருக்கவும் முடியாது. இருந்தது, இருக் கிறது, இருக்கப்போவது, நடந்தது நடக்கிறது நடக்கப்போவது, போன்ற சகலத்தையும் அறிந்தவரும் தெரிந்தவருமாய் இருக்கிறார். அவர் வானத்திலும் பூமியிலும் பாதாளத்திலும் இருக்கக்கூடிய சகலத்தையும் குறித்த முழு விபரங்க ளையும் அறிந்தவராய் இருக்கிறார். அவர் இருளில் இருப்பதையும் அறிவார், அவர் கவனத்திற்கு இல்லாதது ஒன்று மில்லை, அவருக்கு மறை பொருள் என்றோ, மறந்ததென்றோ ஒன்றுமில்லை. அவர் அறிவு பூரணமானது, குறை வற்றது, ஆச்சரியமானது, அளவிடமுடியாதது. அவர் தவறாதவர், மாறாதவர், அவருடைய பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை. அப்படிப்பட்ட சகலத்தையும் அறிந்த தெரிந்த தேவனை நாம் சரிவர அறியவேண்டும்.

அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர், இருளில் இருக்கிறதை அவர் அறிவார், வெளிச்சம் அவரிடத்தில் தங்கும். **- தானியேல் 2: 22**

கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந் திருக்கிறீர், என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந் திருக்கிறீர், என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என் மேல் வைக்கிறீர். இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது. **- சங்கீ 139: 1-6**

அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை, சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். **- எபிரெயர் 4: 13**

**2. தேவனுடைய மகத்துவம் - The Spremacy of God**

பூமி அனைத்திலும் உள்ள தேவனுடைய மேன்மையையும் மகத்துவத்தையும் பரிசுத்த வேதாகமம் தீர்க்கமாகவும், முளுமையாகவும் தெளிவுபடுத்துகிறது. உலகத்திலுள்ள தேசத் தலைவர்களும், அரசர்களும், சமயத் தலைவர்களும் அவருக்கு முன்பாக ஒரு சிறு பூச்சிக்கும் குறைவானவர்களாகவே காணப்படுவர். அப்படிப்பட்டவர்தான் எமது மகத்து வமும் மாட்சிமையுமுள்ள தேவாதி தேவன். அவருக்கு நிகராக ஒருவரும் இல்லை.

கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள், வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள். கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது, தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர். ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது, தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர், உம்மு டைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு, எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும். இப்போதும் எங்கள் தேவனே, நாங்கள் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, உமது மகிமையுள்ள நாமத்தைத் துதிக்கிறோம். **- 1 நாளாகமம் 29: 11-13**

எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன், தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர், உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது. **- 2 நாளாகமம் 20: 6**

புதிய ஏற்பாட்டிலும் தேவனுடைய உன்னதமான மகத்துவத்தை உறுதிப்படுத்தி தீர்க்கமாக எழுதப்பட்டிருக்கிறது. தேவன் தமது அனாதி தீர்மானத்தின்படி, அவருடைய சித்தப்படி கிரியைகளை நடப்பிக்கிற மகத்துவமுள்ளவர் என்று வேதம் விபரிக்கிறது.

தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம். **- எபேசியர் 1: 12**

கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில்கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது, அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென். **- ரோமர் 11: 34-36**

தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக் கூடுமோ? அது வானபரியந்தம் உயர்ந்தது, உம்மால் என்ன ஆகும்? அது பாதாளத்திலும் ஆழமானது, நீர் அறியக் கூடியது என்ன அதின் அளவு பூமியைப்பார்க்கிலும் நீளமும், சமுத்திரத்தைப்பார்க்கிலும் அகலமுமாயிருக்கிறது. **- யோபு 11: 7-9**

தொடரும்...

# சரும ஆரோக்கியத்தில் பழங்களின் இரகசியம்



இயற்கையோடு ஒன்றித்து வாழும் வாழ்க்கை என்றும் இனிமையானது. இயற்கை எமக்கு தரும் நன்மைகள் பல்லாயிரம். கடவுள் அளித்த எமது சருமத்தை ஆரோக்கியமாக பராமரிக்க இயற்கை தரும் அதிசயமே பழங்கள். பழங்கள் இளமையாகவும் உற்சாகமாகவும் உங்களை வைத்திருக்க உதவுகிறது. அவற்றிலுள்ள ஆன்டி ஆக்ஸிடென்ட் நோய் எதிர்ப்பு சக்தியை தருகிறது. குறிப்பாக சரும சுருக்கங்களை போக்க உதவுகிறது.

சருமத்தை பொலிவாக்கவும், மெருகூட்டவும் பழங்கள் பயன்படுகிறது. பழங்கள் உண்ணவும் பயன்படுத்துகிறோம். அதே சமயம் வெளிப்பூச்சுகளுக்கு உதவவும் பயன்படுத்துகிறோம். எந்த வகையான பழம் எந்த விதமாக சரும அழகு மேம்பட பயன்படுகிறது என பார்க்கலாம்.

**பப்பாளி:**

பப்பாளி மிகச் சிறந்த நன்மை தரக் கூடிய பழம். சுருக்கங்களை போக்குகிறது. கரும்புள்ளி, மருக்களை போக்க உதவுகிறது. பப்பாளியின் சதைப் பகுதியை தினமும் முகத்தில் போட்டு 10 நிமிடம் கழித்து முகத்தை கழுவினால் என்றும் இளமைதான்.

**அவகாடோ:**

அவகாடோவில் அதிக விட்டமின் ஈ, ஏ, சி, கே, பி6 போன்றவை சருமத்தில் உண்டாகும் பாதிப்புகளை சரி செய்கிறது. ஊதாக் கதிர்களால் உண்டாகும் சரும பாதிப்புகளை நீக்குகிறது. அவகாடோவின் சதைப் பகுதியை எடுத்து அதில் பால் சிறிது கலந்து முகத்தில் தேயுங்கள். 10 நிமிடங்கள் கழித்து முகத்தை கழுவவும். மிகவும் மென்மையான சருமத்தை உணர்வீர்கள்.

**மாம்பழம்:**

மாம்பழம் தங்க நிறத்தை தரும் பழமாகும். சருமத்திற்கு நல்ல போஷாக்கை அளிப்பதால் ஒடுங்கிய கன்னங்கள் புஷ்டியாகும். மாம்பழத்தின் சதைப் பகுதியுடன் சிறிது பால் கலந்து முகத்தில் தடவுங்கள். 10 நிமிடங்கள் கழித்து முகத்தை கழுவுங்கள்.

**திராட்சை:**

திராட்சை சரும சுருக்கங்களைப் போக்கும். நிறத்தை அதிகரிக்கச் செய்யும். திராட்சை சாறு எடுத்து சிறிது தேங்காய் எண்ணெயுடன் கலந்து முகத்தில் தேய்த்து காய்ந்ததும் கழுவுங்கள். அதிக எண்ணெய் சருமம் இருப்பவர்கள் திராட்சையை நேரடியாக தடவலாம்.



**கிவிப் பழம்:**

கிவிப் பழம் செல் சிதைவை தடுக்கிறது. டி. என். ஏ பாதிப்பிருந்தால் செல்சிதைவு அதிகமிருக்கும். இதனால் சருமம் விரைவில் முதிர்ச்சி அடைந்துவிடும். இதனை கிவி போக்கிவிடும். கிவிப் பழத்தை மசித்து முகத்தில் போடுவதால் சருமம் அழகாகிறது, சுருக்கம் மறைகிறது.

**ஆரஞ்சு:**



ஆரஞ்சு பழத்தில் அதிக விட்டமின் சி மற்றும் ஆன்டி ஆக்ஸிடென்ட் இருக்கிறது. இவை சருமத்தில் உண்டாகும் மெல்லிய சுருக்கம், கருவளையம், மற்றும் கருமையை போக்குகிறது. கொலாஜன் உற்பத்தியை தருவதால் சருமம் என்றும் இளமையாகவே இருக்கும். ஆரஞ்சு சாறை எடுத்து அதில் சிறிது ஆலிவ் எண்ணெய் கலந்து முகத்தில் தடவுங்கள். 15 நிமிடம் கழித்து முகத்தை கழுவலாம். நல்ல பலனைத் தரும்.

**தர்பூசணி:**

தர்பூசணி ஜூஸில் சிறிது எலுமிச்சை சாறு மற்றும் முல்தானி மட்டி ஒன்றாக கலந்து முகத்தில் தடவுங்கள். 20 நிமிடங்கள் கழித்து முகத்தை கழுவவும். இது சரும தொய்வை குணப்படுத்துகிறது. இதனால் வயதான பின் வரும் தொய்வை தடுக்கலாம்.

**வெள்ளரிக்காய்:**

வெள்ளரிக்காய் சரும நிறத்தை அதிகரிக்கச் செய்கிறது. குளிர்ச்சியை தருவதால், சருமம் பளபளப்பாகிறது. வெள்ளரிக்காயை பாலுடன் சேர்த்து அரைத்து முகத்தில் போடுங்கள். அரை மணி நேரம் கழித்து முகத்தை கழுவினால் முகம் பளிச்சென்று இருக்கும்.

**எலுமிச்சை:**

காலை எழுந்தவுடன் தினமும் ஒரு கிளாஸ் தண்ணீரில் எலுமிச்சை சாறு சேர்த்து குடித்து வரலாம். இதனால் சருமம் பிரகாசமாகவும் ஈரப்பதத்துடனும் இருக்கும். குளிர்பானங்கள் குடிப்பதை குறைத்துவிட்டு, பழச்சாறுகளை அடிக்கடி குடிக்கலாம்.

"செயற்கையை விடுத்து இயற்கை வழிகளை கையாளுதல் என்றும் நன்மையையே தரும்"

- இரா. சஹானா

# ஈழத்துத் திருக்கோவில்கள் 969



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் திருகோணமலை

*"கல்லாத மாந்தரின் கண்ணீரை நீக்கிடும்*
*கருவண்ண அன்னை நீயே*
*கற்றோரின் நெஞ்சத்தில் கலங்கரை விளக்கான*
*காவியச் சுடரும் நீயே*
*வில்லாக வேலாக வினை தீர்க்கும் மருந்தாக*
*விளங்கிடும் சக்தி நீயே*
*வேண்டிடும் நல்வரம் விரைவாகத் தந்திடும்*
*ஆவட்டுடைக் காளி உமையே."*

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில், தமிழ் ஈழத்தின் தன்னிகர் இல்லாச் சிறப்புடன் குரைகடல் ஓத, நித்திலம் கொழிக்கும் புண்ணிய பூமியாகத் திகழ்வது விளங்குவது திருகோணமலை. இந்நிலப்பரப்பின் அழகை வர்ணிப்பது எளிதன்று. அலையெறிந்து ஆர்ப்பரிக்கும் கடல் முப்புறமும் காணப்பட, இயற்கையின் எழில் கொஞ்ச, மிகப் பெரிய இயற்கைத் துறைமுகத்தையும் தன்னகத்தே கொண்டதோடு, ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆலயங்களையும் தன்னுள் அடக்கிய புண்ணிய பூமியாகத் திருகோணமலை திகழ்கின்றது.

பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றாகத் திகழும் திருக்கோணேஸ்வரத்திற்குச் சற்றுத் தூரத்தில் அருளும், புகழும் கொண்ட ஸ்ரீ பத்திரகாளி கோயில் அமைந்துள்ளது. திருகோணமலைப் பட்டினத்தின் இருதயம் போல விளங்கும் இக்கோயிலைக், காளிகோயில் என இவ்வூர் மக்கள் அழைப்பர். இக்கோயில், திருகோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து ஏறக்குறைய ஒரு கிலோ மீற்றர் தூரத்தில், பேருந்து நிலையத்திற்குச் சமீபமாக, டொக்கியாட் வீதிக்கு அருகாமையில், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரிக்குச் சமீபத்தில் அமைந்துள்ளது. அருகே ஆலடி விநாயகர் ஆலயம் காணப்படுகின்றது. ஆலயத்திற்கு எதிரே பரந்து காணப்படும் விளையாட்டு மைதானமும், அதையடுத்துக் காணப்படும் ஆர்ப்பரிக்கும் இந்துசமுத்திரமும் இவ்வாலயத்திற்கு மேலும் மெருகூட்டுகின்றது. இவ்வாலயம் கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் காணப்படுகின்றது. இவ்வாலயத்தில் நின்றவாறு திருக்கோணேஸ்வரத்தைத் தரிசிக்க முடியும்.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வரலாறு தொன்மையுடையது. வாய்மொழிக்கதைகள், பாடல்கள் போன்றவற்றின் மூலம், இவ்வாலயம் குளக்கோட்டு மன்னனால் கட்டப்பட்டதென்று அறியமுடிகின்றது. இந்தியாவிலிருந்து இலங்கை வந்த குளக்கோட்டு மன்னன், திருக்கோணேஸ்வரத்தைப் புதுப்பித்துக் கட்டியதோடு, காவல் தெய்வமாக ஸ்ரீ பத்திரகாளி கோவிலை நிறுவினான். அக்காலந்தொட்டு ஸ்ரீ பத்திரகாளி அன்னையானவள், எல்லைக் காளியாக விளங்கி வருகின்றாள்.

இக்காலந்தொட்டு இவ்வாலயம் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்கி வருவதோடு, சோழர் இலங்கையை ஆண்ட காலத்தில் மிகச் சிறப்புப் பெற்று விளங்கியுள்ளது. இவ்வாலயத்திற்குரிய கல்வெட்டுக்கள், பழைய சான்றுகள், கர்ண பரம்பரைக் கதைகள் மற்றும் வாய்மொழிக்கதைகள் இவற்றை ஆதாரமாகக் காட்டியும், ஆலய அமைப்பு, மற்றும் ஆலயத்திலுள்ள விக்கிரகம், வாகனம், தகளி, மற்றும் இங்குள்ள பொருள்களையும் ஆராய்ந்த ஆய்வாளர்கள், இவ்வாலயம் முதலாம் இராஜேந்திர சோழனுடைய காலமாகிய கி.பி 11 ஆம் நூற்றாண்டில், சிறப்புற்று இருந்திருக்க வேண்டுமெனச் சுட்டிக்காட்டியுள்ளனர். இக்கூற்றுக்களிலிருந்து இவ்வாலயம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட மிகத் தொன்மை வாய்ந்த ஆலயம் என்பதும் புலப்படுகின்றது.

இவ்வாலயத்தின் தோற்றம் பல நூற்றாண்டுகளைக் கொண்டதோடு, செல்வச்சிறப்புமிக்க ஆலயமாகவும் விளங்கியுள்ளது. போத்துக்கேயர் கி.பி 1505 ஆம் ஆண்டு இலங்கையுள் காலடி எடுத்து வைத்தனர். பின்னர் ஈழத்திலுள்ள ஆலயங்களின் செல்வங்களைக் கொள்ளையிடும் நோக்கோடு அவற்றை நிர்மூலமாக்கி அழித்துள்ளனர். கி.பி 1624 ஆம் ஆண்டு கொள்ளையிடப்பட்டு, நிர்மூலமாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஆலயங்களுள், திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயமும் அடங்கும். இதன் பின்னர் இவ்வாலயம் புதுப்பிக்கப்பட்டமைக்கு கர்ண பரம்பரைக் கதையொன்று வழக்கிலுள்ளது. இராமேஸ்வரத்திலிருந்து அந்தணரொருவர் தவம் செய்வதற்காக வடகயிலை நோக்கிப் புறப்பட்டார். அன்னை ஸ்ரீ பத்திரகாளி அவர் கனவிலே தோன்றி, வட கயிலை செல்ல வேண்டாம், தென்கயிலை நோக்கிப்பபுறப்படு. தக்கிணகைலாயம் என்று அழைக்கப்படும் திருகோணமலையில், தொங்கிச் சிதம்பரத்தம் பூமரத்துக்கு அடியில் நான் ஒரு கிடாரத்தினுள் இருக்கின்றேன். என்னை வெளியே எடுத்துப் பூசை செய்து தவத்தை மேற்கொள் என்று பணித்துள்ளாள்.

அந்நியர் ஆக்கிரமிப்பின்போது, ஆலய அந்தணர்களும், ஏனையோரும் விக்கிரகங்களையும், ஆலயப்பொருட்களையும் மண்ணுள் புதைத்து வைத்தும், கிணறுகளில் போட்டு மூடியும், தூர இடங்களுக்கு விக்கிரகங்களையும், ஏனைய பொருட்களையும் எடுத்துச் சென்று காப்பாற்றிய பல சம்பவங்களை ஆலய வரலாறுகளை ஆராயும் போது அறியலாம். இவ்வாறான விக்கிரகங்கள் காலதேச வர்த்தமானப்படி குறிப்பிட்ட அருளாளர்களின் மனதிலே தமது இருப்பிடத்தைக் காட்டி, வெளிக்கொண்டுவந்த பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளது. இவ்வாறான ஒரு சம்பவமாகவே மேற்கூறிய சம்பவமும் காணப்படுகின்றது.

*வளரும்...*

உ
பிக்கரிங் நகரில்
அருள்ஜோதி சிவாலயம்







1400 Baylyst Unit - 13 அமைந்திருக்கும்
அருள்மிகு கௌரி அம்பிகா சமேத சாம்பசிவ பெருமானுக்கு
"மஹா கும்பாபிஷேகம்"
20-10-2021 புதன்கிழமை கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகி
23-10-2021 சனிக்கிழமை காலை 9மணி முதல் 4மணி வரை
அடியவர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தலாம்
24-10-2021 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 தொடக்கம்
8.30 வரை உள்ள சுபமுகூர்த்தத்தில்
மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.
அடியவர்கள் யாவரும் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகைதந்து சிவப்பரம் பொருளின்
அருளைப் பெருமாறு அழைக்கின்றார்கள் ஆலய அறங்காவல சபையினர்.
தொடர்புகளுக்கு: 647–746–7474


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 31)*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் இலங்கைப் பயணம்

பின் வந்தியத்தேவனையும், ஆழ்வார்க்கடியானையும் தன்னுடன் அழைத்துச் சென்று, அவர்கள் கொண்டு வந்த செய்திகளைக் கேட்டார். வந்தியத்தேவன் கடம்பூரில் நடந்தவை பற்றியும், சக்கரவர்த்தியை சிறை வைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்கள் என்றும், குந்தவைக்கு இதனால் பெரும் மனக் கவலை என்றும் கூறினான். ஆழ்வாக்கடியானோ திருப்புறன்பியம் பள்ளிப் படையருகில் நள்ளிரவில் நடந்த கொள்ளைக் காரர்களின் சதியைப் பற்றியும் கூறினான். சோழ நாட்டு நிலைமை இவ்வாறு அபாயகரமாக இருப்பதால் அங்கு வராமலிருப்பதே நன்று என்று முதல் மந்திரி சொன்னதை ஆழ்வாரக்கடியார் மறுபடியும் வலியுறுத்தினார். இங்கும் படையெடுத்து மேலும் வீரர்களைக் கொண்டு போக வேண்டாம் என்றும், படைகளைத் திரட்டி வட இலங்கையில் சேர்த்து வைக்குமாறும் கேட்டுக் கொள்கிறார். பாண்டிய நாட்டில் தற்போதுள்ள கைகோளர் படை, வன்னிய படை, வேளாள படை இவை மூன்றும் இளவரசருக்காக உடல், பொருள், ஆவியை அர்ப்பணிக்க காத்திருக்கிறார்களாம் என்பதையும் தெரிவிக்கச் சொன்னார்.

மேலும் எனக்கோர் சந்தேகம், தாங்கள் யானைப் பாகன் வேடம் போட்டு எதிரிகளின் எல்லைக்குள் தனியாகப் போனதன் காரணம் யாது? அதற்கு இளவரசர், 'சிம்மகிரிச் சித்திரங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அதிக நாளாக உள்ளது. அதைத் தீர்த்துத் கொண்டேன். பார்த்திபப் பல்லவர் திருகோணமலை வந்த செய்தி அறிந்தேன். அவரை இன்று பார்க்க விரும்பவில்லை. முதல் மந்திரி மாதோட்டம் வந்துள்ளார். அவர் செய்தியையும் எதிர்பார்த்தேன். இவர்கள் மூத்தவர்கள் முதற்கிடைத்த செய்திப்படி நான் நடக்க வேண்டும் என்பதற்காக' என்றார். இவ்வாறாக மூவரும் உரையாடிவிட்டு, 'நாளை நாம் அனுராதபுரம் போக வேண்டும் அவர்கள் சொல்வதைக் கேட்டுவிட்டு பின்னர் நாம் முடிவெடுப்போம்' என்றரர் இளவரசர். மறுநாள் யாவரும் அனுராதபுரம் நோக்கிப் புறப்பட்டனர். காட்டுப் பாதை வழியாக, இராஜபாட்டை ஊடாக அனுராகதபுரம் நோக்கி குதிரையில் பயணித்தனர். அப்பொழுது வந்தியத்தேவன் தன்னிடம் ஒப்படைத்த பொறுப்பை நிறைவு படுத்திவிட்டேன். நான் பல வருடங்களாக இளவரசரை பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன்! அதுவும் நிறைவேறிவிட்டது. இந்தப் பயணம் எத்தனை ஆனந்தமாக இருக்கிறது. இப்படி என் இல் வாழ்க்கைப் பயணமும் ஆனந்தமாக இருந்து விடவேண்டும். என்று எண்ணியபடி, இவர் என்ன விசித்திரமான இளவரசர் திடீர் என்று என்னைத் தாக்கினார் இது தான் இவர் போர் முறையோ? தான் வெற்றி கொண்ட நாட்டு மக்களையும் எப்படி வசீகரித்து வைத்து பாதுகாக்கிறார். போர் நடந்த நாடுகளில் அவலக்குரல் தான் ஒலித்துக் கொண்டிருக்கும். ஆனால் இங்கு மக்கள் முகங்கள் மலர்ந்து, தத்தம் வேலைகளைப் பார்ப்பதில் பரபரப்பாக இருக்கிறார்கள். அருள்மொழ்வர்மர் தனி ரகம் தான்! என்று வந்தியத்தேவன் எண்ணிக் கொண்டிருந்தான். அவன் கற்பனையில் மிதந்து கொண்டு சென்றுகொண்டிருந்தான். அவன் கண்களிற்கு திடீரெனப் பல கோபுரங்களும், ஸ்துாபிகளும், மண்டபச் சிகரங்களும் கம்பீரமாக நிற்கும் காட்சி தென்பட, 'நாம் எங்கே வந்திருக்கிறோம்?' என்று கேட்டான். அதற்கு இளவரசர், 'இது அனுராதபரம் சிங்கள வரலாற்று நூலான மகாவம்சத்தின் படி, விஜயன் என்ற இளவரசன் இலங்கை வந்த போது, அவனுடன் வந்த எழுநூறு தோழர்களில் ஒருவன் அனுராத என்பவனால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு குடியேற்றமாகும். இது அனுராத கிராமம் என் அழைக்கப்பட்டது. பின்பு பண்டுகாபயன் என்ற அரசன் அனுராதபுரமாக மாற்றி, தன் தலைநகராகக் கொண்டான் என்கிறார்கள். இது தான் இலங்கையின் முதல் தலை நகரம். இன்று இங்கு ஒரு திருவிழா! அதைப் பார்ப்பதறகாக உங்களை அழைத்து வந்தேன்' என்றபடி, இலங்கை சக்கரவர்த்தி மகாசேனனின் மணடப உச்சியின் மாடத்திற்கு அழைத்துச் சென்றார் இளவரசர். அங்கு நின்று 'தாகபா ஸ்துாபம்' என்ற கட்டிடத்தைச் சுட்டிக்காட்டி,'இது புத்த பெருமானின் திருமேனியின் துகள்களை அடியில் வைத்து எழுப்பிய ஸ்துாபம்' என்றார்.

அப்பொழுது வந்தியத்தேவன், 'இது என்ன ஏதோ சனத்திரள் கோலாகலமாக இருக்கிறதே! முக பட்டயங்களினால் அலங்கரிக்கப்பட்ட முப்பது யானைகள். அதில் நடுநாயகமாக இருக்கும் யானை மிகவும் கம்பீரமாக, சிறந்த அலங்காரத்துடன் உள்ளது. அதன் முதுகில் நவரத்தினம் இழைத்த தங்கப் பெட்டி ஒன்று. அதற்கு ஒரு தங்கக் குடையும் பிடிக்கப்பட்டிருக்கிறது. புத்தபிக்குகள் யானைகளின் மேல் அமர்ந்து இருந்து வெண் சாமரங்களை வீசிக்கொண்டு இருக்கிறார்கள். பின்னால் விசித்திரமான ஆடை, ஆபரணம் அணிந்து பலர் ஆட்டம் ஆடுகிறார்கள். பல வாத்திய முழக்கம், எண்ணற்ற தீப ஒளி இது என்ன கொண்டாட்டம்' என்று இளவரசரரை வினவினான். அதற்கு இளவரசர், 'இந்த திருவிழாவின் பெயர் 'பெரஹெராத் திருவிழா' நட்பின் நிமித்தம் இலங்கை மன்னன் கஜபாகு மன்னன் சேரன் செங்குட்டுவனிடம் சென்றான். அங்கு கண்ணகி என்னும் பத்தினி தெய்வத்திற்கு விழா நடத்தப்பட்டது. அப்பொழுது கஜபாகுவும் கலந்து கொண்டான். பின்னர் ஒரு சமயம் சேரன் செங்குட்டுவ மன்னம் இலங்கை வந்தான். அப்போது தமிழகத்தின் தெய்வங்களாகிய சிவபெருமான், திருமால், கார்த்திகேயன், பத்தினி தெய்வம் என நான்கு தெய்வங்களிற்கும் ஒரே நேரத்தில் திருவிழா நடத்தினான். இந்த திருவிழாவின் போது மக்கள் குதுாகலித்தனர். இதனால் ஆண்டு தோறும் இந்த விழாவை நடத்த தீர்மானித்தான். இங்கு புத்த பெருமானுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது இத் திருவிழா மிகப் பெரிய திருவிழாவாக ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. நடுநாயகமாக வரும் யானையின் மேல் உள்ள பெட்டியில் புத்த பெருமானின் பல்லை பூட்டி வைத்திருக்கிறார்கள். மற்றைய தெய்வங்களின் ஆபரணங்களைக் கொண்டு வருகிறார்கள்' என்றார் இளவரசர். இன்று நடக்கும் பெரஹெராத் திருவிழாவில் தமிழகத் தெய்வங்களிற்கு இடமேயில்லை தமிழர்களின் பூர்வீகம் இப்பொழுது சிங்களப் பூர்வீகமாக மாறியுள்ளது. சிவபக்தன் இராவணனும் சிங்கள் மன்னன் ஆகிவிட்டான். தமிழர்கள் பலர் வெளிநாட்டு பிரஜையாகி விட்டனர். பெரஹெரா திருவிழா பார்த்துவிட்டு இறங்கி வீதியோரம் வந்து ஒரு தடாகத்தின் அருகே நின்றனர். அப்பொழுது பிக்கு ஒருவர் அங்கு வந்தார். இளவரசரைப் பார்த்து, 'வருக! வருக! தங்கள் வரவை எண்ணி வை துல்ய பிக்கு சங்கம் காத்திருக்கிறது. மகா தேரர் குருவும் விஜயம் செய்திருக்கிறார். குறிப்பிட்ட நேரம் தாங்கள் வந்து சேர்ந்தது பற்றி என் உள்ளம் உவகை கொண்டு நன்றி சொல்கிறது' என்றார். இளவரசரோ, 'என்னில் பல குறைகள் இருப்பினும் என்றும் வாக்குறுதி தவறியதில்லை' என்றார். பிக்கு, 'இவர்கள் யார்? உங்களுக்கு பூரண நம்பிக்கை உடையவர்கள் என்றால் அழைத்து வாருங்கள்' என்று தடாகத்தின் வாயிலிற்கு சென்றார். இவர்களும் பிக்குவை பின் தொடர்ந்தனர். எல்லோரும் உள்ளே நுழைந்ததும் வாயிற் கதவு சாத்தப்பட்டது. ஒரு குறுகிய சுரங்கப் பாதை வழியாக எல்லோரும் சென்றார்கள். அது நீண்ட பாதையாக சென்று, இறுதியில் ஒரு கருங்கல் மண்டபத்தை அடைந்தது. அங்கு பல பிக்குகள் கூடியிருந்தனர். அவர்கள் மத்தியில் மகாதேரர் நடுநாயகமாக வீற்றிருந்தார். அவரின் எதிரே ஒரு சிங்காசனம் காணப்பட்டது. அதன் அருகில் உள்ள பீடத்தில் தங்க மணிமகுடமும், உடைவாளும், செங்கோலும் காணப்பட்டது. தீபங்கள் எரிந்த அந்த மண்டபத்திற்குள் இளவரசர் நுழைந்ததும், புத்தர் வாழ்க! தர்மம் வாழ்க! சங்கம் வாழ்க! என்று கோஷித்தனர். இளவரசரும் மகா தேரோ குருவின் பக்கம் சென்று வணங்கிய பின் குருவை அமர வைத்து, பின் தானும் அமர்ந்தார். மகா குரு இளவரசரின் நற் புதிய குணங்களைப் பற்றியும், சிறந்த படைகளைப் பற்றியும் கூறி, அவர் புத்த மதத்திற்கு ஆற்றும் தொண்டைப் பற்றியும் புகழ்ந்து பாராட்டி நன்றி கூறியதுடன், 'ஆதி தொட்டு எம் நாட்டிற்கு படையெடுத்த உங்கள் நாட்டவரும், இந்த நாட்டு மன்னர்களும் பல அட்டூழியங்களைச் செய்து, நாடு பாழாகக் கிடக்கிறது. இராவணன் ஆண்ட காலத்தில் மக்கள் எத்தனை மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்! அவனோடு அதுவும் அழிந்து விட்டது. இலங்கை ராஜ வம்சம் மாறவேண்டும் என்பது தேரர்களின் கட்டளை அது நடந்தே தீரும். கடைசியாக முடி சூடிய மன்னன் மகிந்தன் தன் உரிமையை இழந்து விட்டான். அதனால் புதிய மன்னனைத் தேரந்தெடுக்கும் உரிமை இந்த சங்கத்திற்கு உண்டு. இந்த சங்கத்தினர் தங்களைத் தேர்ந்தெடுக்கவே மனம் உவந்து விரும்புகிறார்கள். தாங்கள் சம்மதம் சொன்னால் இன்று இரவே முடி சூடிக் கொள்ளலாம்' என்றார் மகாகுரு. அங்கு பெரும் அமைதி குடிகொண்டது. ஆனால் வந்தியத்தேவனின் உள்ளம் மட்டும் ஊஞ்சல் ஆடியது. தானே உடனடியாக இந்த முடியை அவருக்கு சூட்டிவிடலாமா என்று தோன்றியது.




'மகான்களே! உங்களை நமஸ்கரிக்கிறேன். என்னிடம் இத்தனை அன்பும், நம்பிக்கையும் வைத்து இந்த புராதன சிங்காசனத்தை அளிக்க பெருந்தன்மையாக முன்வந்தமைக்கு உங்களை போற்றி வணங்குகிறேன். சக்கரவர்த்தி சுந்தர சோழரின் கட்டளைக்கு உட்பட்டு இங்கு வந்தேன். அவரின் விருப்பத்தை அறியாது நான் யாதும் செய்ய முடியாது. இந்த நாட்டு பிரஜைகளின் சம்மதமின்றி ராஜ்சியத்தை வியாபிக்க யாருக்கும் உரிமையில்லை. நீங்களும், இந்த நாட்டு மக்களும் என்மேல் கொண்ட பிரியம் நான் அறிவேன்! இருந்தும் என் மனக்குரல் இதனை மறுக்கிறது. தயவு கூர்ந்து என்னை மன்னித்து விடுங்கள்' வந்தியத்தேவனுக்கு இவர் முடிவை பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. இருந்தும் மௌனமாக இருந்தான். மகா குரு மிகக் கவலையுடன், 'இளவரசரே இலங்கை சிம்மாசனத்தில் ஏற எவரிலும் அதிக தகுதிவாய்ந்தவர் தாங்களே! தங்கள் விருப்பமின்றி நாம் எதையும் செய்ய முடியாது. ஓராண்டு அவகாசம் எடுத்துக் கொண்டு முடிவை சாதகமாகத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்' என்றார்.

பின்னர் இளவரசரும், ஆழ்வார்க்கடியானும், வந்தியத்தேவனும் புறப்பட்டு அனுராதபுரத்து வீதியில் நிலா வெளிச்சத்தில் இறங்கி நடந்து கொண்டிருந்தனர். ஒரு பழைய மாளிகையின் சமீபமாக வந்துகொணடிருக்கையில் வீதியின் எதிரே ஒரு பெண் கையசைத்து இப்படி வருமாறு அழைத்தாள். இளவரசர் செல்ல வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் தொடர்ந்தனர். திடீரென்று ஏதோ இடிந்து விழும் சத்தம் கேட்டு மூவரும் திரும்பிப் பார்த்தனர். தாங்கள் கடந்த அந்தப்பாதையில் இருந்த பழைய அரண்மனை முகப்பு இடிந்து விழுந்ததைக் கண்டனர். 'இந்தப் பெண் அழைத்திருக்கா விட்டால் நாம் மடிந்திருப்போம்' என்று சொல்லிக் கொண்டு, இடிந்த மாளிகையை நோக்கினர். அங்கு இருவர் நின்றுகொண்டிருந்தார்கள். இது இவர்கள் சதி என்று தெரிந்து கொண்டனர். வந்தியத்தேவன் அந்தப் பெண்ணைப் பார்த்து வியந்து போனான். தான் தஞ்சாவூரில் கண்ட பழுவூர் இளவரசி இங்கு இந்த அனுராதபுர வீதியில் எப்படி வந்தாள்! இந்த இருட்டில் இவள் ஏன் இங்கு நின்று கொண்டிருக்கிறாள்! என்று அவள் நின்ற திசையில் போனான். அப் பெண் திடீரென்று மறைந்து விட்டாள்! இளவரசர் விரைந்து சென்ற வந்தியத்தேவனை நிறுத்திவிட்டார். 'இந்தப் பெண் யார் என்று எண்ணுகிறீர்?' என்று கேட்க, 'பெரிய பழுவேட்டரையரின் இளைய ராணி போல் இருக்கிறது! அவளின் முகச் சாயல் உண்டு' என்றான். அப்பொழுது ஆழ்வார்க்கடியான், 'இளவரசே அந்தப் பெண் என்ன சொன்னாள்? என்னை தேடி இங்கு இருவர் வந்திருக்கிறார்களா?' என்றார். 'ஆமாம் பாத்திபேந்தனுடன் இருவர் வந்திருக்கிறார்கள். இங்கும் அவர்களைப் பார்த்தேன்' என்றான் ஆழ்வார்க்கடியான். பின்னர் மூவரும் மகாசேன சக்கரவர்த்தியின் பாழடைந்த மாளிகையில் கட்டிலில் துாங்க ஆயத்தமானார்கள். அப்பொழுது 'அந்தப் பெண் யார் என்று தெரியாமல் என்னால் துாங்க முடியவில்லை' என்றான் வந்தியத்தேவன். இளவரசர், 'சரி எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன்' என்றார். 'நான் சிறுவனாக இருந்த பொழுது என் பெற்றோருடன் படகில் போயக் கொண்டிருந்தேன். அப்பொது தவறி காவேரி நதியில் விழுந்து விட்டேன். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது என்னால் மீண்டு வரமுடியாது வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டேன். என் பெற்றோரும், தமையனும், தமக்கையும் எப்படித் துடித்திருப்பார்கள் என்று ஏங்கினேன்! அந்தத் தருணம் இரு கைகள் என்னை வாரி எடுத்துக்கொண்டது. அந்தக் கைகளின் முகம்தான் அவருடைய முகம் என்னால் மறக்க முடியாத முகம்! எல்லோரும் காவேரி அம்மன் தான் என்னைக் காப்பாற்றினாள்' என்றனர்.

*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

---

# மீட்பர் கிறிஸ்து சபை

## Redeemer Christ Assembly

"இயேசு சுகமளிக்குகிறார்" ஜெபக் கூட்டம்
ஐப்பசி 23 சனிக்கிழமை - மாலை 7:30

**Zoom Meeting:**

**Zoom ID: 581 801 8870**
**Pass Code: 8weUp2**



அல்பிரட் செருபிம்
தேவ ஊழியர்

அனைவரையும் பங்குபற்ற அன்புடன் அழைக்கின்றோம். கூட்டத்தில் இணைந்து தேவ ஆசியை பெற்று மகிழ வரவேற்கின்றோம்.

என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.
– எரேமியா 33: 3

ஜெப தேவைகள் இருப்பின் தொடர்புகளுக்கு: (647) 271-7645



# NUCLEUS UNIVERSITY

## SCHOOL OF MEDICINE

- 4-Year MD Program for Undergrad
- 5-Year MD Program for High School Grads
- Clinicals conducted at USA teaching hospitals
- Pre-Medical Classes conducted in Brampton
- Graduates can write US & Canadian Licencing Exams

## SCHOOL OF DENTISTRY

- 4-year DDS Program for Undergrads
- 5-Year DDS Program for High School Grads
- Doctor of Dental Surgery Program conducted in Aruba
- Pre-Dental Classes conducted in Brampton
- Graduates can write US & Canadian Licencing Exams

- Canadian Owned University in one of the safest Caribbean country of Aruba
- Become a practicing Medical Doctor or Dentist in Canada or USA
- Within 5 years for High School graduates or 4 years for University undergraduates
- Pre-medicine courses can be completed in Brampton campus for high school graduates.
- Affordable tuition fees, scholarships available to outstanding students.
- Clinical training at Johns Hopkins affiliated hospitals in the USA

**For more information contact admissions office at: (416) 910-8750**

**தமிழில் உரையாட அழைக்கவும், Dr. Balachandar: (416) 545-7080**

**NUSOM.ORG**

# இவ்வார ராசிபலன்

**22-10-2021 வெள்ளி தொடக்கம் 28-10-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** மனமகிழ்ச்சி அதிகரிக்கும் வாரம். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவு அதிகரிக்கும். ஞாபக மறதி ஏற்படும் வாரம். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். புதிய நட்பு உருவாகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். வெளியூர் பயணம் உண்டு. பிள்ளைகள் வழியில் செலவு அதிகரிக்கும். வம்புதும்புகள் ஒழியும். மெத்தனப் போக்கு விலகும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கௌரவம் உயரும். விருந்தினர் வருகை உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். மனோ தைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. இடமாற்றம் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. நற்செய்தி நாடி வரும். பொறாமை விலகும். புதிய பொருள் சேரும். வழக்குகள் திருப்பம் தரும். செய்தொழில் நன்மை தரும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். நிதி நிறுவனம் லாபம் தரும். வாகன யோகம் உண்டு. இனிய சம்பவம் அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வடிவுடை அம்மன், அதிர்ஷ்ட எண்: 2,4,8,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும் வாரம். புதிய பொருள் சேரும். காலணிகள் காணாமல் போகும். உடல் சோர்வு ஏற்படும். கடன் பிரச்சனை தீரும். கல்வியில் தடை ஏற்படும். விளையாட்டு சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மன அமைதி கூடும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பான செய்திகள் வரும். உடல் உபாதைகள் ஏற்படும். அதிருப்தி அதிகரிக்கும். போட்டிகள் உருவாகி மறையும். புத்திர வழியில் கவலை ஏற்படும். பணியில் நிம்மதி குறையும். திடீர் செலவு உண்டாகும். பயணம் தடைப்படும். உத்தியோக மாற்றம் உண்டு. மருத்துவச் செலவு உண்டு. கால்நடைகளால் லாபம் உண்டு. ஆடம்பர சுகங்கள் கூடும். உத்தியோக மாற்றம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். போதிய வரவு பெருகும். வீண்வம்பு ஓடி மறையும். மேலதிகாரியின் ஆதரவு உண்டு. தனவரவில் தாமதம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. கலையார்வம் கூடும். விவசாயம் கவனம் தேவை. வருமானவரி தொல்லை ஏற்பட்டு விலகும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 1,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,R




**மிதுனம்:** புத்திரயோகம் கிடைக்கும் வாரம். மறைமுக எதிர்ப்புகள் விலகும் வாரம். துணிவோடு செயல்படுவீர்கள். தனவரவு உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. குடும்ப கௌரவம் உயரும். சச்சரவு அகலும். உத்தியோக உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். வாகன மாற்றம் உண்டு. கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். அரசு வழி ஆதாயம் உண்டு. மற்றோரின் வாழ்த்துக் கிட்டும். மன அமைதி கிட்டும். எதிர்பார்த்த ஏற்றம் கிட்டும். கேட்ட கடன் கிட்டும். காரிய அனுகூலம் கிட்டும். கலைத்தொழில் உயர்வு கிட்டும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். மனதெளிவு கிட்டும். சொத்துக்கள் சேர்க்கையுண்டு. வியாபாரம் லாபம் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. நிர்வாக அலைச்சல் கூடும். உடல்நலத்தில் அக்கறை தேவை. வாய் பேச்சில் நிதானம் தேவை. வாழ்த்துக்கள் வந்து சேரும். வறுமை நிலை மாறும். பெருமைகள் கூடி வரும். திறமைகள் அதிகரிக்கும். திண்டாட்டங்கள் குறையும். கொடுக்கல் வாங்கலால் நன்மை உண்டு. ஆரோக்கிய அபிவிருத்தி அடையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கஜமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,8,4,6
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,A




**கடகம்:** பூமியால் லாபம் உண்டு. விவசாயம் கை கொடுக்கும் வாரம். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்த தொழில் அமையும். தொழிலில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். வியாபார மந்த நிலை காணப்படும். பணிச்சுமைகள் குறையும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடி வரும். மனைவியால் ஆறுதல் உண்டு. எதிரிகள் தொல்லை உதயமாகும். வழக்குகள் சாதகமாகும். கல்விக்கடன் வசூலாகும். பயணம் நன்மை தரும். அளவான பேச்சு நன்மை தரும். கடன் உபத்திரவம் குறையும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய நட்பு தொல்லைத் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். பங்குச்சந்தை மாற்றம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். உடல் ஆரோக்கியம் குறையும். உறவால் பண விரயம் ஏற்படும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். எதிர்ப்புகள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 3,5,9,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,W




**சிம்மம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். எதார்த்தமாக செயல்படவும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. வீண்வம்பு உருவாகும். விளையாட்டுத்துறை லாபம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். வீடு, மனை யோகம் உண்டு. புதிய முதலீடு லாபம் தரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். புதிய தொழில் அமையும். வாய்ப்புக்கள் தேடி வரும். வாகன மாற்றம் ஏற்படும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்திகள் வரும். வில்லங்கம் தீரும். வீண் செலவு கூடும். பண நெருக்கடி தீரும். பணி ஆர்வம் கூடும். பாதகம் விலகும். சந்தோஷம் அதிகரிக்கும். சகோதர உறவு பலப்படும். சாதனைகள் ஓங்கும். காதலில் பிரிவு ஏற்படும். குடும்பம் மனநிறைவு தரும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். சொத்துக்கள் சேரும். நல்லோர்கள் நட்பு கிடைக்கும். போட்டிகள் மறையும். முயற்சிகள் பலன் தரும். கர்மவினைகள் அகலும். காரியம் கை கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 2,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,T




**கன்னி:** எதிரிகள் உதிரியாகும் வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்படும். உத்தியோகம் திருப்தி தரும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில் போட்டி மறையும். எதிர்பாராத நன்மை கிட்டும். தொழில் வளர்ச்சி உண்டு. கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். குடும்ப நிர்வாகம் சீராகும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். புகழ் கூடும். பெருமைகள் தேடி வரும். அரசு வகை ஆதாயம் கிட்டும். கடன் வாங்க நேரிடும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். உஷ்ண நோய் ஏற்படும். உறவினர்களால் பாதகம் உண்டு. இழுபறி நிலை மாறும். மனவேதனை அதிகரிக்கும். சுபகாரியம் தடைப்படும். பழிச்சொல் தேடி வரும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். வரவுகள் பெருகும். அலைச்சல் அசதி ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். தாய் நலனில் அக்கறை தேவை. ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன் பிறந்தோரால் உதவி உண்டு. முக்கியமான எண்ணம் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். கால்நடைகளால் நன்மை உண்டு. வருமானம் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 9,1,8,3
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,A


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**துலாம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும் வாரம். பயணத்தால் அனுகூலம் உண்டு. புத்தாடை சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நண்பர்கள் சேர்க்கையுண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. நில் புலன் சேர்க்கையுண்டு. கடன் தீர்வு உண்டு. காதலில் வெற்றியுண்டு. கடின உழைப்பு உண்டு. கணவன், மனைவி ஒற்றுமையுண்டு. கனவு பலிதம் உண்டு. வெளிநாட்டுப் பயணம் உண்டு. உறவினர்களால் நன்மையுண்டு. விருந்தினர் வருகையுண்டு. சொத்து சேர்க்கை உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்புண்டு. விளைச்சல் அதிகமாகும். விவசாயம் மேன்மையுண்டு. வெளியூர் பயணம் உண்டு. உத்தியோக வாய்ப்புண்டு. அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்தக் காரியம் தடைப்படும். எதிலும் நிதானம் தேவை. கலை ஈடுபாடு அதிகரிக்கும். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உறவினர் வருகை தொல்லை தரும். பேச்சில் நிதானம் தேவை. சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும். நோய் நொடிகள் அகலும். வழக்கு வெற்றி தரும். விபரீத எண்ணம் விலகும். நவகிரஹ அனுகிரஹம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஐங்கரன், அதிர்ஷ்ட எண்: 7,3,0,2
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,X




**விருச்சிகம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். குழப்பங்கள் நீங்கும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். விரக்திகள் மறையும். வீடு, மனை வில்லங்கம் ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். எதிர்பார்ப்புகள் உருவாகும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் வசூலாகும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். புதிய பொருள் சேரும். பூமியால் லாபம் அடைவீர்கள். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். திட்டங்கள் நிறைவேறும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். மின்சாரத்தில் கவனம் தேவை. செல்வாக்கு உயரும். அந்நியர் ஆதரவு கிட்டும். காதல் கசக்கும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். வாகன மாற்றம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குரு பகவான், அதிர்ஷ்ட எண்: 9,1,3,8
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,V




**தனுசு:** பிரபல்யம் உதயமாகக்கூடிய வாரம். பணவரவு உண்டு. பணிவு அவசியம். அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். உடல்நலனில் அக்கறை தேவை. வெகுமதிகள் சேரும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. கனவு பலிதமாகும். குடும்பத்தில் அன்யோன்யம் கூடும். கலைத்தொழிலில் கௌரவம் கூடும். விளையாட்டுத்துறை வெகுமானம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. எண்ணங்கள் ஏற்றம் தரும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். பாராட்டுக்கள் கூடும். வேலை பளு அதிகரிக்கும். புதிய முயற்சி பலன் அளிக்கும். குடும்ப சந்தோஷம் கூடும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலன் கூடும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாகும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். காரிய தாமதம் ஏற்படும். கடன் பிரச்சனை குறையும். கற்பனை ஆற்றல் பெருகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேர்க்கும். மனைவி வழி உறவால் லாபம் உண்டு. திடீர் கடன் ஏற்பட்டு மறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராம பிரான், அதிர்ஷ்ட எண்: 4,8,6,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,T




**மகரம்:** எதிரிகள் உதிரியாகக்கூடிய வாரம். சுபிட்ஷங்கள் பெருகும். வீண் விரயம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். உடல்சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. காதலில் மோதல் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. நண்பரால் செலவு உண்டு. உறவுகளால் நன்மையுண்டு. முடிவுகள் சாதகமாகும். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். உறவினர் வருகை உண்டு. கல்விச் செலவு ஏற்படும். வீண் வம்பு விலகும். வாய்ச்சொல் பலன் தரும். வருமானம் தடை உண்டு. வாகனச் செலவு உண்டு. பணியாட்களால் தொல்லை ஏற்படும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். கலைத்தொழில் திருப்பம் தரும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். மற்றவர் தொல்லை குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சஞ்சலம் மறையும். வீண் பழி அகலும். அரசியலில் புகழ் கூடும். பெருமைகள் பெருகும். திறமைகள் அதிகமாகும். ஐஸ்வர்யம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 2,4,3,8
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,S




**கும்பம்:** மனநிறைவு கிடைக்கும் பக்குவமான வாரம். பூர்வீக சொத்து வந்து சேரும். கடன் சுமை குறையும். கமிஷன் தொழில் கவனம் தேவை. ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கணவன், மனைவி கருத்து வேறுபாடு அகலும். உடன்பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். உடல்நலனில் அக்கறை தேவை. பிரச்சனைகள் குறையும். பற்றாக்குறை நீங்கும். பணவரவு உண்டு. நிதி நிலைமை சீராகும். தனவரவில் மேன்மை தரும். நினைவாற்றல் பெருகும். கலை ஆர்வம் கூடும். காதல் எண்ணம் நிறைவேறும். சகோதாரிகளால் சஞ்சலம் ஏற்பட்டு மறையும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். தாய் வழி உறவால் நன்மை உண்டு. பக்குவமான பேச்சு அவசியம். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். வெளியூர் பயணம் ஏற்படும். நல்லோர்கள் நட்பு கிட்டும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். இலக்கிய ஆர்வம் கூடும். இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்பு கிட்டும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,2,4,5
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Q




**மீனம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கக்கூடிய வாரம். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். உத்தியோக மாற்றம் ஏற்படும். பயணம் தடைப்படும். திடீர் செலவு உண்டாகும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திர வழியில் கவலைகள் ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். உடல் உபாதைகள் ஏற்படும். அதிருப்தி அதிகரிக்கும். அமைதியாக இருப்பது நல்லது. தாய், தந்தை உதவியுண்டு. வெற்றிகள் குவியும். போதிய வரவு பெருகும். குடும்பத்தின் மகிழ்ச்சி பெருகும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். உத்தியோக உயர்வு உண்டு. ஆடம்பர சுகங்கள் கூடும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. கால்நடைகளால் லாபம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் கூடும். மறைமுக தொல்லை நீங்கும். புண்ணியம் சேரும். தீர்த்த யாத்திரை உண்டு. காரியத்தடை அகலும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பழைய நட்பால் பண விரயம் உண்டு. வியாபாரம் திருப்தி தரும். விவசாயம் விளைச்சல் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,4,7,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,C

# 7ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் பிறப்பு:

29 - 11 - 1977

விண்ணிற்கு பறப்பு:

9 - 11 - 2014

திதி- 23-10-2021

# திருமதி. கேமலதா விக்னராஜ்

யாழ்ப்பாணம் புதுச் செம்மணி வீதி கல்வியங்காட்டை சேர்ந்த
நடராஜா சந்திரா - சந்திரா சிவலோஜினி தம்பதியரின் புதல்வியும்,
கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், கனடா அஜெக்ஸ் நகரை வதிவிடமாகவும் கொண்டிருந்த
திருமதி. கேமலதா விக்னராஜ் அவர்களின் 7ம் ஆண்டு நினைவஞ்சலி.

*அற்புதப் பிறவியாய் எமக்கு இறைவன் அளித்த வரம் அம்மா கேமா நீ
எம்மோடு வாழ்க்கைப் பயணத்தில் நடந்து வந்து
கூடப் பிறந்தவர்களுக்கு பிரியமான சகோதரியாய்
நாடி வந்த துணைக்கு நல்லதோர் துணைவியாய்
வந்துதித்த பிள்ளைச் செல்வங்களுக்கு அன்பான அன்னையாய்
உற்றார் உறவினர்க்கு ஏற்ற ஒரு தோழியாய்
முப்பத்தியேழு ஆண்டுகள் முழுமையாய் மிளிர்ந்தாய்*

*தித்திப்பாய் கடந்த உன் குடும்ப வாழ்வின் குத்துவிளக்காய் ஒளிர்ந்த நீ
திடீரென அன்று அணைந்தாய். நாம் அதிர்ந்தோம்
எம் குடும்பத்திற்கு ஒளியேற்றிய தீபம் அணைந்தது
அன்றிலிருந்து நாம் அனைவருமே இடைவிடாது அழுகின்றோம்
மாளிகை போன்ற உன் இல்லம் மங்கிப் போனது
கேளிக்கையும் கொண்டாட்டமும் மறைந்தும் மறந்ததுமாய்
காலை விடிந்து மாலை வந்து பின்னர் இருள் கவ்வ எம் வாழ்க்கை அவ்வாறே கழிகிறது தினமும்..
முற்றத்தின் பூமரங்கள் கூட ஒவ்வொரு வசந்தத்திலும்
உன் வருகைக்காக காத்துக் கிடக்கின்றன
நீ கால்பதித்து நடந்த புற்தரைகள் உன் பாதங்களின் மென்மைக்காய்
இதழ் விரித்து காத்திருக்க வெள்ளைப் பனி விழுந்து மூடுகின்றது*

*அன்பு மகளே கேமா நீ ஆசைப்பட்டதெல்லாம் அடைந்தாய்
ஆனால் நாமோ உன் மீது வைத்த பாசத்தை
நீயில்லா நாட்களிலும்நேசத்துடன் தொடர்கின்றோம்.
நீ வாழும் உலகத்தில் நிம்மதியாய் இருப்பாய் நீ
உன் இருப்பிடத்தில் என்றும் போல் அழகுடனே திகழவேண்டும்
எம்மை மறவாத அன்புடனே உன் இருப்பு தொடரவேண்டும்
பூவுலகில் நீ இன்றிப் போக எம் நிம்மதியே தொலைந்தாலும்
தாவியே வருவாய் ஒரு நாள் எம் கரங்களில் தவழ மகிழ்வோம்*

உன் நினைவால் வாடும் பாசமுள்ள அப்பா, அம்மா, அன்புக் கணவர், பிள்ளைகள்,
சகோதர, சகோதரரிகள், மைத்துனர் மற்றும் மருமக்கள்

தொடர்புகளுக்கு: (647) 335-5841, (416) 754-7485








# உதயன்




உதயம் 1333 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 22, 2021

## ஸ்காபுறோவிலும் மொன்றியாலிலும் 'உதயன்' வெள்ளி விழாவும் 'நண்பன்' விருது விழாவும்

### முறையே அதிபர் கனகசபாபதி அவர்கள், இசைக் கலைஞர் வர்ண ராமேஸ்வரன் ஆகியோரின் பெயர் கொண்ட அரங்குகளில் இடம்பெறுகின்றன




எதிர்வரும் ஒக்டோபர் 30ம் திகதி ஸ்காபுறோவிலும் நவம்பர் 13ம் திகதி மொன்றியாலிலும் 'உதயன்' வெள்ளி விழாவும் 'நண்பன்' விருது விழாவும் நடைபெறவுள்ளன.





மேற்படி இரண்டு விழாக்களும், முறையே அதிபர் கனகசபாபதி அவர்கள். இசைக் கலைஞர் வர்ண ராமேஸ்வரன் ஆகியோரின் பெயர் கொண்ட அரங்குகளில் இடம்பெறுகின்றன என்ற தகவலையும் விழா அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர். மேலதிக பல்சுவை கலை நிகழ்ச்சிகளும் விருது வழங்கலும் இரு மேடைகளிலும் நடைபெறவுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. விபரங்களுக்கு 416 732 1608 அல்லுத 514 684 3604 ஆகிய இலக்கங்களை அழைக்கவும் (உள்ளே விளம்பரங்கள் காணப்படுகின்றன)

## இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டோர் நினைவாக யாழ்ப்பாண வைத்தியசாலையில் நினைவுத்தூபி



இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவாக விரைவில் நினைவுத்தூபி அமைக்கப்படும் என யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவு தினம் நேற்று வியாழக்கிழமை அனுஸ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

*(தொடர்ச்சி உள்ளே 6ம் பக்கத்தில்)*

## சீக்கியரான முன்னாள் மத்திய அமைச்சர் அமர்ஜீத் சோஹி எட்மண்டன் மாநகரத்தின் மேயரானார்




கனடாவின் அல்பர்ட்டா மாகாணத்தின் தலைநகரான எட்மண்டன் நகரத்தின் புதிய மேயராக இந்திய வம்சாவளி கனடிய பிரஜையான அமர்ஜீத் சோஹி தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற மகிழ்ச்சியான செய்தி வெளியாகியுள்ளது. இவர் சீக்கிய இனத்தைச் சேர்ந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. *(தொடர்ச்சி உள்ளே 20ம் பக்கத்தில்)*

## தியானா இளங்கீரன் அன்னை சரஸ்வதியைத் துதித்து பாடியுள்ள 'கோடி தரம் பாடும் வரம் தேவி தருவாளே...' பக்திப் பாடல்



கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர் இளங்கீரன்- ரோகினி தம்பதியினரின் புதல்வி இசைச் செல்வி தியானா இளங்கீரன் அன்னை சரஸ்வதியைத் துதித்து பாடியுள்ள "கோடி தரம் பாடும் வரம் தேவி தருவாளே..." பக்திப் பாடல் நேற்றைய தினம் கனடா- ஸ்காபுறோ ஸ்ரீ சந்திர மௌலிஸ்வரர் ஆலய மண்டபத்தில் வெளியிடப்பெற்றது. *(தொடர்ச்சி உள்ளே 20ம் பக்கத்தில்)*

## யாழப்பாண மேயர் மணிவண்ணன் மண வாழ்க்கையில் புகுந்தார்



யாழ்ப்பாண மாநகரசபையின் தற்போதைய மேயரும் சட்டத்தரணியுமான மணிவண்ணன் அவர்கள் மணவாழ்க்கையில் புகுந்தார். யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தகர் ஜெயகாந்தன்- சுதா தம்பதிகளின் புதல்வியான அபிராமியைக் கரம் பிடித்துள்ளார் மணிவண்ணன் அவர்கள். இணையரின் திருமணப் பதிவு கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

**(Photo: Sritharan Thavarajah -Canada)**



